# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி ஆடி-17

1-8-1981 50 காசு.









# பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா






சென்னை

15-7-1981

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

—திருவள்ளுவர்

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்.

—பாரதியார்.

உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

—ஔவையார்.

தார்நடக்கும் படிநடக்கும்
காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனிற்புகழ்சால்
இயலிசைநா டகம்நடக்கும்
சீர்நடக்கும் திறன்நடக்கும்
திருவறத்தின் செயல்நடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும்
பசிநடக்க மாட்டாதே

—கம்பர்.





வயல்களிலே கதிர் குலுங்கிடின் சர்க்கார் அலுவலகங்களில் மகிழ்ச்சி துள்ளும்: தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து நீதியும் நிம்மதியும் கிடைத்து உற்பத்தி பெருகிடின் நாட்டு நிலை உயர்ந்திடும். அங்காடியிலுள்ளோர் கொள்வன, கொடுப்பன என்பவை நேர்மையான அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும் என்று இருந்திடின், அகவிலையும் பதுக்கலும் அழிந்துவிடும். பொதுமக்கள் வாழ்வு சீர்படும்.

தரிசாகக் கிடந்த இடத்தை விளைநிலமாக்கிட வியர்வை சிந்துவோர், மக்கள் வசதிக்காகப் பாடுபடுவோர், உற்பத்தி, விநியோகம் இவற்றை நேர்மையாகச் செய்வோர் என் நண்பர்கள், வணக்கத்துக்குரியவர்கள்.

—பேரறிஞர் அண்ணா


# தமிழரசு

மலர் 12 இதழ் 3

1-8-1981

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி ஆடி—17

# வளரும் தமிழகத்தில் வளமான வாழ்வு!

வளரும் தமிழகத்தில், வளமான வாழ்வு ஏற்பட வேண்டும்; நல்வாழ்வுக்கு ஏற்றபடி, வளங்கள் பெருக வேண்டும்; வளங்களுக்கு ஏற்றபடி, வசதிகள் மிக வேண்டும். வசதிகள் மிகுவதற்கு ஏற்றபடி, வாய்ப்புக்கள் உருவாக வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டுதான், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் சீரிய தலைமையின் கீழ், இயங்கி வருகின்ற தமிழக அரசு, அரும்பணிகள் பலவற்றையும் ஆற்றிவருகிறது.

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்'' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முழங்கினார். வளர்ந்து வரும் தமிழகத்திற்குத் தொன்றுதொட்டு சிந்தனைச் செல்வத்தை வாரிவாரி வழங்கி வருவது, செந்தமிழ்ச் செல்வமேயாகும். தமிழக மக்களின் அறிவை வளர்த்து, சிந்தனை அறிவைப் பெருக்கித் தமிழக மக்களுக்கு ஆற்றலைத் தந்து, செயலாற்றலை ஈந்து, தமிழக மக்கள் செய்பொருள்களைப் பெருக்கிக் கொள்ள, என்றென்றும் அடிப்படையாக இருந்து வரும் வளம், தமிழ்மொழியாகும். எனவேதான், எங்குந்தமிழ்—எதிலும் தமிழ்—என்றும் தமிழ் என்ற முறையில், இன்றைய தமிழக அரசு, முனைப்புள்ளத்தோடு பாடுபட்டு வருகிறது. அனைத்துலகத் தொடர்பைப் பெற-அறிவியலறிவை விரிவாக்கிக் கொள்ள—தொழில்நுட்ப அறிவை மேம்படுத்திக் கொள்ள, அகில உலக மொழியாக விளங்கும் ஆங்கில மொழி வளத்தின் துணையைப் பெறுவதிலும், தமிழக அரசு பேரார்வங் காட்டி வருகிறது.

வளமான வாழ்வைத் தமிழ்ப் பெருங்குடி மக்களுககு அளிக்க வேண்டும், என்ற குறிக்கோளின் அடிப்படையில்தான், இன்றைய தமிழக அரசு, தன்னால் இயன்ற அளவுக்குத் தன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள உரிமைகள் - அதிகாரங்கள் - நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைக் கொண்டு, ஆண்டுக்காண்டு, ஏற்ற திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றி வருவதில், ஆர்வங் காட்டி வருகிறது.

இந்தியா விடுதலை பெற்றதற்குப் பிறகு ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி, அவற்றை நிறைவேற்றுவதன் மூலமாக, இந்தியாவை வளப்படுத்துகின்ற முயற்சிதான், பெருமுயற்சியாக இருந்து வருகிறது. ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஐந்தாண்டுத் திட்டம், தமிழகம், வளர்ந்து வருகிறது என்பது மட்டுமல்லாமல், மக்களின் வளமும் வாழ்வும் ஓரளவுக்குப் பெருகி வருகின்றன என்றுதான் சொல்ல வேண்டும். 1947இல் இருந்த தமிழகத்தையும் இன்றுள்ள தமிழகத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால், எவ்வளவோ வகைகளில், எவ்வளவோ வழிகளில், எவ்வளவோ துறைகளில் தமிழகம் முன்னேற்றம் கண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். 5வது ஐந்தாண்டுத் திட்ட அளவு ரூ. 1122 கோடியாக இருக்க, 6வது ஐந்தாண்டுத் திட்ட அளவை ரூ. 3150 கோடியாக, இன்றைய தமிழக அரசு, மத்திய அரசின் உதவியுடன் அமைத்திருக்கிறது. 5வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மொத்தத் திட்டத்தில், தமிழகம் 1.2 சதவிகித அளவைப் பெற்றது என்றால், இன்றைய நிலையில் அதாவது, 6வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், மொத்தத் திட்ட ஒதுக்கீட்டில், 3.5 சதவிகிதம் பெற்றிருக்கிறது. இது நல்ல வளர்ச்சியின் அறிகுறியாகும்.

ஆண்டுதோறும், தமிழக அரசின் வருமானத்தைப் பெருக்கித் தமிழக மக்களுக்கு வளமான வாழ்வை அளிப்பதில், தமிழக அரசு நல்ல முன்னேற்றத்தைக் காட்டி வருகிறது. தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்னால், அதாவது, 1975-76இல், பொதுக்கல்விக்கு ரூ. 141 கோடி செலவழிக்கப்பட்டது; இன்று சுமார் ரூ. 265 கோடி செலவு செய்யப்படுகிறது. மருத்துவம் - பொதுநலத்துறையின் மூலம் முன்பு ரூ. 56 கோடி செலவழிக்கப்பட்டது; மக்களுக்கு வளமான வாழ்வு அளிக்க, இன்று சுமார் ரூ. 130 கோடி செலவு செய்யப்படுகிறது. மக்களின் பாதுகாப்புப் பணிகளுக்காக முன்பு ரூ. 26 கோடி செலவழிக்கப்பட்டது; இன்று சுமார் ரூ. 60 கோடி செலவு செய்யப்படுகிறது. சமூக நல்வாழ்வுக்காக, முன்பு ரூ. 36 கோடி செலவழிக்கப்பட்டது; இன்று ரூ. 55 கோடி செலவு செய்யப்படுகிறது. வேளாண்மை வளம் பெற, முன்பு ரூ. 23 கோடி செலவழிக்கப்பட்டது ; இன்று ரூ. 54 கோடி செலவு செய்யப்படுகிறது. ஆதிதிராவிடர், பிற்பட்டோர் வளர்ச்சிக்கு, முன்பு ரூ. 33 கோடி செலவழிக்கப்பட்டது; இப்பொழுது ரூ. 54 கோடி செலவு செய்யப்படுகிறது. சாலைகள் - பாலங்கள் ஆகியவற்றின் மேம்பாட்டுக்கு, முன்பு ரூ. 23 கோடி செலவழிக்கப்பட்டது ; இப்பொழுது ரூ. 67 கோடி செலவழிக்கப்படுகிறது. இப்படியாக, ஒவ்வொரு

துறையிலும், வளமான வாழ்வுகாண, இன்றைய தமிழக அரசு, திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

தமிழகத்தில், உழவுத் தொழில் மிக முக்கியமான தொழில், 100-க்கு 70 மக்கள், உழவுத் தொழிலில்தான், ஈடுபட்டிருக்கிறார்கள். உழவுத் தொழில் வாழ்ந்தால்தான், மற்றைய தொழில்கள் வாழ முடியும்; உழவுத் தொழில் வளம் பெற்றால்தான், ஏனைய தொழில்கள் வளம் பெறமுடியும் என்பதை, இன்றைய தமிழக அரசு, நன்கு உணர்ந்திருக்கிற காரணத்தால்தான், உழவர்களின் நலிவுகளை நீக்கவும், நலங்களைப் பெருக்கவும், மிக்க அக்கறைகாட்டி வருகிறது. பொதுவாக இயற்கையின் சீற்றங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட உழவர்களின் நலிவுகளையும், குறிப்பாக ஏழை எளியவர்களாக வாழும் சிறு உழவர்களின் நலிவுகளையும் போக்கும் வகையில், 1977 முதல் 1981 வரையில், சுமார் ரூ. 194 கோடி அளவுக்குக் கூட்டுறவுக் கடன்களையும் வட்டிகளையும் தள்ளுபடி செய்தும், தக்காவிக் கடன்களை நீக்கி



மாண்புமிகு நிதி அமைச்சர்

## நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன்

யும், நிலவரிகளைத் தள்ளுபடி செய்தும் சலுகைகள் அளித்து, இன்றைய தமிழக அரசு உழவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளித்து வந்திருக்கிறது.

வேளாண்மைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்தைப் பொறுத்து, ஒரு யூனிட்டுக்கான கட்டணத்தை, மேற்கு வங்காளம் 28 காசாகவும், உத்தரப் பிரதேசம் 27.5 காசாகவும் கருநாடகம் 24 காசாகவும், பீகார் 22.5 காசாகவும், அரியானா 22 காசாகவும், மகாராட்டிரம் 21.5 காசாகவும், ஆந்திரம் 21.5 காசாகவும், பஞ்சாப் 21 காசாகவும், இராஜஸ்தான் 21 காசாகவும் வசூல் செய்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், தமிழக உழவர்களின் வாழ்வு நலங்கருதி, இன்றைய தமிழக அரசு, பெரிய உழவர்களிடமிருந்து 14 காசையும், சிறிய உழவர்களிடமிருந்து 12 காசையும் மட்டுமே, வசூலிக்க விரும்புகிறது. தமிழகத்தில் ஒரு யூனிட் மின்சாரத்தின் உற்பத்திச் செலவு, சென்ற ஆண்டுக் கணககுபபடி, 42 காசு ஆகிறது. உழவர்களின் நலங்கருதித், தமிழக அரசு சுமார் 30 காசு இழப்பை, ஒவ்வொரு யூனிட் மின்சாரத்தைப் பொறுத்துத் தாங்கிக் கொள்கிறது.

1976-77-இல் தமிழகத்தில், நெல்-சோளம் - கம்பு - கேழ்வரகு போன்ற உணவுப் பொருள்களின் உற்பத்தி 67 இலட்சம் டன்களாக இருந்தன. 1981-82இல், பருவ மழைகள் முறைப்படி பெய்யும் நிலை ஏற்படுமேயானால், உணவுப் பொருள்களின் உற்பத்தி 89 இலட்சம் டன்களாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற சில ஆண்டுகளாகத், தமிழகம், உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல், பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் திறனையும் பெற்று வந்திருக்கிறது. இந்த ஆண்டு, எதிர்பாராத விதமாகப் பருவ மழைகள் குறைந்ததன் காரணமாகத், தமிழகம், வறட்சியைக் காணவேண்டிய நிலை ஏற்பட்டது. இது நிலையானதொரு நிலை அல்ல. இயற்கையின் இயல்பான ஒத்துழைப்பு ஏற்படும் நிலையில், தமிழகத்தின் உணவு வளம் அண்மைக்காலத்தில் ஆண்டுக்கு ஆண்டுபெருகி வந்திருப்பதைத் தெளிவாகக் காணலாம்.

உழவுத் தொழில் ஒரு நாட்டின் இன்றியமையாத் தேவையாக இருக்கிறது என்றாலும், நாட்டின் வளமான வாழ்வைப் பெருக்கப் பொறித் தொழில்கள்தாம், பெருந்துணை புரிந்து வருகின்றன. அமெரிக்கா, ஜெர்மனி, இரஷ்யா, பிரிட்டன், ஜப்பான் போன்ற நாடுகள், வளமான வாழ்வைப்பெற, பொறித் தொழில்கள் முக்கியமான காரணங்களாக இருந்து வருகின்றன. பொதுவார் துறை -தனியார் துறை-கூட்டுத்துறை - கூட்டுறவுத் துறை - குடிசைத் தொழில்துறை போன்ற பலவழிகளிலும் தொழில் முன்னேற்றங்காண, இந்தியா முயன்று வருகிறது. அந்த முயற்சியில், இன்றைய தமிழகம், இன்றைய, தமிழக அரசின் ஈடுபாட்டின் விளைவாக, முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது; மேலும் முக்கியமான முதன்மையான இடத்தைப் பெற முயன்று வருகிறது.

மத்திய அரசால் நடத்தப்படும்'ஆண்டுத் தொழில் வளர்ச்சி ஆய்வின்' (Annual Survey of Industries) முடிவுகளின்படி, உற்பத்திக் கூடுதல் மதிப்பின் அளவில், மகாராட்டிரம் முதல் இடத்தையும், மேற்கு வங்காளம் இரண்டாம் இடத்தையும், தமிழ்நாடு மூன்றாவது இடத்தையும் பெறுகின்றன.

இந்தியாவின் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India) 1978-79இல் எடுத்த கணக்குப்படி, தொழில் வளர்ச்சிக்கான உதவியைப் பெற்றவகையில், மகாராட்டிரம் ரூ. 181.81 கோடியையும், குசராத் ரூ. 123.49 கோடியையும், தமிழ்நாடு ரூ. 108.58 கோடியையும் மேற்கு வங்காளம் ரூ. 92.32 கோடியையும் பெற்றிருக்கின்றன. இந்த வகையில் தமிழகம் மூன்றாவது இடத்தில் நிற்கிறது.

தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அடிப்படையில், மகாராட்டிரம், குசராத், மேற்கு வங்காளம் ஆகியவற்றிற்கு அடுத்த நான்காவது இடத்தில், தமிழகம் இருக்கிறது.

**தொழில்களில் முதலீடு செய்யப்பட்ட அசையாச் சொத்துக்களின் அடிப்படையில், மகாராட்டிரம், குசராத், மேற்கு வங்காளம் ஆகியவற்றிற்கு அடுத்த நான்காவது இடத்தில், தமிழகம் அமைகிறது.**

தொழிலாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில், மகாராட்டிரம், மேற்கு வங்காளம் ஆகியவற்றிற்கு அடுத்த மூன்றாவது இடத்தில், தமிழகம் இருக்கிறது.

தொழிலாளர்களின் ஊதியத்தின் அடிப்படையில், மகாராட்டிரம், மேற்கு வங்காளம் ஆகியவற்றை அடுத்து மூன்றாவது இடத்தில் தமிழகம் நிற்கிறது.

தொழிற்சாலைகளில் போடப்பட்டுள்ள மொத்த மூலதனத்தின் அடிப்படையில், மகாராட்டிரம், மேற்கு வங்கம், குசராத் இவற்றை அடுத்து நான்காவது இடத்தைத் தமிழகம், பெற்றுள்ளது.

நிறுவனங்களின் மொத்த உற்பத்தியின் அடிப்படையில், மகாராட்டிரம், மேற்கு வங்காளம், குசராத் ஆகியவற்றை அடுத்து, நான்காவது இடத்தைத் தமிழகம் பெற்றுள்ளது.

இதுகாறும் சுட்டிக்காட்டப்பட்ட தொழில் வளர்ச்சி ஆய்விலிருந்து, தமிழகம், தென் மாநிலங்களில் முதலாவது இடத்தையும் அனைத்திந்திய அடிப்படையில், மூன்றாவது அல்லது நான்காவது இடத்தையும் பெற்றுள்ளது என்பது தெளிவாகும்.

1978-ஆம் ஆண்டு நிலவரப்படி பார்த்தால், மத்திய அரசு பீகார் மாநிலத்தில் ரூ. 2815 கோடியையும், மத்திய பிரதேசத்தில் ரூ.1794 கோடியையும், மேற்கு வங்காளத்தில் ரூ. 1059 கோடியையும், மகாராட்டிரத்தில் ரூ. 909 கோடியையும் தொழில்களில் முதலீடு செய்திருப்பதைப் போன்று, தமிழகத்திலும் முதலீடு செய்திருக்குமேயானால், தமிழகம் இன்னும் நல்ல வளமான முன்னேற்றத்தைக் காட்டியிருக்க முடியும். ஆனால், மத்திய அரசு தமிழகத்தில் ரூ. 563 கோடியைத்தான் தொழில்களில் முதலீடு செய்தது.

**மத்திய அமைச்சர் பாராட்டு**

**"தமிழ்நாட்டில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் நன்றாகச் செயல்படுகிறது. அந்தத் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் நன்றாகச் செயல்படுத்தி வருகிறார். அதற்காக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களைப் பாராட்டுகிறேன். அவர் மூலமாகத் தமிழக தொழிலாளர்களுக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்"**

**— மாண்புமிகு மத்திய தொழிலாளர் நல அமைச்சர் திரு. என். டி. திவாரி அவர்கள்.**

1977-லிருந்து 1980வரை கணக்கிட்டுப் பார்த்தால், தொழில் வளர்ச்சிக்குத், தமிழக அரசு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் உதவி செய்திருப்பது ஆண்டுக்கு ஆண்டு, சராசரி, 9 சதவிகிதம் உயர்ந்து வந்துள்ளது.

1976-க்கும் 1979-க்கும் இடையில், தொழில் உற்பத்தி, தமிழகத்தில், ஆண்டுக்கு ஆண்டு, சராசரி, 8.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. இது அனைத்திந்திய அளவில் 7 சதவிகிதம்தான்.

தொழில் உற்பத்திக் குறி எண்ணைப் (Index number of industrial production) பொறுத்த வரையில் 1979 எண்ணோடு 1980 எண்ணை ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழகம் 10 சதவிகித உயர்வைக் காட்டியிருக்கிறது. இது அனைத்திந்திய அளவில் 1.2 சதவிகிதந்தான்.

சராசரி நபர் வருமானத்தைப்பொறுத்து 1976-77-க்கும் 1978-79-க்கும் இடையில் அகில இந்திய வளர்ச்சி, ஆண்டுக்கு ஆண்டு, 3 சதவிகிதமாக இருக்க, தமிழக வளர்ச்சி 9.5 சதவிகிதமாக அமைந்திருக்கிறது.

5வது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், நபர்வாரித் திட்ட அளவில் (Per capita plan expenditure) தமிழகம் 11வது இடத்தில் இருந்தது. 6-வது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில், தமிழகம் 9வது இடத்தைப் பெற்றிருந்தது. புதிய மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையில், தமிழகம், 5வது இடத்தை எய்தியிருக்கிறது.

இவையெல்லாம் எதைக்காட்டுகின்றன என்றால், தமிழகம் ஆண்டுக்கு ஆண்டு வளமான வாழ்வை நோக்கிச் சிறப்பாகவும், செம்மையாகவும் நகருகிறது என்பதையேயாகும்.

தமிழகத்தில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஒன்றியமும் (1) குடிநீர் (2) இணைப்புச் சாலைகள் (3) சிறு பாலங்கள் (4) மயானச் சாலை வசதி (5) சிறிய பாசன மேம்பாடு (6) ஊரக மருந்தகம் (7) தாய்-சேய் நலவிடுதி (8) பள்ளிக்கான கட்டடம் (9) தாழ்த்தப்பட்டோர்க்கான வீடுகள் ஆகிய வகைகளில் தன்னிறைவு பெற வேண்டும் என்ற நோக்கத்தைக்கொண்டு, சிறப்புத் தனித் திட்டங்கள், செயல்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு, 69 ஒன்றியங்களுக்குச் சுமார் ரூ. 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாண்டு, 150 ஒன்றியங்களுக்கு ரூ. 70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்படியாக ஒவ்வொரு துறையிலும் குறுகிய காலத்தில் இன்றைய தமிழக அரசு செய்திருக்கும் செயற்கரிய செயல்களை விரிக்கில் பெருகும்; தொகுப்பின் எஞ்சும், மக்கள் மன்றத்தின் துணையோடு, செய்யப்பட்டிருக்கும் செயல்களைவிட இனிச் செய்யப்பட வேண்டிய செயல்கள் பலப்பல இருக்கின்றன. முயற்சி திருவினை ஆக்கும் என்பதற்கிணங்க, தமிழகம் நாளுக்குநாள் வளருகிறது; தமிழர்களின் வாழ்வு நாளுக்குநாள் வளம் பெறுகிறது!

வாழ்க தமிழகம்! வளர்க வளம்!
வெல்க வாழ்வு!

# கி.பி. 2000-ல் வேளாண்மை

நம்முடைய 10,000 ஆண்டு வேளாண்மை வரலாற்றில், நாடு சுதந்திரம் அடைந்த 1947-ஆம் ஆண்டு 500இலட்சம் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்யக் கூடிய நிலையில் இருந்தோம்.

கடந்த 30 ஆண்டுகளில் திட்டமிட்ட வளர்ச்சியின் காரணமாக நாம் மேலும் 800 இலட்சம் டன் உணவு தானியங்களையும் குறிப்பிடத்தக்க கூடுதல் அளவு பழங்கள், மரவள்ளிக் கிழங்கு, உருளைக் கிழங்கு போன்ற கிழக்கு வகைகளையும், தொழிற் பயிர்களாகிய பருத்தி, சணல் ஆகியவற்றோடு மலைத் தோட்டப் பயிர்களாகிய காப்பி, டீ, ரப்பர் ஆகியவற்றையும் உற்பத்தி செய்துள்ளோம். ஆகவே கடந்த 30 ஆண்டுகாலத்தில் செய்யப்பட்ட உற்பத்திப் பெருக்கமானது, அதற்கு முந்திய 10,000 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப் பட்டதைவிட அதிகமாகும். இருந்த போதிலும், கி. பி. 2,000ஆம் ஆண்டில் மேலும்1000 இலட்சம் டன் உணவு தானியங் யங்கள் உற்பத்தி செய்யப்பட்டால்தான், 90 கோடி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய, 2,300 இலட்சம் டன் உணவு அளவு உணவு தானியம் நமக்குக் கிடைக்கும்.

இந்திய நாடு வேளாண்மையில் முன்னணி பெற்றுத் திகழ்ந்து வரும் கூட்டு வழிகளைப் பின்பற்றுதல் அவசியமாகிறது:

1. பொருளாதாரத்தில் வளம் பெறக்கூடிய தொழில் நுணுக்கங்களைக் கையாளுதல்.

2. அனைத்து உழவர்களும், வேளாண்மைத் துறையிலோ அல்லது மீன் வளர்ப்புத் துறையிலோ நிலத்தின் அவர்கள் அளவையும், செலுத்தக் கூடிய மூலதனத்தையும் இடர்ப்பாடுகளையும்தாங்கிக் கொண்டு புதிய தொழில் நுட்பக் கருத்துகளை மேற்கொள்ளுதல்.

3. உற்பத்தியையும், உபயோகத்தையும் தூண்டக் கூடிய அரசின் கொள்கைகள்.

ஏழ்மை, வேலையின்மை, ஆகிய இரட்டைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இது ஒன்றே வழியாகும். உறுதியான ஒருமைப் பாட்டுடன் நாம் செயல்படாவிடில் மீண்டும் உணவுக்காகக் கையேந்தக் கூடிய சூழ்நிலை உருவாகக்கூடும்.

புதுப்பிக்கக்கூடிய செல்வத்தை உண்டாக்குவதற்குச் சூரியசக்தியைப் பயன்படுத்த ஏற்ற சிறந்த துறை விவசாயமே. இது இயற்கை வளங்களை அறிவியல் முறையில் பயன்படுத்தி, உணவு, வருவாய், வேலைவாய்ப்பு ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள அதிக வாய்ப்பினை அளிக்கிறது.

இந்தியாவின் அதிகப்படியான தானிய உற்பத்திப் பெருக்குத் திறன் 40,000 இலட்சம் டன்னுக்கும் அதிகமாக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. வளமிக்க சிந்து, கங்கைச் சமவெளியின் வண்டல் மண், நிலத்தடிநீர், மேற்பரப்புநீர், சூரிய ஒளி ஆகியவை 15,000 இலட்சம் டன் தானிய உற்பத்தித்திறன் படைத்தவை. நம் நாட்டில் ஆண்டு முழுவதும் ஒரு சில பகுதிகளில், வெப்பப் பயிரோ, மித வெப்பப் பயிரோ, விளைவிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் நிறைய உள்ளன.

டாக்டர்
**எம்.எஸ்.சுவாமிநாதன்**
திட்டக் குழு உறுப்பினர்

தற்போது நம் நாட்டில் பயன் படுத்தப்படாத நீர் வளங்கள் ஏராளம் உள்ளன. இவை பாசனத் திட்டங்களை, நிலத்தடி, நீர் மேற்பரப்பு நீர் ஆகியவற்றை உள்ளடக்கியவை. இந்த நீரை, பாசனம் மின்உற்பத்தி, மனிதர்கள் விலங்கினங்களுக்குப் பயன்படுத்துவதற்குப் பின்வரும் வழிகளைப் பின்பற்றலாம்.

(அ) மேலும் அதிக நிலங்களுக்குப் பாசன வசதி தரக்கூடிய அளவில் பெரிய நடுத்தர, சிறிய பாசன திட்டங்களையும், நிலத்தடி நீரின், திறனையும் பெருக்குதல்.

(ஆ) அதிகப்படியான நீர்வசதி படைத்த ஆற்றுத் திட்டங்களில் இருந்து வறட்சியால் பாதிக்கப் பட்ட பகுதிகளுக்கு வசதிகள் செய்தல்.

(இ) பாசன வசதி அற்ற, மழை சீராகப் பொழியாத பகுதிகளில், பாசனக் குட்டைகள் மற்றும் நீர்த்தேக்கங்களின்இணைப்பு ஏற்பாடு முறையில் மழைநீரைப் பயன்படுத்திக் கொள்ளுதல்.

(ஈ) கிழக்கு மற்றும் மேற்குக் கரையோரப் பகுதிகளில் உள்ள மழை நிழல் பரப்பிடங்களில், சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி கடல் நீரைச் சுத்தம் செய்து, குடிநீரோடு பாசன நீருக்கும் வழிவகுத்தல்.

ஆண்டு முழுவதும் பெருமளவில் பெறப்படும் சூரிய ஒளியும் நமக்கு மற்றொரு ஒப்பற்ற வரப் பிரசாதமாகும். சூரிய ஒளியையும், தண்ணீரையும் இணைத்து நிலக்கண்டத்தில் செலுத்துவதன் மூலம் ஒரே ஆண்டில் 2 முதல் 4 பயிர்கள் பயிரிடவாய்ப்புகள் உள்ளன.

**சூரியனின் ஆற்றல்:**

சூரிய ஒளியானது, ஒளிச்சேர்க்கையின் மூலம் உணவு, தீவனம், எரிபொருள் உடை மற்றும் பல தரப்பட்ட தேவைகளைப்பூர்த்தி செய்வதுடன், வணிகத் தொடர்புடைய சக்தியாக இயங்குவதால் ஓர் சிறந்த பொருளாதாரவலிமையாகக் கருதப்படுகிறது.

சூரிய சக்தியினையும், தண்ணீரையும் அளவு கடந்து சேமித்து வைக்க முடியுமென்றாலும் தீவிர வேளாண்மை மற்றும் மீன் வளர்ப்புப் பணிகளில் மண் வளத்தையும், மீன் வளர்க்கப் போதுமான உணவற்ற நீரிலும் தேவையான வளங்களை நிலை நிறுத்துவதென்பது ஒரு பிரச்சனையாகும். இந்தச் சூழ்நிலையில் கரிமப் பொருட்களை மீட்பு உபயோகிப்பு நுட்பங்களின் மூலமாக உபயோகித்தல் மரபியல் இயக்கத்தைத் தீவிரப்படுத்துதல், பிற்காலத்தில் தானிய வகைகள் மற்றும் பயறுகள்அல்லதுபயிர்கள் மூலம் பயிர்களிலும் காற்றிலும் உள்ள தழைச்சத்தினை உறிஞ்சி சேமித்து வைக்க இயலும். மேற்சொன்ன முறைகள், இந்திய நாட்டை ஒரு முக்கியமான உணவக் களஞ்சியமாக மாற்றிட

நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது.

## பெருகிவரும் இழப்பு:

வாழ்வின் அடிப்படைத் தேவையான மண், நீர் போன்ற வளங்களுக்குச் சமீபகாலமாக அழிவு அதிகரித்து வருவது வேளாண்மையை எதிர்நோக்கியிருக்கும் பெரிய பிரச்சனையாகும். இயற்கையின் வற்றாத செல்வங்களான நிலத்தினையும் நீரையும், காத்திட எடுக்கப்படும் திட்டமிட்ட முயற்சிகளைப் பொறுத்து, நீண்டகால உற்பத்தித் திறனுக்கு இடர்ப்பாடு இன்றி உற்பத்தியை மிகுதியாக்க முடியும். நிலவளத்தை அறிவியல் பராமரிக்கும் திட்டங்களை இயற்றுதல். ஒருங்கிணைத்தல் மேற்பார்வையிடுதல் ஆகிய பணிகளுக்காக ஓர் மைய நில ஆய்வு மன்றத்தினை அமைத்திட திட்டங்கள் வகுக்கப்படலாம்.

அறிவியல் முறையான நில உபயோகத்தை, பின்வரும் அம்சங்களில் உழவர்கள் கவனம் செலுத்தி, சீரிய முறையில் சிக்கனமாக நிலம், நீர் ஆகியவற்றின் மூலம் வளமை அடைந்திட முயற்சிக்க வேண்டும்.

இயற்கையாலும், மனிதர்களாலும் ஏற்படும் அழிவினைக் குறைத்திட, உயிரின வாழ்க்கைச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு நில உபயோகத்தைத் தேர்ந்தெடுப்பது பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும். மற்றும் உயிரின வாழ்க்கையின் குறைவு. அழிவு ஆகியவற்றைத் தடுப்பது நமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும். வேளாண்மை அடிப்படையான வானிலை ஆராய்ச்சிகளை வலிவுபடுத்த வேண்டும்.

சீரிய பொருளாதார முறையில் நில உபயோகத்தைச் செம்மைப்படுத்துவது, உற்பத்திச் சேமிப்பு, பதப்படுத்துதல் மற்றும் விற்பனை ஆகியவற்றை ஓர் கூட்டுத் திட்டமாகக் கருதவேண்டும். உற்பத்திக்கும், அறுவடைக்கும், பிரதானதொழில் நுட்பங்களுக்கும் சமமான முக்கியத்துவம் தரப்படவேண்டும். உற்பத்திக்கும் உபயோகத்திற்கும் இடையே நிலவிவரும் பொருத்தமற்ற சூழ்நிலை உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பாதிக்கிறது. நிலத்தின் உற்பத்தித் திறனுக்கும், விளைச்சலுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்திற்கான இடர்ப்பாடுகள் மற்றும் தடைகளைக் கண்டறிய வேண்டும்.

அறுவடைக்குப் பின் தொழில் நுணுக்கங்களில் போதிய கவனம் செலுத்தாமையால் விலை மதிப்பற்ற உற்பத்திப் பொருள்களின் தயாரிப்பிற்கான வாய்ப்புகள் இல்லாமற் போகின்றன. உலர்ந்த விளைச்சல்களின் ஒரு பகுதி கால் நடைகளுக்குத் தீவனமாகவும் அல்லது எரிபொருளாகவும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், உலர்ந்த விளைச்சல்களின் உற்பத்தியில் ஒவ்வொரு கூறுபாட்டிலும் தனிக் கவனம் செலுத்தி, தொழில் நுணுக்கங்களைக் கையாள்வதால் அவற்றை விலைமதிப்பற்ற பொருளாக்கி நம் கிராமப்புற வருவாயினை மேம்படுத்தலாம்.

பண்ணைப் பராமரிப்பு முறைகளைக் கருத்தில் கொண்டுசிறந்த உயிரியல் தொகுப்புப் பொருள்களைப் பயன்படுத்தலாம். ஆதலால், நெல் உணவு தானியமாக மட்டுமல்லாமல், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கால்நடை தீவன உற்பத்தியில் சத்துள்ள வைக்கோலாகவும், காளான் விளைச்சலுக்கும், மற்றும் தவிட்டு எண்ணெயாகவும், தவிடாகவும், உமியாகவும் பயன்படுகிறது.

வேளாண்மையின் ஆற்றல் தேவைகளைக் கவனத்தோடு கணக்கிட்டு, புதுப்பிக்கக்கூடியன புதுப்பிக்க இயலாதவை என்ற வடிவங்கள் கலந்த ஒரு ஒருங்கிணைந்த ஆற்றல் பங்கீட்டு அமைப்பை ஒவ்வொரு பகுதியிலும்அறிமுகப்படுத்தவேண்டும். வளர்ந்த மற்றும் வளரும்நாடுகள் பின்பற்றிய உற்பத்தித் திறன் வளர்ச்சிக்கான வழிமுறைகளைப் புதுப்பிக்க வேண்டும். கரிம ''மீட்ப உபயோகிப்பு'' நுணுக்க முறைகளைத் தீவிரப்படுத்துதல் மூலமும், உயிரின உரங்களாகிய அசோலா, நீலப் பச்சைப் பாசி, ஒருமித்த மற்றும் எதிரான தழைச்சத்தை சேமிக்கும் உயிரினங்களைப் பெருமளவு உபயோகப்படுத்துவதன் மூலமும் இந்த நிலையை ஊக்குவிக்கலாம்.

வேலை வாய்ப்புத் திறனை ஆராயும்போது இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் வேளாண்மை, வேளாண்மைச் சார்ந்த தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றைத் தங்கள் வருவாய்ப் பெருக்கத்திற்காக இந்த நூற்றாண்டின் இறுதிவரை சார்ந்திருக்க வேண்டியுள்ளது என்று தெரிய வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கிடைக்கக்கூடிய நிலம், நீர், சூரிய ஒளி ஆகிய வளங்களை உபயோகித்து வருவாய், வேலை வாய்ப்பு, உணவு உற்பத்தி அதிகரிப்பு ஆகிய குறிக்கோள்களை அடைய மாநில அளவில் ஒரு கட்டுக்கோப்பு முறையினை உருவாக்க வேண்டும். சிறிய, மிகச் சிறிய பண்ணைகளின் பராமரிப்பில் போதிய அளவு கவனம் செலுத்தினால், தற்போதுள்ள வேளாண்மையின் ஊறுபாட்டினைத் தடுக்க இயலும்.

உழவர்கள் தங்களது கடின உழைப்பிற்கு ஏற்ற இலாபம் அளிக்கக்கூடிய விலை கிடைக்கப் பெறாவிடில், அறிவியல் முறையான வேளாண்மையில் தங்களது ஆர்வத்தையும், நாட்டத்தையும் நிலை நிறுத்த இயலாததாகிவிடும். பணத்தை இடுபொருளாக உபயோகிக்க ஆரம்பித்ததிலிருந்து உற்பத்தியாளரே விற்பனை செய்யும் நிலை உருவாகி, விலைபொருள் விற்பனையில் பல பகுதிகளில் நிலவிவரும் ஏற்றத் தாழ்வுகளையும் இடைத்தரகர்களின் பிடியிலிருந்து உழவர்களைக் காக்கும் முயற்சியும் இன்றியமையாததாகிறது. வருவாயை நிலைப்படுத்தவும் உயர்த்தவும், உற்பத்தியிலிருந்து விற்பனை வரை ஓர் கூட்டுறவு முறை அமைப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஏற்கெனவே, போதிய அளவு உணவைப் பயன்படுத்தாமையை மேலும் குறைக்கும் வகையில் விலைவாசியை உயர்த்துவதன் மூலம் தீர்வு காண முடியாது.

கிராமப் பகுதிகளில் வருவாய் வளத்தைத் திட்டமிட்டு பல்வகைப்படுத்துவதன் மூலம் உற்பத்தி, நுகர்வு ஆகியவற்றை மேம்படுத்துதலே இதற்கு பொருளார்ந்த தீர்வாகும். கிராமப்புறங்களுக்குக் கூடுதல் வளங்களை அளித்து மக்களின்நுகர்வுத் திறனை உயர்த்தினால் நாட்டின் எதிர்காலத் தொழில்வளம் சிறக்கும்.

இதுகாறும் நாட்டின் வரலாற்றிலே காணப்படாத அளவிற்கு தற்போது அறிவு, உழைப்பு, பொருளாதாரம் ஆகிய கலவை முறையைக் கையாண்டு கிராமப்புற இந்தியாவின் இயற்கை வளங்களை மக்களுக்குத் தேவையான பொருளார்ந்த செல்வமாக மாற்ற வேண்டியது அவசியமாகிறது. இம்முயற்சியில் ஈடுபட்டால் கி. பி. 2000-ல் இந்தியாவில் எந்தத் தனி மனிதனும் பசியோடு படுக்கைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படாது.

நன்னலம் நாடும் கண்ணோட்டத்தில் 21ஆம் நூற்றாண்டிலே நாம் தொடரும் பணிகள், மக்கள் தொகைக் கட்டுப்பாட்டின் திறனையே பொறுத்துள்ளது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

[டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் ஜனவரி 79ஆம் ஆண்டு, ஐதராபாத் நிர்வாக அலுவலர் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவின் தமிழாக்கத்தில் இருந்து சேகரிக்கப்பட்டவை].

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

தொகுப்பு : வி. ஆனந்தன்

## 2—7—81

தூத்துக்குடி-ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் 53 கிராமங்களுக்கு ரூ.43 இலட்சம் ரூபாய் செலவில் குடிதண்ணீர் வழங்கும் சாயர்புரம் குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் துவக்கிவைத்தார்.

## 3—7—81

தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தின் அனுபோகத்திலுள்ள குத்தகை நிலங்களின் குத்தகை கால அளவை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கவும், தேவையற்ற நிலங்களைச் சொந்தக்காரர்களுக்குத் திருப்பியளிக்கவும் வகை செய்யும் அவசரச் சட்டம் மேதகு ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 4—7—81

செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் பணிகள் அதிகரித்து வருவதாலும் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சியை அதிகப்படுத்தவும், தமிழ்மொழி பண்பாட்டு வளர்ச்சிக்கென தகுந்த கவனிப்பைச் செலுத்தவும் வேண்டி, ''செய்தி சுற்றுலா மற்றும் தமிழ்ப் பண்பாடு'' என்ற ஒரு தனித் துறையை உருவாக்கி தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

''டான்சி'' தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் 70 ரூபாய் 50 காசாகவும் அதிகபட்சமாக 100 ரூபாய் வரையிலும் மாத ஊதிய உயர்வாகக் கிடைக்கும். இதனால் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் 57 கிளைகளில் பணிபுரியும் ஏறத்தாழ 5 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

## 5—7—81

உலகவங்கி உதவியுடன் தமிழகத்தில் 85 கோடி ரூபாய் செலவில் 69 குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படவிருக்கின்றன என தமிழக அரசு அறிவித்துள்ளது.

தொழில் வளர்ச்சி பற்றி ஆலோசனை கூற தமிழ்நாடு அரசு ஓர் உயர் மட்டக் குழுவை அமைக்க இருக்கிறது என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தார்.

## 6—7—81

மாணவர்கள் நோட்டுப் புத்தகம் வாங்க மாணவர் கூட்டுறவுச் சங்கங்களுக்காக அரசு 10 இலட்ச ரூபாய் பங்குத்தொகை அளித்துள்ளது என்று தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன இயக்குநர் திரு குழந்தைவேலு அவர்கள் அறிவித்துள்ளார்.

## 7—7—81

தமிழ்நாட்டில் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் சில சூழ்நிலைகளில் வேலை கொடுக்க முடியாமல் போனாலும் குறைந்தபட்ச அளவு கூலி கொடுத்தாக வேண்டும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சென்னையிலுள்ள டி. யு. சி. எஸ்.-காமதேனு சூப்பர் மார்க்கெட்களில் பணிபுரியும் 951 ஊழியர்களுக்குக் குறைந்தபட்சம் 40 ரூபாய் முதல் அதிக பட்சம் 180 ரூபாய் வரை, மாத ஊதிய உயர்வு கிடைக்கும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 9—7—81

நகர்ப்புறங்களில் திரைஅரங்குகள் கட்ட மத்திய அரசிடம் தமிழக அரசு ரூ. 52 கோடி கேட்டிருப்பதாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

## 10—7—81

காவலர்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் திருச்சி, சேலம், உதகையில் புதிய குடியிருப்புகளைக்கட்டுவதற்குத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

நியாயவிலைக் கடைகளிலிருந்து இன்றியமையாப் பொருட்களைக் குடும்ப அட்டைகள் மூலம் வாங்குவதில் பொது மக்களுக்கு குறைபாடுகள்கிடைத்தாலோ அல்லது வேறு ஏதாவது கருத்துக்கள் தெரிவிப்பதாக இருந்தாலோ அவர்கள் ஒவ்வொரு நியாயவிலைக் கடையில் வைக்கப்பட்டுள்ள புகார் புத்தகத்தில் அதனை எழுதலாம் என்று அரசு அறிவித்துள்ளது.

## 11—7—81

சொந்த வீடுகளில் குடியிருக்கும் முன்னாள் படைவீரர்கள், விதவைகள், வீடு இருக்கும் இடம், வீட்டின் மதிப்பு, வீட்டு எண், செலுத்தும் வரி முதலிய விவரங்களை அந்தந்த மாவட்டத்திலுள்ள முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழகத்தில் வறட்சி நிவாரண பணிகளில் ஈடுபடும் பெண்களுக்குக் கூலியை அதிகப்படுத்தி கொடுக்கும்படி அதிகாரி

களுக்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

கோவில் நிலங்களை எடுத்து உழுவோருக்கே சொந்தமாக்குவது பற்றி அரசு தீவிரமாக்குவது பற்றி பரிசீலித்து வருவதாக மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

## 12—7—61

ஜப்பான் நாட்டுக் கூட்டுறவுடன் 10 கோடி ரூபாய் செலவில் பவானி சாகரில் நூல் பதனிடும் ஆலை ஒன்று அமைக்கப் படவிருக்கிறது என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 13—7—81

முதியோர் உதவித் தொகை 20 ரூபாயாக இருந்ததை 25 ரூபாயாக மாற்றியதோடு அவர்களுக்கு அரிசி, மற்றும் உடைகளையும் இலவசமாக அரசு அளித்து வருகிறது.

இதன் மூலம் ஒன்றரை இலட்சம் பேர் பயனடைகிறார்கள் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 15—7—81

அரசு உதவிபெறும் பள்ளிகளில் உள்ள ஊழியர்களுக்கும் இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு ஆகும் செலவு ஒருவருக்கு அதிகபட்சம் 40 ரூபாய்.

## 16—7—81

தமிழ்நாட்டில் சர்க்கரை தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றை அமைப்பது குறித்து தமிழக அரசு ஆலோசித்து வருகிறது என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தஞ்சையில் அமைக்கவும், அதன் துவக்க விழாவை பேரறிஞர் அண்ணா பிறந்த நன்னாளில் (செப்டம்பர் 15ந் தேதி) நடத்தவும் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

**போடிநாயக்கனூரில் ரூபாய் 96.32 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20-7-81ல் அடிக்கல் நாட்டினார்.**





# உழவர் வாழ்வு மலர வேளாண்மைப் பல்கலைக் கழகப் பணி

அ. வேங்கடராமன், இ.ஆ.ப.,
துணை வேந்தர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை

தமிழக உழவர் பெருமக்களின் இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்யும் வகையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய மூன்று துறைகளிலும் சீரிய பணியினை ஆற்றி வருகின்றது.

## புதிய கண்டுபிடிப்புகள்:

பல்கலைக் கழகம் தொடங்கியதிலிருந்து இதுவரை சுமார் 80 புதிய பயிர் இரகங்களை உருவாக்கி உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் (1980-81) பொங்கல் பரிசாக 10 புதிய பயிர் இரகங்களை உருவாக்கி வெளியிட்டுள்ளோம். அவைகளாவன: அதிக தானியம் மற்றும் தட்டு மகசூல் தரவல்ல கோ. எச். 3 வீரிய ஒட்டுச் சோளம்; பூச்சி நோய்களைத் தாங்கவல்ல குறைந்த வயதுடைய உளுந்து, கோ. 5; குறைந்த வயதில் நிறைந்த மகசூல் தரவல்ல ''மருதம்'' தக்காளி-கோடைக்கு மிகச் சிறந்த இரகம், அதிகச் சத்துள்ள அரைக்கீரை கோ. 3, குறைந்த வயதுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் ஏற்ற முள்ளங்கி -கோ.1. ஒவ்வொரு ஆண்டும் முறையாக காய்த்துப்பலன் தரும் வீரிய ஒட்டு மா - பெரியகுளம்-1, குட்டைவகை சப்போட்டா -1 பெரியகுளம்-1, ஏற்றுமதிக்கேற்ற தரமான அதிக விளைச்சல் தரவல்ல முந்திரி - விருத்தாச்சலம்-1 பூங்காக்களையும் வீட்டையும் அலங்கரிக்கவல்ல செம்பருத்திப் பூக்கள்-புன்னகை மற்றும் திலகம் ஆகியன.

புதிய பயிர் இரகங்களை உருவாக்குவதுடன், இதர கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளையும் கண்டறிந்து உழவர்களுக்கு அவ்வப்போது தெரிவித்து வருகிறோம். தோட்டக்கலை மற்றும் இதர பயிரியல் ஆய்வுகளோடல்லாமல், வேளாண் பொறியியல், கால்நடை அறிவியல், மீன் வள அறிவியல், வன இயல் மற்றும் மனை இயல் ஆகிய பலவற்றிலும் இப்பல்கலைக்கழகத்தில் ஆய்வுகள் நடத்தி வருகிறோம்.

## தோட்டக்கலை:

தோட்டக்கலைத் துறையில் குறைந்த வயதுள்ள செவ்வாழை வகை ஒன்றினைக் கண்டுபிடித்துள்ளோம். முதன் முறையாக வீரிய ஒட்டு வெங்காய வகை ஒன்றினை உருவாக்கி இருக்கிறோம். சீமைக் கருவேலமரத்தில் முள் இல்லாத துரிதமாக வளரக்கூடிய இனம் ஒன்றினையும் தேர்வு செய்துள்ளோம்

தென்னையில் 'கோகோ' ஊடு பயிர் செய்வது இலாபகரமான முறையெனக் கண்டறிந்துள்ளோம். மிளகாய்ப் பயிரைத் தாக்கும் பச்சை அசுவணியை ஒழிக்க 'மெதோமில்' 90 சதம் மருந்தும் நெற்பயிரைத் தாக்கும் இலைப் புள்ளி நோயைக் கட்டுப்படுத்த 'ஹினோசாநி' மருந்தும், வெற்றிலைக் கொடியைப் பாதிக்கும் வாடல் நோயைத்தடுக்க 'ரிடோமில்' என்ற மருந்தும் சிறந்ததெனத் தெரிந்தெடுததுள்ளோம்.

## கால்நடை வளர்ச்சி:

சாண்டினல்லா ஆடு ஆராய்ச்சிப் பண்ணையில் நீலகிரியைச் சேர்ந்த செம்மறி ஆட்டையும் வெளிநாட்டு இனத்தையும் இனக் கலப்பு செய்து ஒரு புதிய ''சேண்டி'' என்ற செம்மறி ஆட்டு இனத்தை உருவாக்கியிருக்கிறோம். இந்த புதிய கலப்பு இனம் ஒன்றரை மடங்கு அதிக மிக உயர்ந்தரக கம்பளத்தைக் கொடுக்கவல்லது. செம்மறி ஆட்டிற்குக் கொடுக்கும் தீவனத்தில் 'அவிசீனியா' மற்றும் கடல் பாசி ஆகியவற்றை 20 சதம் முதல் 50 சதம் வரை கலந்து கொடுக்கலாமென கண்டறிந்துள்ளோம்.

## வேளாண் பொறியியல்:

வேளாண் பொறியியல் கல்லூரியில் புதிய சாண எரிவாவு சாதனமொன்றைக் கட்டமைத்துள்ளோம். இந்தப் புதிய கட்டமைப்

பிற்குத் தகர டிரம்கள் தேவையில்லை. செங்கல், சிமெண்ட் போன்ற கிராமங்களில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே இதனைக் கட்ட இயலும், செலவும் குறைவு. சூரிய வெப்ப அடுப்பு, சூரிய வெப்ப தானிய உலர்த்தி, கேபினட் உலர்த்தி போன்றவற்றை வடிவமைத்து, விளம்பரப்படுத்தி வருகிறோம். 'கோவை'' விதைப்புக் கருவி மானாவாரி விதைப்பை துரிதப் படுத்த ஏற்றதெனப் பல கிராமங்களில் விவசாயிகளுக்குச் செயல் விளக்க மூலம் நிரூபித்துள்ளோம்.

பட்டு வளர்ப்பு:

பட்டுப்புழுவில் செய்த ஆய்வில் யு. 5 மற்றும் யு.8 என்ற இனங்கள் அதிக நீளமான இழையினைக் கொடுக்க வல்லவை யெனத் தேர்வு செய்துள்ளோம்.

மீன் வளர்ப்பு:

கலப்பு மீன் வளர்ப்பில் விரால் மீனை வளர்ப்பதால் நீரைச்சுத்தமாக வைத்திருக்கவும் களை மீன்களை ஒழிக்கவும் உதவுமென ஆய்வின் மூலம் உறுதி செய்துள்ளோம்.

**கற்பித்தல்:**

இவ்வாண்டு நானூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பி. எஸ்சி., (விவ); பி. வி. எஸ். சி. (தோட்டக்கலை) மற்றும் பி.இ. (வேளாண்மை) ஆகிய பட்டங்களைப் பெறுகிறார்கள். இதேபோன்று 226 பேர் எம். எஸ்சி. மற்றும் பி.எச்.டி., பட்டப்படிப்பை முடித்துள்ளனர். தமிழ்நாட்டிற்குத் தேவையான தொழில் நுணுக்கப் பட்டதாரிகளை உருவாக்கி வருகிறோம். மாணவர்களும், ஆசிரியர்களும் மேலும் நன்முறையில் பயில எல்லாவிதமான வசதிகளையும் கொடுத்து ஊக்கமூட்டி வருகிறோம்.

**விரிவினைப் பணி:**

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆய்வு முடிவுகள் யாவும் விவசாயிகளுக்குச் சென்றடைய ''பயிர் கிளினிக்'' என்ற புதிய அமைப்பை வேலூர், நெல்லை மற்றும் காஞ்சி ஆகிய ஊர்களில் ஏற்படுத்தியுள்ளோம். இந்நிலையங்கள் செவ்வனே செயல்படத் தேவையான நிபுணர்களையும் நியமித்துள்ளோம்.

''ஆய்வுக் கூடத்திலிருந்து பண்ணைக்கு'' என்ற திட்டத்தை கோவை,மதுரை,தென்ஆர்க்காடு, திருச்சி, தஞ்சை, மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்திலும் உள்ள பல்கலைக்கழகக் கல்லூரிகள்-ஆய்வு நிலையங்கள் மூலம் செயல்படுத்திவருகிறோம். இத்திட்டத்தின் மூலம் 3,000 சிறு விவசாயிகள், மிகச் சிறுவிவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவி செய்து வருகிறோம். இத் திட்டத்தில் வேளாண்மைக்கு வேண்டிய இடுபொருள்களான விதைகள், உரங்கள், பூச்சி-பூசண மருந்துகள் யாவும் இலவசமாக விநியோகித்து புதிய கண்டுபிடிப்புகளைச் செயல்விளக்கம் செய்து காட்டுகிறோம். மேலும், சிறிய-வீட்டுக் கோழிப் பண்ணையமைக்கவும், ஆடுகள் வளர்க்கவும் தகுந்த வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறோம்.



புதிய வெளியீடுகள்:

பல்கலைக் கழகத் தகவல் தொடர்பு நிலையம் 19 புத்தகங்களை வெளியிட்டுள்ளது. மக்கட் தொடர்புச் சாதனங்கள்-முறைகள் மூலம் 370 கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. 3000க்கு மேற்பட்ட விவசாயிகளின் கேள்விகளுக்குத் தக்க பதில்களைத் தந்துதவியுள்ளது. அகில இந்திய வானொலி விவசாய செய்தி மலரில் 213 புதிய கண்டுபிடிப்புகளை ஒலிபரப்பியுள்ளது. விவசாயிகளின் தேவைக்கேற்ப அஞ்சல் வழிப்பாடங்களை நடத்தியுள்ளது. வானொலி - வேளாண்மைப் பள்ளித் திட்டத்தின் மூலம் 5500 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். தொலைக் காட்சி மூலம் புதிய கண்டுபிடிப்புகளைக் காட்டி வருகிறோம். பல்கலைக் கழக வேளாண் தமிழ் மாத இதழான ''வளரும் வேளாண்மை'' மூலம் 10,000 விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள்.

**உழவர் பயிற்சி நிலையங்கள்:**

கோவை மற்றும் மதுரையிலுள்ள உழவர் பயிற்சி நிலையங்கள், திருச்சி மற்றும் பாண்டிச் சேரியில் செயலாற்றும் வேளாண்மையறிவியல் நிலையங்கள் வேளாண்மைச் சார்ந்த ஆண்கள், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்குத் தேவையான பயிற்சிகளைத் தொடர்ந்து அளித்து வருகின்றன. இதேபோன்று வட ஆர்க்காடு மாவட்டத்தில் செயலாற்றும் தேசிய நிரூபணத்திட்டம் பல புதிய கண்டுபிடிப்புகளை அம் மாவட்ட விவசாயிகளுக்கு நிரூபணங்கள் மூலம் பரப்பி வருகிறது.

**விதை உற்பத்தி-விநியோகம்:**

நெல், சிறுதானியம், பயறுகள் பருத்தி, எண்ணெய்வித்துக்கள் மற்றும் சான்றிதழ் பெற்றவிதை ஆகியன 400 டன் அளவுக்கு உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகித்துள்ளோம். இவ்வாறு தரமான விதைகள் பெறுவதால் விவசாயிகளின் விளைச்சல் கணிசமாகக் கூடுகிறது. மேலும், தென்னங்கன்றுகள் மரநாற்றுக்ள், பழக்கன்றுகள் மற்றும் பூசெடிகள் பெரும் எண்ணிக்கையில் விவசாயிகளுக்கு மற்றோருக்கும் விநியோகித்துள்ளோம்.

தமிழகத்தின் வேளாண்மை மறுமலர்ச்சிக்கு வேண்டிய பணிகளைச் செய்துவரும் இப்பல்கலைக் கழகம், தொடர்ந்து தனது பணியினை மக்களின் தேவைகளை அறிந்து நல்ல முறையில் நிறைவேற்றிடும்.



# ஆடிப்பட்டம் தேடி விதை

**எஸ்.ஏ. சுப்ரமணி, இ.ஆ.ப.,**

**வேளாண்மை இயக்குநர்.**

**சா**குபடி பட்டங்களில் முதன்மையானது ஆடிப்பட்டம். ''ஆடிப்பட்டம் தேடிவிதை'' என்பது பழமொழி. நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தில் கண்டுள்ள பலன்களைக் கொண்டு தான் நமக்குப் பழமொழிகளை எழுதி வைத்துள்ளார்கள்.

பழமொழிகளைப் படிப்பினையாகக் கருத வேண்டும். ஆடி ஐந்தில் விதைத்த விதைப்பும், அது நான்கில் பெற்ற பிள்ளையும் தேடிய தனமாகும் என்று கூறுகிறது மற்றுமொரு பழமொழி. இதன் மூலம் ஆடிப் பட்டத்தில் விதைத்தால் பயிர் அதிக மகசூலினை அளிக்கும் என்று தெரிகிறது. இதுபோல் இருபத்தி நான்காம் வயதில் தலைப்பிள்ளை பிறந்தால் அவன் அந்திகாலத்தில் காப்பாற்றுவான் என்பதாகும். ஆடிப்பட்டம் சிறந்த பட்டம்' என்பதனை இந்தப் பழமொழிகள் தெளிவாக்குகின்றன.

''ஆடிப்பட்டம் தேடி விதை'' என்ற முதுமொழிக்கேற்ப தமிழ் நாட்டில் ஆடி மாதத்தில் பல பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்தப் பருவத்தில் சுமார் 13 இலட்சம் எக்டேர்களில் நெல்லும், 5.5 இலட்சம் எக்டேர்களில் சோளமும், 3.4 இலட்சம் எக்டேர்களில் கம்பும், 2.3 இலட்சம் எக்டேர்களில் கேழ்வரகும், 25,000 எக்டேர்களில் மக்கா சோளமும், 8.8 இலட்சம் எக்டேர்களில் நிலக்கடலையும் பயிர் செய்யப்படுகின்றன.

இந்தப் பட்டத்தில்தான் தமிழ் நாட்டில் மானாவாரி பயிர்களின் சாகுபடி ஆரம்பமாகிறது. தமிழ் நாட்டில் 54 சதவீத நிலங்கள் மானாவாரி நிலங்களாக உள்ளன. எனவே, இந்தப் பட்டம் மானாவாரி சாகுபடிக்கு மிகவும் முக்கியமான பட்டமாகும். இந்தப் பட்டத்தில் சுமார் 8.8 இலட்சம் எக்டேர்களில் நிலக்கடலை மானாவாரியாகப் பயிர் செய்யப் படுகிறது.

''ஆடி முதல் தேதி ஆயிரம் கண்ணுடையான் முடிமகழ் விரியான் ஆமாகின், ஆழிவரண்டும், அண்டம் புரண்டும் நாடு விளையாது நாழி'' என்று கூறுகிறது, மேலும் ஒரு பழமொழி. அதாவது ஆடி முதல் தேதியில் மழை பெய்யா விட்டால் கடல் வரண்டு போகும், நிலங்கள் பாழ்படும், நாழி கூட மகசூல் கிடைக்காது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆண்டு ஆடி முதல் தேதி தமிழ்நாடு முழுவதும் நல்ல மழை பெய்துள்ளது குறிப்பிடத் தக்கது. எனவே, இந்தப் பருவத்தில் போதுமான மழை பெய்து சிறப்பாக விவசாயம் நடைபெற வழி ஏற்படும் என்று நாம் நம்பலாம்.

விவசாயிகள் குறைந்த செலவில் அதிக மகசூலினைப் பெற்றிட மண் பரிசோதனை மிகவும் முக்கியமானதாகும். மண் பரிசோதனை செய்வதற்கு இந்தப் பட்டம்தான் சிறந்தது. தற்சமயம் எல்லா மாவட்டங்களிலும் மண் பரிசோதனை செய்ய மண் பரிசோதனை நிலையங்களும், ஆங்காங்கே நடமாடும் மண் பரிசோதனை ஊர்திகளும் செயல்பட்டு வருகின்றன. இவைகளில் மண் பரிசோதனை தவிர, பாசன நீரும் சோதனை செய்ய வசதிகள் உள்ளன. பரிசோதனை செய்ய மாதிரி ஒன்றுக்கு ரூ. 1 தான் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. மண் பரிசோதனை செய்து சிபாரிசுபடி உரமிட்டால் சாகுபடி செலவில் சிக்கனம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, விவசாயிகள் அனைவரும் தங்கள் வயல்களில் உள்ள மண்ணை இந்தப் பட்டத்தில் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்தப் பட்டத்தில் குறுவை மற்றும் சம்பா நெற் சாகுபடி செய்யப்படுகிறது. குறுவை பட்டத்திற்கு ஆடுதுறை-31, 36, ஐ.டி.டி. 1722, 4786, திருர்க் குப்பம். 9 போன்ற இரகங்களும் சம்பா பருவத்திற்கு ஐ.ஆர். 20, பொன்னி, ஆடுதுறை. 35, பவானி, நெல்லூர் 9672 இரகங்களும் சிபாரிசு செய்யப்படுகிறது. சான்றிதழ் பேற்ற விதைகளையே உபயோகித்திடல் வேண்டும். விதை நேர்த்தி செய்வது, நாற்றங்கால்களில் டை அமோனியம் பாஸ்பேட் இடுவது. வேர்ப் பகுதிகளை டர்ஸ்பான் யூரியா கரைசலில் முக்கி நடுவது போன்ற வேளாண்மைத் தொழில் நுட்பங்



களையும் விவசாயிகள் கடைப்பிடித்திடல் வேண்டும். மண் பரிசோதனை சிபாரிசுகளின்படி உரமிடுவதுடன் காலத்தில் மருந்தடித்து அதிக விளைச்சலைப் பெற்றிட முன் வரவேண்டும்.

ஆடிப்பட்டத்தில் சோளம் பயிரிட கோயில்பட்டி-5 ஐ.எஸ். 3541, கோயம்புத்தூர் 23, 24 மற்றும் கோயில்பட்டி நெட்டை முதலிய இரகங்கள் சிறந்தது. சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள் விதை நேர்த்தி செய்வதுடன் சிபாரிசு செய்யப்படும். உரமிட்டு, காலத்தே பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்க முன் வரவேண்டும்.



ஆடிப்பட்டத்தில் கம்பு சாகுபடி செய்திடும் விவசாயிகள் கோயில்பட்டி 2,3 கோயில்பட்டி வீரிய ஒட்டு கம்பு. 4, குடுமியான் மலை. 2 ஆகிய கம்பு இரகங்களைத் தேர்ந்தெடுத்திட வேண்டும். விதை நேர்த்தி செய்து சிபாரிசுகளின்படி உரமிட்டு இதர பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் கடைப்பிடித்திட முன்வர வேண்டும்.

நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் திண்டிவனம். 2, 9, 11, 12 போன்ற இரகங்களை இந்த பட்டத்தில் சாகுபடியில் அதிக மகசூலினைப்பெற்றிட விதை நேர்த்தி செய்வதுடன் சிபாரிசு செய்யப்படும் உரங்களை அடியுரமாக இடுவதுடன் அதிக சேதத்தினை உண்டுபண்ணும் சிவப்புக் கம்பளிப்பூச்சியினை ஒழித்திட முன் வர வேண்டும். சிவப்பு கம்பளிப்பூச்யின் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். மேலும் நிலக்கடலைப் பயிருடன் ஊடு பயிராகத் துவரை, உளுந்து. காராமணி போன்ற பயறு வகைப் பயிர்களைப் பயிர் செய்திட வேண்டும்.

இந்தப் பட்டத்தில் எள் சாகுபடி செய்யும் விவசாயிகள் திண்டிவனம். 3, கோயம்புத்தூர் 5, என்ற இரகங்களையும், சூரியகாந்தி பயிர் செய்யும் விவசாயிகள் கோயில்பட்டி-1,2 என்ற இரகங்களையும் பயிர் செய்யலாம்.

ஆடிப்பட்டம் காய்கறி சாகுபடி செய்திடவும் சிறந்த பட்டமாகும். ஆடிப்பட்டத்தில் காய்கறி சாகுபடி செய்திட சிறந்த காய்கறி விதைகள் தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்திட தோட்டக்கலைத்துறை ஏற்பாடு செய்துள்ளது. எனவே, இந்தப் பட்டத்தில் காய்கறி பயிர் செய்திட பொதுமக்கள் முன் வர வேண்டும்.

தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு உதவி செய்திட வேளாண்மைத் துறை எப்பொழுதும் தயாராக உள்ளது. ஆங்காங்கே உள்ள வேளாண்மைத்துறை ஊழியர்களுடன் தொடர்பு கொண்டு வேளாண்மைத் தொழில் நுட்பங்களைத் தங்கள் சாகுபடியில் மேற்கொள்ள வேண்டும்

# பெருந்தலைவர்

# பிறந்த நாள் விழா

—நிகழ்ச்சித் தொகுப்பு **தமிழ்ப்பித்தன்**



**பெ**ருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாள் 15.7.81 காலை 9 மணியளவில் மங்கல இசையுடன் கலைவாணர் அரங்கில் தொடங்கியது. விழாவிற்கு வந்திருந்தோரை செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம் (இ.ஆ.ப) அவர்கள் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''தமிழ்நாடு அரசு தியாகச் செம்மல்களுக்கு - விடுதலைவீரர்களுக்கு விழாக் கொண்டாடி வருகிறது. தலை சிறந்த தலைவர்களைப் போற்றி அவர்களது தத்துவங்களை நினைவுகூரும் வகையில் - அவர்களது பணிகளைப் பாராட்டும் வகையில்-அவர்களது அறிவுரைகளை எடுத்துரைக்கும் வகையில் இத்தகைய விழாக்களை நடத்தி வருகிறது. அந்த வகையில் பெருந்தலைவரின் 79வது பிறந்த நாளைக் கொண்டாடுகிறது.'

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளைத் தமிழக அரசு தொடர்ந்து, தொய்வின்றி, நான்காம் முறையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது.

''நாடு விடுதலை பெறுவதற்காக காமராஜ் அவர்கள்போராட்டத்தில் ஈடுபட்டு 8 ஆண்டுகள் சிறையில் துன்பம் பெற்றார்கள்: துயரத்தை ஏற்றார்கள்; ஒருபுது வகை வேள்வியை நடாத்தினார்கள்.

''14 ஆண்டுகள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் 9 ஆண்டுகள் தமிழகத்தின் முதலமைச்சராகவும் ஐந்தாண்டுகள் அகில இந்திய காங்கிரஸின் முக்கிய கேந்திரமான தலைவராகவும் பொறுப்பேற்று மக்களை வழி நடத்தியிருக்கிறார்.

''அவர் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட போதெல்லாம் 'இவர் சரிவர நிருவகிப்பாரா' என்ற சந்தேகத்தைச் சிலர் தெரிவிப்பது வாடிக்கையாக இருந்து வந்ததுண்டு. அவர் வாழ்ந்த காலத்தில் பல்வேறு திருப்பமான நிலைகளை இந்தியா சந்திக்க நேர்ந்ததுண்டு. அப்போதெல்லாம் அவர் அறிவுக்கூர்மையுடன் நடந்து கொண்டார்.

''நேரு அவர்களின் மறைவுக்குப் பின்னர் இரு பிரதமர்களைத் தேர்ந்தெடுக்கும் நிலை காமராஜருக்கு வாய்த்தது. அப்போதெல்லாம் தக்கவரைத் தேர்ந்தெடுத்து இந்தியாவின் ஒருமைப்பாட்டை - சுதந்தரத்தைக் காப்பாற்றியிருக்கிறார். இந்தியாவின் Stability க்கு – உறுதிநிலைக்கு ஊறு ஏற்படாதவாறு பாதுகாத்திருக்கிறார்.

''1967ல் தமிழக மக்கள் பேரறிஞர் அண்ணா அவர்களைத் தமது வழிகாட்டியாக ஏற்று, அவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தபோது, அதைமனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார். தேர்தல் என்பது ஒரு நாணயத்தின் இரு பக்கம்போல, தோல்வியும் வெற்றியும் மாறி மாறி வரும் இயல்பு கொண்டது. என்பதை உணர்ந்து ஓர்அறிக்கை விடுத்தார். 'தேர்தல் முடிவுகளை மக்கள் தீர்ப்பாக ஏற்றுக்கொள்கிறேன்' என்று மனப்பூர்வமாகத் தெரிவித்து 6 மாத காலம்வரை அண்ணாவின் ஆட்சி குறித்து விமரிசனம் செய்யாமல் இருந்தார் பெருந்தலைவர்.

பெருந்தலைவர் அவர்களின் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்த மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:

''காமராஜர் தலைமைப் பொறுப்புக்கு ஏற்ற தலைவராகத் திகழ்ந்தார்; பெருந் திறமையுடன் அமைப்புகளை நிருவகித்தார். அவர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, தாம் ஒரு தேசியவாதி என்பதை மெய்ப்பித்தார். கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் சென்று நாட்டு விடுதலையின் அவசியம் குறித்துப் பிரச்சாரம் செய்தார். அவர் ஒரு தொண்டரைப் போலவே சுறுசுறுப்புடன் பணியாற்றினார். நாட்டுப் பணியின்பொருட்டு பல முறை சிறை சென்றிருக்கிறார் அவர்.

''நாடு விடுதலை பெற்றபின்னரும் அவர் கிராமங்களை மறக்கவில்லை. கிராம மக்களை மறக்கவில்லை; கிராம மக்களுடன் எந்த நேரமும் தொடர்புகொண்டிருந்தார். பொது மக்களுடன் எப்போதும் உறவு வைத்திருந்தார். அகில இந்தியத் தலைவராக அவர் மாறியபோதும் கூட தமிழகத்தின் கிராம மக்களை அவர் மறக்கவில்லை.

''ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தபோது எத்தனையோ பிரச்சினைகள் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன. அவை அனைத்தையும் திறமையாகச் சமாளித்து வெற்றி கண்டார். அவர் பெரும் வீரராக-நாட்டை நல்ல முறையில் உருவாக்கும் சிற்பியாக விளங்கினார்.

அடுத்துச் சிறப்புரையாற்றிய மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செலவர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''வேறெந்த மாநிலத்தையும் விட, தமிழ்நாட்டில் சாமானியர்கள் அதிக அளவில் அரசியல் பொறுப்பேற்க முடியும் என்பதை காமராஜர் நிரூபித்தார்.

''தீண்டாமை பேசுவது குற்றம் எனும் சட்டம் வருவதற்கு முன்பேயே, தமிழகத்தில் அரிசன இனத்தவர் ஒருவரை அறநிலையத்துறை அமைச்சராக்கி, தீண்டாமையை முறியடித்தார் காம



திரு. புலவர் புலமைப்பித்தன்



திரு. புத்தனேரி சுப்பிரமணியம்

ராஜர். பொருளாதாரத்தில் மட்டும் புரட்சி ஏற்பட்டுப் பயனில்லை; சமூகப் புரட்சியும் ஏற்பட்டால்தான் தீண்டாமை மறையும் என எண்ணிச் செயலாற்றியவர் அவர்.

''காமராஜர் அந்நியரை-வெள்ளையரை எதிர்ப்பவராக இருந்திருக்கிறார்; மாநிலத்தின் முதல்வர்களை உருவாக்கும் படைப்பாளராக இருந்திருக்கிறார்; முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் மூலம் ஆட்சியாளராக இருந்திருக்கிறார்; அந்தப் பதவியைத் துறந்தவராகவும் இருந்திருக்கிறார். எல்லாவற்றிலும் மக்கள் நலனையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டிருக்கிறார். தன்னலத்தைத் துறந்து தேச நலத்தையே பெரிதாக எண்ணித் தன்னைப் பின் தள்ளிக் கொண்டார்.

''அவரது மறைவிற்குப் பின், பலர் அவரது பதவிக்கு வாரிசாகத் தோன்றியிருக்கிறார்கள். அது மட்டும் போதாது; அவரது பண்புக்கும் வாரிசாகத்தோன்றவேண்டும். அகில இந்தியத் தலைவர்களைத் தமிழகம் உருவாக்க வேண்டும்.''

சிறப்புரைக்குப் பின்னர், மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப் பித்தன் அவர்கள் தலைமையில் 'கவிஞர்கள் பார்வையில் காமராஜர்' என்னும் கவியரங்கம் நடைபெற்றது.

''பண்பின் சிகரம்'' என்ற தலைப்பில் திரு புத்தனேரி ரா. சுப்ரமணியம், கல்விக் காவலர் என்னும் தலைப்பில் திருமதி நிர்மலா சுரேஷ், 'தொண்டின் தலைவர்' என்னும் தலைப்பில் திரு. அரங்க நெடுமாறன், 'அரசியல் மேதை' என்னும் தலைப்பில் திரு பொன்னடியான், 'தியாகச் செம்மல்' என்னும் தலைப்பில் செல்வி எம்.வசந்தி, 'ஏழைகளின் தோழன்' என்னும் தலைப்பில் திருமதி தங்க அன்புவல்லி ஆகியோர் கவிதை பாடினர்.

பிற்பகல் 4.30 மணியளவில் கந்தர்வகான ஜோதி திரு கே. வீரமணி அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. அவரது இசை விருந்துக்குப் பின்னர், மாண்புமிகு சட்ட மேலவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமை ஏற்க, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கே. ஏ. சுந்தரம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த சிறப்புக் கூட்டம் தொடங்கியது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் தமது தலைமையுரையில் கூறினார்:

''காமராஜர் எளிமையே வடிவாக வாழ்ந்தவர். பாமரர்களின் மத்தியிலே, ஏழைகளின் மத்தியிலே வாழ்ந்து அவர்களுக்கு அருந்தொண்டாற்றியவர். அவரது காலடி படாத இடமே தமிழகத்தில் இல்லை. அவரது காலடி படாத பட்டி தொட்டியே கிடையாது.

''தொண்டு செய்து தொண்டு செய்து முன்னுக்கு வந்து மிகப் பெரிய தலைவராக மாறிவிட்டார். ஆரம்பத்திலிருந்தே செயல் வீரராக - நோட்டீஸ் ஒட்டுபவராக - நிதிசேர்ப்பவராக - பேச வரும் தலைவர்களை வரவேற்பவராக - விளங்கி எல்லாத் தொண்டர்களையும் அறிந்தவராக - எல்லாத் தலைவர்களையும் அறிந்தவராகத் திகழ்ந்தார். எல்லா ஊருக்கும் நேரிற் சென்று-எல்லோருடைய குறைகளையும் நேரில் அறிந்து - தீர்த்து வைத்தார்.

''இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றபோது அறிஞர் அண்ணா அவர்கள் துவக்க விழாவிற்கு வருமாறு காமராஜர் அவர்களை நேரிற் சென்று வேண்டினார். அந்த அழைப்பை ஏற்றுக் கடற்கரைக் கூட்டத்தில் வந்து கலந்து கொண்டு அரியதொரு உரையை ஆற்றினார். அப்போது பலர், அந்த விழாவிற்குப் போகவேண்டாம் என்று அவரைத் தடுத்துப் பார்த்தனர். ''தமிழுக்குப் பெருமை சேர்ப்பதில் அண்ணாவும் நானும் ஒன்றிப்போயிருக்கிறோம்'' என்று கூறிவிட்டு, உலகத்தமிழ் மாநாட்டுக்கு வந்தார் காமராஜ்.

''அவர் மறைந்த பின்னர் அவர் வசித்த வாடகைவீட்டை, அதன் சொந்தக்காரர் எடுத்துக் கொண்டார்; அவரது காரை அவரது கட்சி எடுத்துக்கொண்டுவிட்டது; அவரது உடல் கிண்டிக்குச் சென்றுவிட்டது.''

அடுத்து உரையாற்றிய சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் குறிப்பிட்டார்:

''காமராஜர் கல்வி வழங்கிய வள்ளல்; நமக்குக் கிடைத்த சுதந்தரத்தைக் கல்வியின் வாயிலாகத் தான் காப்பாற்ற வேண்டும் என எண்ணி அனைவருக்கும் கல்வி வழங்கும் திட்டத்தை மேற்கொண்டார்; கல்விப் பணியில் அவர் கட்சிக் கண்ணோட்டம் செலுத்தியதில்லை''.

அடுத்து உரையாற்றிய திரு. நா.மகாலிங்கம் அவர்கள் தெரிவித்தார்:

''காமராஜர், ஆங்கிலம் அறியாதவர்என்று சொல்லப்பட்டது. அது தவறு. அவர் அநேகஆங்கில நாளிதழ்களை விடாது படித்து வந்தார். பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் எழுதிய Power என்னும் நூலை அவர் படித்து வந்தார். தமிழகத்தில் தொழில் துறை வளர்ச்சிக்கு அவர் அரும்பாடுபட்டார். அந்தத் தொழில் முன்னேற்றம் மீண்டும் தமிழகத்தில் உருவாவதற்கு அனைத்துக் கட்சியினரும் ஒன்றுபட்டு முயற்சி செய்ய வேண்டும்''



திருமதி நிர்மலா சுரேஷ்



திரு. அரங்க நெடுமாறன்



திரு. பொன்னடியான்



செல்வி எம். வசந்தி

திருமதி தங்க அன்புவல்லி





நாவலர்

அடுத்து உரையாற்றிய, திரு எஸ். வி. சிட்டிபாபு அவர்கள் குறிப்பிட்டார்:

''உயர் கல்வி உயர்ந்த கல்வியாக இருக்க வேண்டும் என்பது காமராஜர் அவர்களின் கருத்தாகும். ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் தரும் திட்டம் காமராஜரின் காலத்தில் தான் அமலாகியது. காமராஜர் பூகோளத்தைப் படித்ததில்லை; ஆனால் தமிழகத்தின் பூகோளத்தை நன்கு அறிந்து வைத்திருந்தார். மனு தர்மம் போகவேண்டும் மனித தர்மம் வளரவேண்டும் என்று நினைத்தார். பிற்பட்ட சமுதாயத்தினருக்குப் புதிய வடிவம் கொடுத்த தமிழ்நாட்டின் பெருமையை இந்தியா முழுவதும் நிலைநாட்டினார்.''

அடுத்து உரையாற்றிய திரு அகிலன் அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டார்.

''நாட்டு மக்களிடம் உண்மையான அன்பு வைத்திருந்த தலைவர் அவர். அவருக்குப் பேசத் தெரியாது; எழுதத் தெரியாது என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் அவருக்கு ஒன்றுமட்டும் நன்றாகத் தெரிந்திருந்தது. மக்களை - இளைஞர்களை ஒன்று திரட்டி வெள்ளையரை எதிர்த்துப் போராடத் தெரிந்திருந்தது. பற்றற்ற வாழ்வும் உயர்ந்த சிந்தனையும் அவரிடம் இருந்தன.

பின்னர் சிறப்புரையாற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், தமது உரையில் தெரிவித்ததாவது:

''பெருக்கத்துள் வேண்டும் பணிவு என்பதற்கு அடையாளமாக அடக்கக் குணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் காமராஜர்.

''தமது நேரத்தை-நினைப்பை-அறிவை-ஆற்றல் திறனை-நாட்டுக்குப் பயன்படச் செய்தவர் அவர்.



திரு. நெ. து. சுந்தரவடிவேலு



திரு. நா. மகாலிங்கம்



திரு. எஸ். வி. சிட்டிபாபு



திரு. கு. ஈஸ்வரன்



திரு. அகிலன்

விடிவெள்ளி அவர்; தலைவர்களுக்கெல்லாம் தலைவர் அவர்''

அடுத்து உரையாற்றிய திரு கு. ஈஸ்வரன் தெரிவித்தார்:

''இந்தியநாடு இன்றும் ஒரே நாடாகக் காட்சியளிக்கிறது என்றால் அதற்குக் காரணம் காமராஜர் அவர்கள் ஆற்றிய அருந்தொண்டுதான்!''

பின்னர் உரையாற்றிய திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் தெரிவித்ததாவது;

''காமராஜரின் தியாக உள்ளமும், ராஜதந்திரமும் நம்மால் எளிதில் மறக்க இயலாதது. அவர் ஏழை எளிய மக்களின் நெஞ்சங்களில் நல் முத்தாகத் திகழ்ந்தார்.

''உலகத்தைப்புரிந்துகொண்ட, மக்கள் மனத்தைப் புரிந்து கொண்ட - அவர்களுக்கு எது வேண்டும்,- எப்போது வேண்டும் என்பதை எல்லாம் தெரிந்து கொண்ட-மேதை அவர்.

''நீதி, நேர்மை, உண்மை எக்காரணம்கொண்டும் கெட்டுவிடக் கூடாது; அநியாயத்திற்குத் துணை போகக் கூடாது; ஒருவருடைய அநியாயம் பலருடைய வாழ்க்கைக்குத்தீங்கைஏற்படுத்தி விடக்கூடாது என்ற கருத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் காமராஜர்.

''சமத்துவம், சமதர்மம், ஜனநாயகம், மூன்றும் வெற்றிபெற அவர் உறுதுணையாக நின்றார். எதையும் வெளிப்படையாகச்



திருமதி சுலோசனா சம்பத்

சொல்பவர், காந்திய வழியில் சென்று-காந்திய நெறியில் நின்று புகழ் பெற்றவர் காமராஜர். கலந்துரையாடல் மூலமாக எந்தப் பிரச்சினையையும் சுமுகமான முறையிலே தீர்க்க முடியும் என்ற கருத்துக் கொண்டவர்; அதுதான் ஜனநாயகத்திற்கு உகந்தது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துத் தொண்டாற்றியவர். அதனால்தான் அனைவரின் நெஞ்சத்திலும் நீக்கமற நிறைந்திருந்தார்.''

பின்னர், காமராஜர் அவர்களின் திருவுருவப்படத்தை மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை இணை அமைச்சர் திரு ஆர்.வி.சுவாமிநாதன் அவர்கள் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார். தமது உரையில் அவர் குறிப்பிட்டார்:

''காமராஜர் அவர்கள் தொண்டிற் சிறந்தவர்; அவரால் வ்சீகரிக்கப் பெற்றவர்கள் ஏராளம். அவருக்குப் பின்னால் சென்று தொண்டு செய்யத் தயாரானவர்கள் பல்லாயிரக் கணக்கானோர் ஆவர். 'காமராஜர் இந்தியா எங்கும் அதிசயிக்கத்தக்க அளவில் ஆட்சி நடத்தினார் என்றால் அவரிடம் இருந்த பொது அறிவு தான் காரணம். அவருக்கு அபாரமான ஞாபக சக்தி இருந்தது.

''தமிழ்நாட்டில் எந்தக் கிராமத்திற்குப் போனாலும் அங்கே காமராஜருக்குத் தெரியாத ஆட்களே கிடையாது. கட்சி வேற்

றுமையின்றி அனைவரையும் விசாரிப்பார். எளிய வாழ்வு வாழ்ந்தார். நேருவிற்குப் பின்னர் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றியவர்.

''காமராஜர் கல்விக்கு முதலிடம் கொடுத்து ஆட்சி செய்து வந்தார். அந்த வழியிலே இன்று தமிழக முதல்வர் - புரட்சித் தலைவர் அவர்கள் கல்விக்கு 265 கோடி ரூபாய் செலவு செய்து வருகிறார். காமராஜர் விட்டுச் சென்ற பணிகளைத் தமிழக முதல்வர் நிறைவேற்றி வருகிறார்.''

அடுத்து, நிறைவுரை ஆற்றிய மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் குறிப்பிட்டார்:

''சில காரியங்கள் நாம் விரும்பியோ, விரும்பாமலோ சிலநேரங்களில் நடைபெற்று விடுகின்றன. காமராஜர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவரது செயல்களைப் புரிந்து கொள்ளாமல் மறுத்திடும் வகையில் பதில் அளித்து வந்தோம் என்பதைச் சொல்வதில் வெட்கப்படத் தேவையில்லை. நானும் கூட ஒரு காலத்தில் எப்படியெல்லாமோ பேசியிருக்கிறேன், பெருந்தலைவரைக் குறித்து-ஒருவர் சில பிரச்சினைகளை மக்கள் மன்றத்தின் முன்னே வைக்கும்போது - சில விவரங்களை வைக்கும்போது அப்படி வைப்பவர்களின் வயதைக் கூடமறந்து விமர்சனம் செய்யும் நிலை ஏற்படுகிறது; அதுதான் ஜனநாயகம்.

''பெருந்தலைவர் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் எந்தப் பிரச்சினை எழுந்தாலும், காமராஜரது கருத்தை எதிர்பார்க்கும் நிலைமை இருந்தது. அவர் என்ன சொல்கிறார் - என்ன செய்கிறார் என்பதை எதிர்பார்த்த சூழ்நிலை இருந்தது. இன்று அப்படி இல்லை. இது ஏமாற்றம் தான். அந்த அளவு தனிப்பட்டவர் இல்லை என்றாலும் பலர் சேர்ந்து ஒன்றுபட வேண்டும் என்பதற்கு இந்தப் பிறந்த தின விழா, வழி வகை வகுப்பதைச் சொல்லித் தருகிறது.

''அவர் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற சில விபரீத நிகழ்ச்சிகளுக்குப் பல்வேறு விமரிசனங்கள் ஏற்பட்டதுண்டு; திறனாய்வுகள் நடந்ததுண்டு; ஆனால் அது போன்ற நிகழ்ச்சிகள், மேற்கொண்டு பரவாமல் அவர் தடுத்தார் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

''ஏழ்மையைப் போக்க, அநியாயத்தைப் போக்க, தர்மத்தைக் காக்க அவர் போராட்டங்களை ஏற்றுக் கொண்டார். கட்சியைக் காப்பாற்றுவதற்காகப் போராட்டங்கள் நடத்தினால், ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

''அரசியலில் ஒழுங்கு வேண்டும்; கட்டுப்பாடு வேண்டும் என்பதைக் காமராஜர் ஏற்றுக் கொண்டார். எந்த ஜாதிக்கும் அவர் வேண்டப்பட்டவர் என்று குறிப்பிட்டு விட முடியாது. யாரைக்கொண்டு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து காண்பித்தார்; எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்திருக்கிறார்.

''சொன்னதைச் செய்வது என்பது எளிதல்ல; காமராஜர் மக்களிடம் சொன்னதைச் செய்து முடித்தார். செய்யமுடிந்ததையே சொல்லில் முழங்கினார். மக்களிடம் உண்மையையே சொல்ல வேண்டும் என்று அவர் விரும்பினார். அவரது துணிச்சல், அவரது நேர்மை எல்லோருக்கும் வர வேண்டும். தமிழகத்தை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தவர் அவர்.''

மாண்புமிகு முதல்வரின் சிறப்புரைக்குப் பின்னர், செய்தி மக்கள் தொடர்புத்துறைத் துணை இயக்குநர் திரு கிருஷ்ணபாரதி அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே நிறைவேறியது. பெருந்தலைவரின் பிறந்த நாள் விழா-அனைவரின் உள்ளத்திலும் நிறைந்த விழாவாக மலர்ந்தது என்றால் அது மிகையல்ல.

## தமிழ்நாடு அரசைப் பாராட்டி, மத்திய அமைச்சர் கடிதம்

மத்திய அரசின் மாண்புமிகு திட்டம் மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் திரு நாராயண் தத் திவாரி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், கொத்தடிமை முறை ஒழிப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு சிறப்பாக மேற்கொண்டதைப் பாராட்டி உள்ளார்கள். அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது :

''கொத்தடிமை முறையை நமது நாட்டிலிருந்து அறவே ஒழிப்பது குறித்தும், அந்த மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்தும், தேசிய அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்ற தங்களது மாநிலம் எடுத்துள்ள 'முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். தங்களது அரசு மேற்கொண்ட முயற்சிகள் நிச்சயமாக - பாராட்டத்தக்கதாகும்.''

## பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூரில் அமைய உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் தேதி துவக்கி வைக்கப்படும்.

இந்தப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கான செயல்களைக் கவனிக்க சென்னையில் தலைமை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பக்கட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு திரு. சிவ குருநாதன் அவர்கள் தனிஅலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 'வீட்டிற்கு ஒரு மரம்' வளர்க்கும் திட்டம்

''வீட்டிற்கு ஒரு மரம்'' வளர்க்கும் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த அரசு நிலங்களில் வீட்டு மனைகள் ஒப்படை செய்வதில், ஒப்படைதாரர் ஒவ்வொருவரும் அவரவர் வீட்டில் காலியாக விடப்பட வேண்டிய நிலத்தில் குறைந்தது ஒரு மரமாவது நட்டுப் பராமரித்து வரவேண்டும் என்பதொரு நிபந்தனை புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

30-5-81 காலை 8 மணிக் கெல்லாம் நாங்கள் தயாரானோம். அதிகாரிகள் எங்களை அன்புடன் வட்டாட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர். பத்திரிகையாளர் குழுவுடன் கலந்து கொள்வதற்காக ஆர்வத்துடன் முதல் நாள் இரவே காரைக்குடிக்கு வந்து தங்கியிருந்த இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பாண்டே எங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.



பின்னர், முகவை மாவட்டத்தில் வறட்சியின் கோரப்பிடியால் சிக்கித் தவிக்கும் மக்களின் துயரைப் போக்க அரசு போர்க்கால அடிப்படையில் எடுத்துள்ள நடவடிக்கைகளைத் திரு பாண்டே எங்களுக்கு விளக்கிக் கூறினார்.

வறட்சியானாலும் சரி, வெள்ளம் அல்லது புயலானாலும் சரி, எது வந்தாலும் முதலில் பாதிக்கப்படுவது முகவை மாவட்டம் தான். இதை உணர்ந்து அரசு பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று கூறிய திரு பாண்டே இப்போதைய வறட்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வசதிகளை மக்களுக்குச் செய்து தரும் வகையில் நாங்கள் காரியமாற்றி வருகிறோம் என்று ஆட்சித் தலைவர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

முகவை மாவட்டத்தில் நிரந்தரக் குடிநீர்த் திட்டத்தின் அடிப்படையில் 35 இலட்ச ரூபாய் செலவில் 3777 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 11.54 இலட்ச ரூபாய் செலவில், சமுதாயக் கிணறுகள், மற்றும் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தும் பணி, புதிதாக உறைக் கிணறுகளை அமைக்கும் பணி நடந்து வருகிறது. 4.23 இலட்ச ரூபாய் செலவில் சாலைகள் பழுது பார்க்கப்பட்டுவருகின்றன. 9.94 இலட்ச ரூபாய் செலவில் பொதுப் பணித்துறையின் கீழ் கண்மாய்களுக்கான மராமத்துப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும், திரு. பாண்டே குறிப்பிட்டார். முகவை மாவட்டத்தின் கிழக்குப் பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறிய அவர், மாவட்டத்தில் உள்ள 7,300 குளங்களைச் சீர்படுத்த 2 கோடியே 55 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

முகவை மாவட்ட வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 5 கோடி ரூபாயைத் தமிழக அரசு ஒதுக்கியுள்ளது என்று கூறிய அவர், அதில் பெருந் தொகை குடிநீர்த் திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட்டு வருகிறது என்றும் கூறினார். இங்குள்ள மக்கள் ஊருணி (ஏரி) தண்ணீரைத்தான் விரும்பிக் குடிப்பதால் ஊருணிகளை ஆழப்படுத்த 13 இலட்ச ரூபாயை ஒதுக்கியுள்ளோம் என்று திரு. பாண்டே கூறினார். மாவட்டம் முழுவதும் 280 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த மாவட்ட ஆட்சித் தலைவர், வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு 15 இலட்ச ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# வறட்சி நிவாரணப் பணிகள்

## இராமநாதபுர மாவட்டம்

— ஆனந்தன்





உரிய நேரத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டதால் பட்டினிச் சாவு எதுவும் நிகழவில்லை என்று கூறிய திரு பாண்டே மாவட்டம் முழுவதும் அத்தியாவசியப் பண்டங்கள் நியாய விலையில் வினியோகிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

கலந்துரையாடல் முடிந்ததும் காலை 9.45 மணிக்கு வறட்சிப் பகுதிகளைப் பார்வையிடப் புறப்பட்டோம். நாங்கள் எங்கள் பேருந்தில் மளமள என்று ஏறினோம். எங்களோடு முட்டி மோதி ஏறிய திரு பாண்டே முன் சீட்டில் அமர்ந்து சொண்டு போகலாமா? என்று கூறியதும் எங்களுக்கு ஏற்பட்ட வியப்பு அடங்கச் சில நிமிடங்கள் பிடித்தன.

முதலில் நாங்கள் தேவகோட்டைப் பகுதியில் 35 ஆயிரம் ரூபாய் செலவில் 200 அடி ஆழத்தில் தோண்டப்படும் குழாய்க் கிணற்றைப் பார்வையிட்டோம். எந்தவித ஆடம்பரமோ? பந்தாவோ இல்லாமல் எங்களோடு நெருக்கியடித்துக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரும் கிணற்றைப் பார்வையிட்டார்.

பின்னர், நாங்கள் முல்லிகுண்டு என்ற கிராமத்தை அடைந்ததும் கிராம மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் காரை மொய்த்துக் கொண்டனர். ஆனால் ஆட்சித் தலைவர் பஸ்சில் இருந்து இறங்கியதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர்!

170 அடி ஆழத்தில் தோண்டப்பட்ட ''கைப் பம்பை'' ஆட்சித் தலைவர் அடித்ததும் தண்ணீர் பீறிட்டுக்கொண்டு வந்தது. அப்போது அருகில் நின்று கொண்டிருந்த பெண்கள் ''ஐயா நாங்கள் கடந்த பல ஆண்டுகளாகப் பல மைல் தூரம் சென்று குடிநீர் எடுத்து வந்தோம். இப்போது இங்கே குழாய் (பம்ப்) போடப்பட்டது; எங்களது கஷ்டத்தைப் போக்கிவிட்டது. இந்தக் குழாயைப் போட்டதற்காக ஊர் மக்கள் சார்பில் நாங்கள் உங்களுக்கு நெஞ்சார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.'' என்று கண்ணீர் மல்க கூறினார்கள். உடனே அவர் குறுக்கிட்டு ''இதை நான் போடவில்லை அம்மா, அரசு போட்டது, அதற்குத்தான் நன்றி கூற வேண்டும்,'' என்று மழலைத் தமிழில் கூறியதும் இதைப் போட்ட மவராசன், நல்லா இருக்கணும் என்று பெண்கள் உணர்ச்சி பொங்க கூறியது எங்கள் மனத் திரையை விட்டு இன்னும் அகலவில்லை. நீண்ட தூரம் சென்று தண்ணீர் எடுப்பதால் பெண்கள் பட்டு வரும் துன்பம் இப்போது நீங்கியதும் உணர்ச்சியை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை.

அதன் பின் அருகிலிருந்த ஊருணியை 35 ஆயிரம் ரூபாய் செலவில் ஆழப்படுத்தும் பணியையும் நாங்கள் பார்வையிட்டோம். எங்களது தாகத்தைத் தணிக்கும் வகையில் அவ்வூர் மக்கள் அன்புடன் இளநீர்க் காய்களை வழங்கினார்கள்.

அதையடுத்து, கோடிக் கோட்டைச் சாலையை அகலப்படுத்தும் பணியையும், தோவணி ஆயக்கட்டுக் குளத்தை ஆழப்படுத்தும் பணியையும் நாங்கள் பார்த்தோம். சின்னக் கிராமங்கள், மாவடுதிக் கோட்டை, ஆகிய பகுதிகளில் இணைப்பு முறையில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளிலிருந்து 90 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருவதைத் தேவகோட்டை உதவி ஆட்சித் தலைவர் திரு கக்கர், மாவட்ட வளர்ச்சி அதிகாரி, திரு துரைராஜ், நிர்வாகப் பொறியாளர் திரு லட்சுமண சாமி, ஆகியோர் எங்களுக்கு விளக்கிக் கூறினார்கள். இத்திட்டத்தின் மூலம் 65 ஆயிரம் மக்கள் பயனடைந்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.





களதூத்திமங்கலம் கண்மாய்க்கரையைப் பலப்படுத்தும் பணியையும் டி. டி. சாலையிலிருந்து கருங்களத்தூர் வரை ரூ. 8 ஆயிரம் செலவில் போடப்பட்டுவரும் ஆதிதிராவிடக் காலனி இணைப்புச் சாலை பணியையும் அடுத்தடுத்து நாங்கள் பார்த்தோம்.

ராஜசிங்கமங்கலம் ஒன்றியத்திலிருந்து டிராக்டர்கள் மூலம் 19 கிராமங்களுக்குக் குடிநீர் சப்ளை செய்வதை ஆட்சித்தலைவர் எங்களுக்கு விளக்கினார். ராஜசிங்கமங்கலத்தில் 40ஆயிரம் ரூபாய் செலவில் தோண்டப்படும் கிணற்றுப் பணியையும் நாங்கள் பார்வையிட்டோம்.

தமிழ்நாட்டிலேயே இரண்டாவது மிகப்பெரிய ஏரியான ராஜசிங்கமங்கலம் கண்மாயைப் பிறகு நாங்கள் சென்று பார்த்தோம். கண்மாய் மத்தியில் ஒரு பெரிய பாலம் அமைக்கப்பட்டுள்ளது. நீண்ட தூரம் பறக்கக் கூடிய 'நாரை' என்னும் பறவை இனத்தாலேயே இந்த ஏரியைக் கடக்க முடியாமல் தங்கித் தங்கிச் செல்லுமாம். 45 கண்மாய்களைச் சேர்த்து உருவான இந்த ஏரி உண்மையிலேயே பெரிய ஏரியாகும். கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஏரியின் மறுகரையை நம்மால் காண இயலவில்லை.

பாலத்திற்கு ஒரு புறம் சமுதாயக் காடுகள் திட்டத்தின் கீழ் கருவேல மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. மறு கரையில் ஆடுகள் மேய புல் இல்லாத நிலையில் ஏரியினுள் கருவேல மர நிழலில் சுருண்டு, சுருண்டு கூட்டம் கூட்டமாகப் படுத்துக் கிடக்கும் காட்சி நம் மனத்தை உருக வைக்கிறது. இந்நிலையை மாற்றும் சக்தி இயற்கையிடம்தான் உள்ளது என்பதை உணர்ந்து நாங்கள் வானத்தை ஒருமுறை அண்ணாந்து பார்த்துவிட்டு எங்கள் வண்டியில் ஏறினோம். ஏரியின் கரைகள் தற்போது பலப்படுத்தப்பட்டு வருகிறது.

அடுத்து, நாங்கள் சாலை, கிராமம் இராதாபுரி, சிங்கராயபுரம், புலியூர், கேபிரியேல்புரம் பகுதிகளில் நடந்து வரும் வறட்சி பணிகளைப் பார்வையிட்டுபேருந்துதிரும்பிக்கொண்டிருந்தபோது, பலத்த மழை எங்களை எதிர் கொண்டு அழைத்தது. முகவை மாவட்டத்தில் கடந்த 10 நாட்களாகவே நல்ல மழை பெய்து வருவதாக அதிகாரிகள் எங்களிடம் தெரிவித்தார்கள். அதை நிரூபிப்பது போல ஆங்காங்கே சிறு சிறு குட்டைகளில் தண்ணீர் தேங்கி நின்றதுடன் சாலை ஓரங்களிலும் தண்ணீர் தேங்கிக்கிடந்தது. இளையாங்குடி ஒன்றியத்திலிருந்து வைகை ஆற்று நீரை 19 கிராமங்களுக்கு டிராக்டர் மூலம் சப்ளை செய்யும் பணியையும் நாங்கள்பார்வையிட்டோம்.



பின்னர், திருவரங்கிஊருணியை 5 ஆயிரம் ரூபாய் செலவில் ஆழப்படுத்தும் பணியையும்இடையாங்குடியிருப்பில் உறைக் கிணறு அமைக்கப்பட்டு இருப்பதையும் மாவட்ட வளர்ச்சி அதிகாரி திரு சுப்பிரமணிய பிள்ளை எங்களுக்கு விளக்கினார்.

அடுத்து, நாங்கள் 100 ஏக்கா நில்ப்பரப்பில் அமைந்துள்ள நரிக்குடி கண்மாய் கரையை 30 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தும் பணியையும், ஆச்சனேரிப்பட்டி கிராமத்தில் 6 கிலோ மீட்டர் தூரம் ரூ. 10 ஆயிரம் செலவில் போடப்படும் சாலைப் பணியையும் கண்டோம். அதன் பின் 14,500 அடி நீளமுள்ள திருச்சுழி கண்மாய் கரையை 49 ஆயிரத்து 500 ரூபாய் செலவில் பலப்படுத்தும் பணியை பார்வையிட்டு விட்டு காரியாப்பட்டியை நோக்கி விரைந்தோம். வழி நெடுக நல்ல மழை பெய்து கொண்டே இருந்தது.

காரியாப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆட்சித் தலைவர் எங்களோடு அமர்ந்து காபி அருந்தியபின் எங்களுடைய விருப்பப்படி எங்களோடு புகைப்படம் ஒன்றும் எடுத்துக் கொண்டார். பிறகு அவர் இனி நீங்கள் மதுரைக்குத்தான் செல்ல வேண்டும். வழியில் வறட்சிப் பணி எதுவும் நடைபெறவில்லை. எனவே, இப்படியே திரும்பிவிடுகிறேன் என்று கூறி எங்களிடமிருந்து விடை பெற்றார்

மாலை 5.30 மணிக்கு நாங்கள் புறப்பட்டு 6.15 மணிக்கெல்லாம் மதுரை மாநகராட்சி தங்கும் விடுதியை வந்து அடைந்தோம்.

(தொடரும்)



# உரவிலைத் தள்ளுபடித் திட்டம்

தமிழக அரசு விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மையைக் கருதி அவர்களின் உற்பத்திப் பொருளான குறுவை மற்றும் சம்பா நெல்லை சென்னையில் இயங்கிவரும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் சமீப காலத்தில் நல்ல விலைக்கு (Reasonable Price) கொள்முதல் செய்தது.

அதே போன்று விவசாயத்திற்கு தேவையான உரங்களையும் குறைந்த விலைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தயாரிப்பான பாமணி 17 : 17 : 17 உரத்தில் ஒரு மூட்டை விலை 112.50 லிருந்து 108.50 ஆகவும் (தள்ளுபடி ரூ. 4.00) பாமணி 12 : 6 : 6 'உரத்தில் ஒரு விலை ரூ. 82.50லிருந்து ரூ. 78.75 ஆகவும் (தள்ளுபடி ரூ. 3.75) கலப்பு உரத்தின் ஒரு மூட்டை விலை ரூ. 64.80 (தள்ளுபடி ரூ. 3.00) லிருந்து ரூ. 61.80 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது ரூ. 103.47-க்கு விற்கப்பட்டு வரும் ஒரு மூட்டை யூரியாவின் விலை ரூ. 100.47 (தள்ளுபடி ரூ. 3.00) ஆக குறைக்கப்பட்டிருக்கிறது.

அதே போன்று ரூ. 113.72 ஆக இருக்கும் ஒரு மூட்டை காம்ப்ளக்ஸ் 17 : 17 : 17 விலை தற்போது ரூ. 110.00 ஆக (தள்ளுபடி ரூ. 3.72) குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் ரூ. 134.42க்கு விற்கப்பட்டு வரும் ஒரு மூட்டை காம்ப்ளக்ஸ் 14 : 28 : 14ன் விலை ரூ. 130.42 ஆகவும், (தள்ளுபடி ரூ. 4.00) ரூ. 129.30-க்கு விற்கப்பட்டு வரும் இப்கோ 10 : 26 : 26ன் ஒரு மூட்டை விலை ரூ. 125.30 (தள்ளுபடி ரூ. 4.00) ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலை குறைப்பு 10-7-81 முதல் நடைமுறைக்கு வருகிறது. கூட்டுறவு சங்கங்களில் உரங்களை ரொக்கத்தில் வாங்குவோருக்கும் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களினால் அனுமதிக்கப்பட்ட கடன் தொகைக்காக வழங்கும் உரங்களுக்கும் மேற்கண்ட விலைக் குறைப்பு பொருந்தும்.

இச்சலுகை 30-11-81 வரையில் அமலில் இருக்கும். விவசாய மக்களின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு இச்சலுகை அளிக்கப்படுகிறது. எனவே, விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் தங்களுக்குத் தேவையான உரங்களை மேற்படி குறைக்கப்பட்ட விலைகளில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தினால் தமிழகத்தில் இயங்கிவரும் கூட்டுறவு விவசாய சேவை சங்கங்கள் மூலமாகப் பெற்று பயனடையுமாறு இவ்வரசு விழைகிறது.

தஞ்சை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பன்னை இணையம் மேலே குறிப்பிட்ட உரங்களை (பாமணி நீங்கலாக) விற்பனை செய்யாததால் இந்தச் சலுகை அவ்விரண்டு மாவட்டங்களுக்கும் பொருந்தாது.

**உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தினால் வட்டியில் 2 சதம் தள்ளுபடி**

குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக விவசாய சேவைக்கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களை ஊக்குவிக்கும் திட்டம் வேண்டுமென்று அரசு கருதுகிறது. 1981 82-ஆம் ஆண்டில் தமது குறுகிய காலக் கடன்களையும், நடுத்தரக் காலக் கடன் தவணைகளையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு வட்டியில் 2-3 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். அதனால் ஏற்படும் செலவை அரசு ஏற்கும்.

**இயற்கையின் சீற்றத்தால் 1974-75 முதல் 1977-78 முடிய உள்ள ஆண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குச் சலுகைகள்**

சில விவசாயிகள் 1974-75 முதல் 1977-78 முடிய உள்ள ஆண்டுகளில் வறட்சி அல்லது வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டார்கள். அந்த ஆண்டுகளில், விவசாயிகள் நிலவளவங்கிகளுக்குத்தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. ஆகவே, மாநில கூட்டுறவு நிலவள வங்கி அந்த விவசாயிகள் கொடுக்கவேண்டிய கடன் தவணைகளை ரூ. 302.87 கோடி அளவுக்கு மாற்றியமைத்தது. இதன் பிறகும், விவசாயிகள் தாங்கள் செலுத்த வேண்டிய ஆண்டுத் தவணையுடன் சேர்த்து இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட தவணையையும் செலுத்துவது கடினமானது என கருதப்பட்டது. ஆகவே, தமிழ்நாடு அரசு இதைப் பற்றி இந்திய ரிசர்வ் வங்கி, மத்திய அரசு, வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக்கழகம் ஆகியவற்றுடன் கலந்து ஆலோசித்தது. இதன்படி, 1974-75 ஆண்டு முதல் 1977-78 ஆண்டு முடிய இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கடன்களை ரூ. 92.91 கோடி அளவுக்கு ஒரு தனிக்கணக்கின் கீழ் கொண்டுவர நிலவளவங்கிகள் அனுமதிக்கப்படலாமென தமிழ்நாடு அரசு முடிவு செய்தது.

இவ்வாறு தனிக்கணக்கிற்கு பாதிகப்பட்ட கடன்களை எடுத்துச் செல்வதால், கடனின் தவணைக் காலம் தக்கவாறு நீட்டிக்கப்படும். ஒவ்வொரு தவணையிலும் செலுத்தப்பட வேண்டிய தொகை, முன்பு குறிக்கப்பட்ட தவணைத் தொகையைவிட அதிகமாக இருக்காது. கடனைத் திருப்பிச் செலுத்துவதில் விவசாயிக்குக் கூடுதல் பளு ஏதும் இருக்காது. இந்தச் சலுகையைப் பயன்படுத்தி நீண்ட காலக் கடன்கள் பெற்ற விவசாயிகள் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்தி, அரசுக்கும் நிலவள வங்கிகளுக்கும் ஒத்துழைப்பு கொடுப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

# ஆதிதிராவிடர்களுக்குக் கல்வி வசதி

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் ஆகியோரின் கல்வி வளர்ச்சிக்காக 15 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மாண வர்களுக்கு உதவித் தொகை மற்றும் பள்ளி கள், விடுதிகள் அமைத்தல் ஆகியவை முக்கிய மாக அமைகின்றன. பள்ளி இறுதித் தேர்வுக்கு முன்னரும் அதற்குப் பின்னர் மேல்படிப்பிலும் தகுதி வாய்ந்த அனைத்து மாணவர்களுக்கும் உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்குக் குறிப்பிட்ட வரு மான வரம்புக்கு உட்பட்டு மத்திய, மாநில அரசுகள் உதவித்தொகை வழங்குகின்றன. பள்ளி மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.




ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பாகப் படிக்கின்ற மாணவர்களுக்கு காந்தியடிகளின் நினைவு விருது, தகுதி மற்றும் வாய்ப்பு விருது அறிவுக்கூர்மை மிக்க மாணவர் விருது என கூடுதலாகச் சிறப்பு உதவித் தொகைகளும் அளிக்கப்படுகின்றன. அதேபோன்று விடுதி களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு எந்த வித வருமான வரம்புமின்றி கடனுதவித் தொகைகள் அளிக்கப்படுகின்றன.

பள்ளி மாணவர்களுக்கு உதவித்தொகை ரொக்கமாக வழங்குவதற்குப் பதிலாக 1977-78ஆம் ஆண்டிலிருந்து புத்தகங்கள் இலவச மாக அளிக்கப்படுகின்றன. சிறப்புக் கட்ட ணங்கள் மற்றும் தேர்வுக் கட்டணங்கள் நேரடியாக கல்விக் கூடங்களுக்குத் தரப்படு படுகின்றன. பெற்றோர்களின் வருமானத் தைக் கணக்கில் எடுக்காமல், ஆதிதிராவிட மாணவர்களுக்கு இயன்ற அளவு பயிற்சிக் கட்டணங்களில் சலுகைகள் அளிக்கப்படு கின்றன.

ஆதிதிராவிடக் குடியிருப்புகளில் குழந் தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு காப்பகத்திலும் மூன்று வயது முதல் ஐந்து வயது வரையுள்ள சுமார் 70 குழந்தைகள் கவனிக்கப்படுகின்றனர். குழந் தைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் கருவுற்ற தாய்மார்களுக்குச் சத்துணவுகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு விளை யாட்டுக்களும், நல்ல பழக்க வழக்கங்களும் குழந்தைநல அமைப்பாளர் மற்றும் அவரது உதவியாளர் மூலம் கற்றுத்தரப் படுகின்றன.

பள்ளித் துணை ஆய்வாளர் மூலமாக குழந் தைகளுக்கான உணவுப்பொருட்களை 'கேர்' நிறுவனம் அளிக்கிறது. இதற்கான கட்டட வசதிகளை ஊராட்சி இலவசமாகக் கொடுக் கிறது. ஆதிதிராவிட பழங்குடி வகுப்பினர் நல் வாழ்வுத்துறை ஆதிதிராவிட நலப் பள்ளிகளை மாநிலம் முழுவதும் நடத்தி வருகின்றது. சுமார் 1000 பள்ளிகள் தற்போது உள்ளன. இந்தப் பள்ளிகளில் 1½ இலட்சத்திற்கும் மேற் பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். சீருடை பாடப் புத்தகங்கள் மற்றும் பிற சாதனங்கள் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படு கின்றன.

இந்தப் பள்ளிகளில் மதிய உணவும் அளிக் கப்படுகின்றது. உணவு மற்றும் தங்கும் வசதி கொண்ட ஏராளமான விடுதிகளை அரசு அமைத்துள்ளது. அரசு கட்டடம் கிடைக்காத இடங்களில் தனியார் கட்டடங்கள் வாட கைக்கு எடுக்கப்பட்டு விடுதிகள் நடத்தப்படு கின்றன. இத்தகைய விடுதிகளில் சுமார் 40,000 ஆதிதிராவிட மாணவர்கள் தங்கியுள் ளனர். மேற்படிப்பைத் தொடருவதற்காக இடைக்கால மானியங்களும் அளிக்கப்படு கிறது. ஆதிதிராவிட, பழங்குடி வகுப்பு மாண வர்களுக்குத் தேர்வுக்கு முன்னால் மூன்று திங கள் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு கல்லூரியிலும் நடத்தப்படுகின்றன. இந்த வசதிகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படவிருக்கின்ற பிற நடவடிக்கைகளும் ஆதி திராவிடக் குழந்தைகள் அதிக அளவில் கல்வி கற்கவும், தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளவும் ஓர் ஈர்ப்புச்சக்தியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மாவட்ட வளர்ச்சிப் பணிகள் :

# திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள ஊராட்சிச் சாலைகளை சரளை மண் மற்றும் கப்பி பரத்தி மேம்பாடு செய்வதற்கும், பாலங்கள் கட்டுவதற்கும் 1981-82ம் ஆண்டு இதுவரை ரூ. 15,63,000 மதிப்பீட்டில் 52 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு ரூ. 11.55 இலட்சம் வரப்பெற்று ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

### குடிநீர் வழங்கல்

கிராமங்களின் குடிநீர் வசதிக்கென 1981-82ம் ஆண்டு இதுவரை 5 குடிநீர் கிணறுகள் வெட்டுதல், 23 மேல்நிலை மற்றும் தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், மற்றும் ஆதி திராவிட காலனிகள் 51க்குக் குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்வதற்கு 79 வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடாக வரப்பெற்ற தொகை ரூ. 25 இலட்சம் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

### பள்ளிக்கட்டடம்

ஊராட்சி ஒன்றியங்களில் தொடக்கப் பள்ளிகள் மற்றும்; நடுநிலை 29க்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 16.16 இலட்சம் செலவில் வேலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடாக வரப்பெற்ற தொகை ரூ. 10.00 இலட்சம் ஊராட்சி ஒன்றியங்களுக்காகப் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.



இம்மாவட்டத்திற்குதன்னிறைவுத் திட்டப்பணிகளை நிறைவேற்றுவதற்காக முதல் தவணையாக ரூ. 6,150 இலட்சம் அனுமதிக்கப்டுள்ளது. இம்மாவட்டத்தில் 1,654 பணிகள் மணிகண்டம், துறையூர், தாத்தையங்கார் பேட்டை, புள்ளம்பாடி, தாந்தோணி, அரவக்குறிச்சி, மணப்பாறை, அரியலூர், பெரம்பலூர் மற்றும் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியங்களில் எடுக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு 31.3.1982க்குள் நிறைவேற்றப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | குடிநீர்வசதி | 204 |
| 2. | இணைப்புச் சாலைகள் 1 | 617 |
| 3. | பள்ளிக் கட்டடங்கள் | 108 |
| 4. | ஆதி திராவிடர் குடியிருப்பு மயான சாலை வசதி | 70 |
| 5. | சிறுபாசன பணிகள் | 91 |
| 6. | தாய்சேய் நல விடுதிகள் | 34 |
| 7. | ஊரக மருந்தகங்கள் | 9 |

### சிறந்த ஒன்றியம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1979-80ம் ஆண்டில் சிறந்த ஊராட்சிஒன்றியமாகதிருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டிலும் இதே ஒன்றியம் சிறந்த ஒன்றியமாக தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### குழந்தைகள் நல மையம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வறட்சி துயர் துடைப்புத் திட்டத்தின்கீழ் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகட்கும், கர்ப்பிணி தாய்மார்களுக்கும் ஊட்டச் சத்துணவு வழங்குவதற்கென்று இம்மாவட்டத்தின் 150 மையங்கள் துவங்க அரசு ஆணையிட்டுள்ளது. இப்பணிக்கென்று இம்மாவட்ட ஒதுக்கீடு ரூ. 9,92,700 ஆகும். ஒரு மையத்தின் ஒதுக்கீடு ரூ. 6,618- ஆகும்.

### பட்டினிச் சாவு தடுப்பு

பட்டினியால் சாகும் நிலைமையை தவிர்க்க ,நபர் ஒன்றுக்கு ரூ. 100-வீதம் நிதி உதவி அளிக்க இம்மாவட்டத்திற்கு 1981-82 ஆண்டின் ஒதுக்கீடாக ரூ.15,500 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அரிசனங்களுக்கு ஈமச்சடங்கிற்கு நிதி உதவி

அரிசனங்களுக்கு ஈமச்சடங்கிற்கு ரூ. 50- வீதம் அரசு நிதி உதவி அளிப்பதற்காக இம்மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டிற்கு ரூ. 31,000 கிடைக்கப் பெற்றுள்ளது.




### பள்ளிக்கூட புத்தகத்திற்கு அரசு உதவி

உயர் நிலைப்பள்ளிகளில் பயிலும் ஆதவரற்ற ரூ. 3,000-க்கும் குறைவான வருட வருமானம் உள்ள விதவைகளின் குழந்தைகட்கு புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் வாங்க 1978-79 லிருந்து அரசு நிதி உதவிஅளித்து வந்தது. இந்த கல்வி ஆண்டு முதல் மேல்நிலைப்பள்ளிப் படிப்பிற்கும் விதவைகளின் குழந்தைகட்கும் தலா ரூ. 100 -வீதம் இம்மாவட்டத்திற்கு 70 குழந்தைகளுக்கு நிதி உதவி அளிக்க அரசு அனுமதித்துள்ளது.

### புக் கீப்பிங், அக்கவுண்டன்சி பயில அரசு உதவி

ஏற்கெனவே டைப்ரைட்டிங் ரூ. 3,000 -வருமானத்திற்குட்பட்ட ஏழைப்பெண்களுக்கு ரூ. 150-வீதம் அரசு நிதி உதவி அளித்து வந்தது. நடப்பு ஆண்டு முதல் ''புக் கீப்பிங்'' மற்றும் ''அக்கவுண்டன்சி'' கற்றுக் கொள்ள ரூ. 165-வீதம் 70நபர் கட்கு இம்மாவட்டத்திற்கு ரூ. 11,500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பிற்பட்டோர் நலத்துறை

பிற்பட்டோர் நலத்துறையின் சார்பாக திருச்சி நகரம் உறையூரில் கல்லூரி மாணவிகளுக்காக விடுதி ஒன்று நடத்தப்படுகிறது. இதில் சேரும் கல்லூரி மாணவிகளுக்கு உணவும், தங்கும் வசதியும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

சேரும்மாணவிக்ளின பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 25,00க்கு மேல் இருக்கக் கூடாது.

● தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தனது முதல் பத்தாண்டுகாலப் பணியை நிறைவேற்றி, நூற்று இருபது லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழக மக்களின் தாகத்தைத் தீர்த்துள்ளது. தற்பொழுது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தனது இரண்டாவது பத்தாண்டான, "அனைத்துலக குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் வழங்கும் பத்தாண்டில் (1981-90)" அடியெடுத்து வைத்து, "கி.பி. 2000க்குள் அனைவருக்கும் நல்வாழ்வு" என்ற அனைத்துலக இலட்சியத்தை தமிழக மக்கள் அடைய தொடர்ந்து பணியாற்ற இருக்கின்றது.

# செய்திக் கொத்து



● பார்வையற்றோருக்கான கிறிஸ்தவ நிறுவனத்தின் தமிழ்நாட்டு அமைப்பு (Christian Foundation for the Blind) பெரெயிலி எழுத்து முறையில் அண்மையில் திருக்குறள் நூலை வெளியிட்டுள்ளது.

● சோவியத் நாட்டில் உள்ள டாக்டர்களில் 69 சதவீதத்தினர் பெண்கள். ஆசிரியர்களில் 71 சதவீதத்தினர் பெண்கள். எஞ்சீனியர்களில் 50 சதவீதத்தினர் பெண்கள்.

● அமெரிக்காவில் ஒருவர் ஆண்டு ஒன்றுக்குச் சராசரி உண்ணும் முட்டையின் அளவு 300. ஆனால், நம்நாட்டில் ஆண்டு ஒன்றுக்குச் சராசரி ஒருவர் உண்ணும் முட்டையின் எண்ணிக்கை 20 ஆகும்.

● சோவியத் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 32.5 சதவீதத்தினர் (487 பேர்) பெண்கள்.



● மனிதனால் பயன்படுத்தப்படும் நீரில் 80 சதவீதம் விவசாயத்திற்குப் பயன்படுகிறது. உலகில் உற்பத்தியாகும் முப்பது முதல் நாற்பது சதவீதம் உணவுநீர்ப்பாசனத்தையே நம்பியிருக்கின்றது.

● நம்மில் சிலர் நாட்டுக் கோழி முட்டையே சிறந்தது என்று கருதுகின்றனர். இது தவறான கருத்தாகும். முட்டையின் ஓட்டின் நிறத்திற்கும் முட்டையில் உள்ள சத்துக்கும் தொடர்பு உண்டு என்ற தவறான எண்ணம் மக்களிடையே உள்ளது. முட்டையின் ஓடு இளம் மாநிறத்தில் காணப்பட்டால் அதில் அதிகச் சத்துள்ளது என்பர். முட்டையின் மஞ்சள் கரு அதிக மஞ்சளாக இருந்தால் அதிகச் சத்துள்ளது என்றும் எண்ணுகின்றனர். இவை அனைத்தும் தவறான கருத்துக்களாகும்.

கோழிகள் பச்சைப் புல்லைத் தீனியுடன் தின்னும்போது புல்லிலுள்ள சாந்தோப்பில் (Xanthophyll) எனும் ஊட்டச் சத்து பச்சைப் புல்லிலிருந்து மஞ்சள் கருவுக்குப் போவதால் அதிக மஞ்சள் நிறம் அடைகிறது. அத்துடன் 'ஏ', 'டி' உயிர்ச்சத்துக்கள் புல்லிலிருந்து மஞ்சள் கருவிற்குச் செல்லும். ஆனால், கோழிப்பண்ணையில் உயிர்ச்சத்துக்களான 'ஏ' 'டி' போன்றவைகளைத் தீவனத்துடன் செயற்கையாகக் கொடுக்கப்படுவதால் மஞ்சள் கரு அதிக மஞ்சளாகக் காணப்படுவதில்லை. எனினும் ஊட்டச் சத்து நிறைந்து இருக்கும். எனவே முட்டைக் கருவின் நிறத்திற்கும் முட்டையின் சத்துணவிற்கும் தொடர்பு கிடையாது.





கருத்தரிக்காத முட்டைகளைக் காட்டிலும் கருத்தரித்த முட்டைகள் அதிகச் சத்துக் கொண்டவை என்ற எண்ணமும் தவறாகும். ஊட்டச் சத்தில் இரண்டுக்கும் வேறுபாடு இல்லை. கருத்தரிக்கும் முட்டைகள் விரைவில் கெட்டு விடும். பச்சை முட்டை வேக வைத்ததைக் காட்டிலும் செரிக்கும் என்பர். அதுவும் தவறே.

முட்டையை வேகவைக்காமல் யாரும் பச்சையாக உண்ணக் கூடாது. அவிடின் என்னும் புரதம் வேகவைக்கப்படாத வெண்கருவில் உள்ளது. இது தீங்கு விளைவிக்கும் தன்மையுடையது. இது முட்டையில் உள்ள 'பி' உயிர்ச்சத்துப் பிரிவைச் சேர்ந்த பையோடின் என்னும் சத்தோடு கலந்துவிடும். அதனால் பையோடின் உயிர்ச்சத்து தேவையான அளவு கிடைக்காமல் செய்து விடும். முட்டையை வேக வைக்கும்போது அவிடின் தனது செயலை இழந்துவிடும். எனவே, முட்டையை வேகவைத்து உண்ணுதலே சிறந்தது.

● தமிழ்நாட்டிலுள்ள (சென்னை பெருநகர் நீங்கலாக) 702 நகரங்களில் 216 நகரங்களுக்கு ஏற்கனவே குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 63 நகரங்களுக்கு குடிநீர் வழங்கும் வகையில் பணி மும்முரமாக முன்னேறி வருகிறது. மேலும் 423 நகரங்களில் வாழும் 47 இலட்சம் (1981) மக்களுக்கு மட்டுமே குடிநீர் வசதி செய்து தரப்படவேண்டியுள்ளது. குடிநீர் வசதி இருந்தும் தேவையான அளவு இல்லாத 70 நகரங்களுக்குக் குடிநீர் வசதியை விரிவாக்க வேண்டியுள்ளது.

—மாமூலன்

# சிறுவர்க்குப் பயன் தரும் சிறு திரையரங்கு குழந்தைகள் நூலகம்



சென்னை, மாநிலச் செய்தி நிலையத்திலுள்ள சிறு திரை யரங்கு-இப்பகுதியிலுள்ள ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த சிறுவர்களுக்கும், சிறுமி யர்களுக்கும் சிறந்த பொழுது போக்கு இடமாகவும், பொது அறிவைப் பெருக்கிக் கொள்ள வும், விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியை அறிந்து கொள்ள வசதியாகவும் அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசு கல்விக்காக வும், குழந்தைகளின் முன்னேற் றத்திற்காகவும் ஆற்றிவரும் அரும்பணிகளைத் திரைப் படங்கள் மூலம் அறிந்து கொள்ள வும், இச்சிறு திரையரங்கு பெரி தும் செயல்படுகிறது.

அரசு விடுமுறை நாட்களைத் தவிர மற்ற எல்லா நாட்களிலும் மாலை 3.30 மணி முதல் 5.00 மணி வரை திரைப்படம் காண் பிக்கப்படுகிறது.

குழந்தைகளுக்காக இலவசமா கத் திரைப்படம் காட்டும் இத் தகைய திரையரங்கு தமிழ்நாடு அரசால் மட்டுமே நடத்தப்படு கிறது.செய்தி-மக்கள் தொடர்புத் துறை இதனை மேலும் பல வசதிகள் கொண்டதாக அமைக் கும் முயற்சிகளை எடுத்து வரு கிறது.

சிறு திரையரங்கங்கிற்கும், குழந்தைகள் நூலகத்திற்கும் வருகை தரும் மாணவ, மாணவி களைப் பேட்டி கண்டபோது அவர்கள் கூறிய கருத்துக்கள் இங்கே தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன:

மாநிலச் செய்தி நிலையத்தி லுள்ள இந்தச் சிறு திரையரங் கிற்கும், குழந்தைகள் நூலகத் திற்கும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மட்டுமில்லாமல் குடும்பச் சூழ்நிலை காரணமாக பள்ளிப் படிப்பைத் தொடர முடி யாமல் தங்கள் வாழ்வு எப்படி அமையுமோ என்ற மனக் கலக் கத்தோடும், ஏக்கத்தோடும் காலத்தைக் கடத்தும் சிறுவர், சிறுமியர்களும் ஏராளமாக வரு கின்றனர். இதோ, ஒரு சிறுவன். அவன் பெயர் ரவி. அவன் கூறு கிறான்:

ரவி



''நான் திருவல்லிக்கேணி யிலிருந்து வருகிறேன். ஆறாம் வகுப்புவரை படித்திருக்கிறேன். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு என் னுடைய அம்மா இறந்துவிட்டார். பின்பு, ஒரு மாதம் கழிந்தவுடன், எனது தந்தை என்னையும், எனது தம்பி, அக்காவையும் என் பாட்டி வீட்டில் விட்டு விட்டு எங்கேயோ போய்விட்டார்..... இன்று வரை திரும்பி வரவே இல்லை. என் பாட்டியும் தாத்தாவும்தான் எங்கள் மூன்று பேரையும் வளர்த்து வரு கிறார்கள். சாப்பாட்டிற்கே பெரும்பாடு.... இந்தச் சூழ் நிலையில் நான் எப்படிப் பள்ளி யில் படிக்க முடியும்? எனவே, எனது தம்பியும், நானும் கூலி வேலை செய்து கையில் கிடைப் பதைப் பாட்டியிடம் கொடுக் கிறோம். எனக்குப் படிக்க வேண்டுமென்று மிகுந்த ஆசை. உம்....என்ன செய்வது? வேலைக் குப் போகாத நாட்களில் இங்கு வந்து படிக்கிறேன். மேலும் இங்கு காசு கொடுக்காமல் திரைப் படம் பார்க்கும் வாய்ப்பும் கிடைக்கிறது........''

சென்னை மாநிலச் செய்தி நிலையத்தில் அமைந்துள்ள சிறு திரை அரங்கிற்கு (Mini Auditorium) திரைப்படங்கள் காண வரும் பள்ளி மாணவர்கள் என்ன கூறுகிறார்கள்?

இந்து உயர்நிலைப்பள்ளி 7-ஆம் வகுப்பு மாணவன் டி. குமரேசன்.



குமரேசன்

''இங்கு காட்டப்படும் படங்களில் நல்ல பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளன. பல வெளி நாட்டுப் படங்களையும் காண்பிப்பதால், மேலை நாடுகளின் விஞ்ஞான முன்னேற்றத்தையும் தொழில் வளர்ச்சியையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய படங்களைக் காசு கொடுத்துங் கூட, வெளி திரையரங்குகளில் பார்க்க முடியாது. இங்கு நடத்தப்படும் இலவசப் படக்காட்சியின் மூலம் என் போன்ற மாணவர்கள் பெரிதும் பயனடைகிறார்கள்''



பாலகிருஷ்ணன்

திருவல்லிக்கேணி என். கே. டி தேசிய மாணவர்கள் உயர்நிலைப் பள்ளி எட்டாம் வகுப்பு மாணவன் எம். பாலகிருஷ்ணன்.

''நான் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவன். இங்கு நல்ல 'கலர்' படங்களும், கருத்துள்ள 'கார்ட்டூன்' படங்களும் காண்பிப்பதால் எங்களுக்கு வேறு திரையரங்குகளுக்குப் படம் பார்க்கச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதில்லை. இதனால் வேறு திரையரங்குகளுக்குப் படம் பார்க்கச் செல்லக் காசு கேட்டு எங்களது பெற்றோர்களைத் தொந்தரவும் செய்வதில்லை. அவர்களும் நாங்கள் தரமான படங்களை இலவசமாகப் பார்ப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறார்கள்.''

திருவல்லிக்கேணி, தேவி நவ சக்தி நடுநிலைப் பள்ளி ஆறாம் வகுப்பு மாணவன் ஏ. ஆர். சீனிவாசன் :

''எங்கள் பள்ளியில் படம் காட்டும் கருவி இல்லை. எனவே, ஒவ்வொரு நாளும் பள்ளி முடிந்த



சீனிவாசன்

வுடன் மாலை 3.45 மணிக்கு இங்குப் படம் பார்க்க வருகிறேன். எங்கள் பள்ளி ஆசிரியர்களும் இங்கு வந்து படம் பார்க்குமாறு அறிவுரை கூறுகிறார்கள். வேறு திரையரங்குகளில் வெளியிடப்படும் நல்ல திரைப்படங்களையும் எங்களுக்கு இலவசமாக இங்கு காண்பிக்க ஏற்பாடு செய்தால் நல்லது''

திருவல்லிக்கேணி இந்து பாடசாலையில் பயிலும் எம். ஜி. ரஞ்சன் பிரபு:

''எங்கள் வீடு அரசினர் தோட்டத்திலுள்ள அரசினர் குடியிருப்பில் ''எல்'' பிளாக்கில் உள்ளது. நானும், நண்பர்களும் பள்ளி முடிந்தவுடன் மாலை நேரங்களில் வீணாகத் தெருக்களில் சுற்றிக் கொண்டிருப்போம். தற்போது நண்பர்களுடன் இங்குத் திரைப்படம் பார்க்க வருகிறேன். எங்கள் வீட்டில் பெற்றோர்கள், நான் இவ்வாறு ஊர் சுற்றாமல், இங்கு தினமும் ஒழுங்காகத்



ரஞ்சன் பிரபு

திரைப்படம் காண வருவதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறார்கள்.''

சென்னை, அரசினர் தோட்டம்: ஏ. ஐ. டபுள்யூ. சி. துவக்கப்பள்ளி ஆர். அமுதா, 7-ஆம் வகுப்பு:

''தசரா, கிறிஸ்துமஸ், கோடை விடுமுறை நாட்களில் வீட்டில் இருக்கும்போது பொழுதுபோக்குவது மிகப் பெரிய பிரச்சினை. மேலும் இந்த விடுமுறை நாட்களில்தான் நாங்கள் குறும்பு செய்கிறோம் என்று பெற்றோர்களின் கோபத்திற்கு ஆளாவோம் எனவே, மாநிலச் செய்தி நிலை



அமுதா



யத்தில் திரைப்படம் காட்டுவ தால் எங்களால் விடுமுறை நாட் களை மிகுந்த மகிழ்ச்சியாகவும், பயனுள்ளதாகவும் கழிக்க முடி கின்றது.''

சென்னை, மாநிலச் செய்தி நிலையத்திலுள்ள குழந்தைகள் நூலகத்திற்குப் படிக்க வரும் சிறுவர்கள் என்ன சொல் கிறார்கள்?

என். கே. டி. தேசிய ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ரவி என்கிற மாணவன் கூறு கிறான்:





ரவி

''கோடை விடுமுறை நாட் களிலும், இதர விடுமுறை நாட் களிலும் பொது அறிவை வளர்த் துக் கொள்ளப் பெரிதும் பயன் படுகிறது. காசு கொடுத்துப் புத் தகங்கள் வாங்கிப் படிக்கும் அள விற்கு எங்கள் குடும்பத்தில் வசதி இல்லை. எனவே, இந்த நூல கத்திற்கு நானும், எனது தம்பி கந்தசாமியும் தொடர்ந்து படித் துப் பயன் பெற்று வருகிறோம்''

திருவல்லிக்கேணி முஸ்லீம் உயர்நிலைப்பள்ளியைச் சேர்ந்த வன் எம். முஸ்தபாகான் கூறுவ தாவது:

''நான் ஆயிரம் விளக்குப்பகுதி யில் குடியிருக்கிறேன். தினமும் பள்ளி முடிந்தவுடன் குழந்தைகள் நூலகத்திற்கு வந்து படித்த பின்னர் வீடு செல்கிறேன். இங்கு வந்து படிப்பதை எனது பெற் றோர்கள் பெரிதும் விரும்பு கிறார்கள். இதற்கு முக்கியக்



முஸ்தபா கான்

காரணம், இங்கு நல்ல புத்த கங்கள் நிறைய இருப்பதுதான்''

இதே பள்ளியைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு மாணவன் ஏ. சையது முகமது :

''பல்வேறு கலைக் களஞ்சி யங்கள் இந்நூலகத்தில் உள்ள தால், எங்கள் பள்ளியில் தரப் படும் வீட்டுப் பயிற்சிகளைத் தயார் செய்வதற்கு மிகவும் உதவியாக உள்ளது. மேலும், எப்போதும் இது சம்பந்தமாக இந்நூலகத்தில் உள்ளவர்கள் எல்லாவகையான உதவிகளையும் எங்களுக்குச் செய்து தரு கிறார்கள். 5 வயது முதல் குழந்தைகள் படிப்பதற்கு நல்ல புத்தகங்கள் உள்ளதால் என்னு டன் மூன்று தங்கைகளையும் எனது பெற்றோர்கள் இந் நூலகத்திற்கு அனுப்பி வைக்கின் றார்கள்''

''அரசினர் தோட்டத்திலுள்ள ஏ. ஐ. டபிள்யூ. சி. துவக்கப் பள்ளி மாணவி ஜே. மேரி சொல் கிறாள்:

''இந்த நூலகத்தில் 250 ''அமர் சித்ரகதா'' புத்தகங்கள்



மேரி

உள்ளன. இவைகள் படிப்ப தற்கு நன்றாக உள்ளன. எனவே பள்ளி விடுமுறை நாட்களில் தினமும் இங்கு வந்து ஆர்வத் துடன் படிக்கிறேன். இதுபோல நிறைய புத்தகங்கள் இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்?''

# சேலம் மாவட்டத்தில் வறட்சிப் பணிகள்

-மு. முத்துக்காளத்தி,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்; சேலம் மாவட்டம்.



சேலம் மாவட்டத்தில் பருவ மழை தவறியதால் ஏற்பட்டுள்ள வறட்சியைப் போக்குவதற்காக வறட்சி நிவாரணப் பணிகளுக்காக அரசு இதுவரை 2 கோடியே 45 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. அதில் 84 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணப்பணியில் 2193 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு681 பணிகள் முடிக்கப்பட்டன. சேலம் மாவட்டத்தில் கிணறுகள் ஆழப் படுத்துவதற்காக ஒரு கிணறு ரூ. 2,500 வீதம் ரூ. 90 இலட்சம் தக்காவி கடன் வழங்கப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணப்பணியில் முதற்கட்டமாக 293 குடிநீர் குழாய்க்கிணறுகள் தோண்டுவதற்காக 38 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாயினை அரசு அனுமதித்துள்ளது. இதில் முதல் கட்டத்தில் நகரசபை பகுதிகளில் 62 குழாய்க் கிணறுகளும், ஊராட்சி ஒன்றிய கிராமங்களில் 231 குழாய்க்கிணறுகளும் அமைத்திட திட்டமிட்டு, அதில் நகராட்சி பகுதிகளில் 48 குழாய்க் கிணறுகளும், ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 227 குழாய்க் கிணறுகளும் தோண்டப்பட்டன. 221 குழாய்க்கிணறுகளுக்கு கைப் பம்புகள் இணைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டத்தில் 246 குழாய்க் கிணறுகள்தோண்ட திட்டமிட்டதில் இதுவரை 58 குழாய்க் கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன. இரண்டாவது கட்டத்திற்கு குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்காக ரூ. 32 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இரண்டு கட்டங்களிலும் குடிநீர் குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்காக 34.5 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் வறட்சி நிவாரணப்பணிகள் போர்க்கால நடவடிக்கைகளாகக் கருதி தீவிரமாக நடைபெற்று வருகின்றன. குடிநீர் பற்றாக்குறையைபோக்குவதை முதன்மையாகக் கருதி, ஆங்காங்கு குடிநீர் வடிகால் வாரியம் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் குழாய்க் கிணறுகள் தோண்டப்படும், பழைய கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டும் வருகின்றன. அரசு மேற்கொண்டுள்ள தீவிர நடவடிக்கைகளால் சேலம் மாவட்டத்தில் வறட்சி சமாளிக்கப்பட்டு வருகிறது.



மாவட்டத்தில் நடைபெற்று வரும் வறட்சி நிவாரணப்பணிகளை பார்வையிட மாவட்ட ஆட்சித் தலைவரும், நிருபர்களும் 4-6-81 அன்று பயணம் சென்றனர். முதலாவதாக வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பாப்பாரப்பட்டி ஏரியில் கரை உயர்த்துதல், பலப்படுத்துதல் பணியினை பொதுப்பணித் துறையின் மூலம் 13 ஆயிரம் மதிப்பீட்டில் செய்து வந்தனர். இதன் மூலம் இதுவரை 1,640 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்றனர். நாச்சிப்பட்டியில் தொடக்கப்பள்ளிக்கு அருகிலுள்ள பொதுக் கிணறு ஆழப்படுத்தி வரும் பணியினை ஆட்சித் தலைவர் உட்பட அனைவரும் பார்வையிட்டனர். இப்பணி கடந்த 30 நாட்களாக நடைபெற்று வருகின்றன. இதன் மதிப்பீடு ரூ. 7,300. இதுவரை ரூ. 6,464 செலவு செய்யப்பட்டு உள்ளது. 2 அடி தண்ணீர் வந்துள்ளது. தொடர்ந்து வெண்ணந்தூரிலுள்ள பொதுக்கிணறு ரூ. 7 ஆயிரம் மதிப்பீட்டில் ஆழப் படுத்தி வரும்பணியினைபார்வையிட்டனர். இதுவரை ரூ. 6 ஆயிரம் செலவு செய்யப்பட்டுள்ளது. வெண்ணந்தூர் நகர அலுவலகத்திற்கருகிலுள்ள கிணறு ரூ. 6 ஆயிரம் செலவில் ஆழப்படுத்தப்பட்டது. ஒதுக்கீடு போதாமையால் மேலும் ரூபாய் 4 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கருகில் ரூ. 15 ஆயிரம் செலவில் ஆழ் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு, நல்ல முறையில் குடிநீர் வருகின்றது. அலவாய்ப்பட்டி கிராமத்திற்கு சென்ற போது, ஒன்றியத்தின் மூலம் டிராக்டர் மூலமாக மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருவதை நேரிடையாக கண்டனர். பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க, கூடுதலாக ஒரு டிராக்டர் நீர் வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்ததை அறிந்ததும், மக்கள் மன நிறைவு பெற்றனர். நடுப்பட்டி கிராமத்தில் உள்ள ஏரிக்கரையை உயர்த்த ரூ. 13,500 ஒதுக்கப்பட்டு உள்ளதில் இதுவரை ரூ. 7,500 செலவிடப்பட்டு தொடர்ந்து வேலை நடைபெற்று வருகின்றது. இராசிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கனவேலம்பட்டி தோணமேடு என்ற இடத்தில் குழாய்க் கிணறு அமைக்க ரூ. 13 ஆயிரம் ஒதுக்கப்பட்டது. ஆனால் ரூ. 16 ஆயிரம் செலவில் 250 அடி ஆழத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குழாய்க் கிணறு போடப்பட்டுள்ளது. இதில் போதுமான அளவு நீர் வருகிறது. இராசிபுரத்தை ஒட்டியுள்ள கோனேரிப்பட்டி ஏரியில் ரூ. 90 ஆயிரம் மதிப்பீட்டில் கிணறு தோண்டும் பணியினை ஆட்சித் தலைவர் பார்வையிட்டார்.

நாமகிரிப் பேட்டையைச் சேர்ந்த தேவஸ்தானம் புதூரிலுள்ள ஒட்டர் தெரு கிணறு ரூ. 6 ஆயிரம் செலவில் ஆழப்படுத்தப்பட்டுள்ளது. அதில் தற்போது நல்ல நிலையில் சுமார் 15 அடிநீர் உள்ளது. நாமகிரிப் பேட்டை ஏரியில் ரூ. 20 ஆயிரம் மதிப்பீட்டில் கரை உயர்த்தும் வேலை நடைபெற்று வருகிறது. இதன் மூலம் 600 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. ஜேடர்பாளையத்தில் ரூ. 28,500 செலவில் 125 அடி ஆழமுள்ள கிணறு மேலும் ஆழப்படுத்தப்பட்டு வருகின்றது.

சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பள்ளிப்பட்டி ஏரியில் ரூ. 35 ஆயிரம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் மூலம் கரையை பலப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. இது வரை ரூ. 20 ஆயிரம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 2,700 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. காளப்ப நாய்க்கன் பட்டியிலுள்ள 70 அடி ஆழமுள்ள கிணற்றில் மேலும் ஆழப்படுத்தும் பணி கிரேன் வைத்து நடைபெற்று வருகின்றது. 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ரூ. 12 ஆயிரம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதே ஒன்றியத்தைச் சேர்ந்த அரசரடிக்கோம்பை என்னுமிடத்தில் அங்கிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்திலுள்ள சின்னபள்ளம் பாறை வரை ரூ. 25 ஆயிரம் மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத் துறையினர் மூலம் புதியபாதை அமைக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியைச் சார்ந்த சம்பந்தப்பட்ட 36 நபர்கள் புதிய பாதை அமைப்பதற்காக 7 ஏக்கர்பட்டா நிலத்தை இலவசமாக வழங்கியுள்ளது பாராட்டுக்குரியதாகும். இப்பணியின் மூலம் இதுவரை 1,500 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

புதுச்சத்திரம் யூனியனைச் சேர்ந்த கலங்காணி என்ற இடத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ரூ. 13 ஆயிரம் செலவில் குழாய்க் கிணறு போடப்பட்டு உள்ளது. இதன் மூலம் அங்குள்ள 150 குடும்பத்தினர் போதுமான தண்ணீர் பெறுகின்றனர்.

இவ்வாறு சேலம் மாவட்டத்தில் வறட்சி நிவாரணப்பணிகள் போர்க்கால முனைப்போடு தீவிரமாக நடைபெற்று வருகின்றன.



## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

சங்கீத நாட்டியக் கலைஞர்கள், சங்கீத சபைகள், சங்கீத நடனப் பயிற்சிப் பள்ளிகள் கவனிக்கவும்.

1981-82 ஆம் ஆண்டில் மன்றம் பின்வரும் திட்டங்களை அமல் நடத்த இருக்கிறது:

1. தகுதி வாய்ந்த கலைஞர்களுக்குச் சங்கீத சபைகள் மூலமாக ஊக்கம் அளிக்கும் திட்டம்.
2. சங்கீத-நடனப் பயிற்சிப் பள்ளிகளுக்கு உதவி மான்யம் அளிக்கும் திட்டம்.

மேற்கண்ட திட்டங்களின் மூலம் பயன்பெற விரும்பும், திட்டப்படி தகுதிபெற்ற கலைஞர்கள், சங்கீத சபைகள், சங்கீத-நடனப் பயிற்சி நிலையங்கள், திட்ட விதிமுறைகளையும், விண்ணப்ப பாரங்களையும் பின்வரும் முகவரிக்கு உடனே எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்:-

''செயலாளர், தமிழ்நாடு
இயல் இசை நாடக மன்றம்,
'தென்றல்' கிரீன்வேஸ்
சாலை, சென்னை-600 028."

பூர்த்தி செய்யப்பட்ட மேற்படி விண்ணப்பங்கள் தபால் மூலம் மன்றத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி 31-8-1981. குறிப்பிட்ட தேதிக்கு மேல் தாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டா.



# துறைமுகத் துறையின் ஓராண்டுச் சாதனை 1980-81

தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையின் ஆட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருவது தமிழ்நாடு துறைமுகத் துறை. கடலூர், நாகப்பட்டினம் ஆகிய இரண்டு இடைநிலைத் துறைமுகங்களும், இராமேசுவரம், பாம்பன், கீழ்க்கரை, குளச்சல், கன்னியாகுமரி ஆகிய ஐந்து சிறு துறைமுகங்களும் இத்துறையால் கண்காணிக்கப்படுகின்றன.

சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டுள்ள மாநிலத் துறைமுக அலுவலர் அவர்கள் துறைத்தலைவர் ஆவார்.

## கடலூர் துறைமுகம்

இந்தப் பழமையான துறைமுகம் நிலக்கரி, சிமிட்டி, உரம், இரும்புக்கனி மற்றும் பொதுச் சரக்குகளை இறக்குமதி ஏற்றுமதி செய்யும் திறன் பெற்றது. 1977-78ஆம் ஆண்டில் இந்தத் துறைமுகத்திற்கு ஒரு கப்பல் கூட வராததால் போக்குவரவில் தொய்வு ஏற்பட்டது.

1979-80ல் ஓரளவு முன்னேற்றம் இருந்தது. அவ்வாண்டில் 12 கப்பல்கள் இறக்குமதிப்பணியிலும் 12 கப்பல்கள் ஏற்றுமதி பணியிலும் ஈடுபட்டன. எனினும் முந்தைய ஆண்டுகளில் ஆண்டொன்றுக்குச் சுமார் 30 கப்பல்களின் வருகையோடு போக்குவரவில் ஈடுபட்டிருந்த காலத்தோடு ஒப்பிடுகையில் இது மன நிறைவு தருவதாக இல்லை. எனவே, தமிழ்நாடு அரசுக்கு இதுபற்றி எடுத்துரைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு மைய அரசை அணுகி நிறைய கப்பல்களை இந்தத் துறைமுகத்திற்குத் திருப்பிவிடக் கேட்டுக்கொண்டதன் விளைவாக 1980-81-ல் இருபத்தொன்பது கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வந்து இறக்குமதி செயததும், அதேபோல் இருபத்தொன்பது கப்பல்கள் இங்கிருந்து ஏற்றுமதிப் பொருள்களுடன் சென்றதும் இத்துறையின் குறிப்பிடத்தக்க சாதனை ஆகும்.

## நாகப்பட்டினம் துறைமுகம்

1980-81ல் இந்தத் துறைமுகத்தில் நல்ல போக்குவரவு இருந்தது. இந்தக் காலப் பகுதியில் 68 கப்பல்கள் இந்தத் துறைமுகத்திற்கு வந்து 12,281 டன் எடையுள்ள சரக்குகளை இறக்குமதி செய்தன. அதேபோல் 67 கப்பல்கள் 29,452 டன் எடையுள்ள சரக்குகளை ஏற்றுமதி செய்து கொண்டு புறப்பட்டன. இதே ஆண்டில் 2364 பயணிகள் இந்தத் துறைமுகத்தில் வந்து இறங்கினர். 3917 பயணிகள் கப்பவில் ஏறிச் சென்றனர்.

இந்தத் துறைமுகப் பணியாளர்களுக்காக் குடியிருப்பு வசதி

செய்து தர வேண்டும் என்னும் எண்ணம் பலகாலமாக இருந்து வந்தது. நாலரை இலட்சம் ரூபாய் செலவில் எட்டுக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்தது. அதன்படி 1980-81ல் இந்த வேலை தொடங்கப்பட்டு இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் நான்கு குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பெற்றுள்ளன. மற்ற நான்கு குடியிருப்புகளின் கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**இராமேசுவரம் துறைமுகம்**

1966ல் தமிழக அரசு இந்தியத் துறைமுகங்களின் சட்டம் 1908ன் கீழ், இராமேசுவரத்தை ஒரு சிறு துறைமுகமாக அறிவித்து இந்தியா - ஸ்ரீலங்கா கப்பல் போக்குவரத்தைத் தொடர ஆணையிட்டது.

ஸ்ரீலங்காவிற்கு இந்தத் துறைமுகத்தின் வழியாகச் செல்லும் பயணிகளில் பலர் வெளிநாட்டவர்கள். இவர்கள் தங்களுடன் தங்களுடைய மோட்டார் கார்களையும் எடுத்துச் செல்கின்றனர். இவற்றைக் கப்பலுக்குக் கொண்டு செல்வதற்கு ரூபாய் 1,59,046, விலையில் தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தில் இருந்து எஃகால் செய்யப்பட்ட மிதவைப்படகு ஒன்று வாங்கப்பட்டு, இந்த ஆண்டில் அது பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. ஸ்ரீலங்காவில் இருந்து தாயகம் குடிபெயர்வோர் இந்தத் துறைமுகத்தில் வந்திறங்குகின்றனர். இவர்களுக்காக உணவுக்கூடம் ஒன்று இத்துறையால் இந்த ஆண்டில் இங்குக் கட்டப்பட்டுள்ளது.

**குளச்சல் துறைமுகம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில நாகர்கோவில் என்னும் இடத்திலிருந்து சாலை வழியாக 14 மைல்கள் தொலைவில் குளச்சல் துறைமுகம் உள்ளது. இந்தத் துறைமுகத்தை எல்லாப் பருவநிலைக்கும் உகந்ததாகச் செய்யவும் அதிக பளு ஏற்றக்கூடிய பெரிய படகுகளை இழுத்துக் கட்டுவதற்கு ஒரு கடற்பாலம் கட்டுவதற்கும் சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பதைத் தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார ரீதியில் ஆராயப்பட்டது. அந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**வாலிநோக்கம்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் கிராமத்தில் வாலி நோக்கம் எனும் இடத்தில் உள்ள ஒரு சிறு துறைமுகத்தை வளர்ச்சி பெறச் செய்வதற்கான செயற்குறிப்பு ஒன்று உள்ளது. இதற்கான, கடற்கரையை அடுத்த உள்நாட்டுப் பகுதிகளையும் போக்குவரவுச் சாத்திய கூறுகளையும் ஆராய்கின்ற பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வேப்பலோடை**

திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடிக்கு வடக்கே கப்பிபோடப்பட்ட சாலை வழியாக 16. கி.மீ. தொலைவில் வேப்பலோடை எனும் இடம் உள்ளது. இந்தப் பகுதி முழுவதும் உப்பு உற்பத்தி செய்யப்படும் இடமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு அனைத்தும் சாலை வழியாகத் தூத்துக்குடிக்கு ஏற்றுமதிக்காக எடுத்துச் செல்லப்படுகிறது. இந்திய அரசின் உப்புத்துறையின் உதவியோடு சுமார் இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் இந்தக் கடற்பாலத்தைப் புதுப்பிப்பதற்கான செயற் குறிப்பு ஒன்று உள்ளது. இதன் மூலம் இங்கு உற்பத்தியாகும் உப்பு அனைத்தும் கடல் வழியாக எடுத்துச் செல்ல வசதி ஏற்படும்.





### தமிழக அரசு ஊழியருக்கு ஒரு வழி விடுப்புப் பயணக் கட்டணச் சலுகை

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு விடுப்புப் பயணச் சலுகை (எல்.டி.சி.) வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் அரசு ஊழியர் 5 இலட்சம் பேர் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் அரசு ஊழியரும், அவரது குடும்பத்தாரும் தமிழ்நாட்டில் 240 கி.மீ. தூரத்திற்கு மேல் மேற்கொள்ளும் பயணத்திற்கு ஒரு வழிக் கட்டணத் தொகை பெறுவர்.

அரசு ஊழியர் இதற்காகக் குறைந்தபட்சம் 15 நாள் விடுப்பில் செல்ல வேண்டும். 2 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இந்த ரயில் அல்லது பஸ் ஒரு வழிக் கட்டணச் சலுகை அளிக்கப்படும்.

### அரசு திரைப்படம்-தொலைக்காட்சி பயிற்சிக் கல்லூரியில் கூடுதல் மாணவர்கள் சேர்க்கை

தமிழ்நாடு அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி கல்லூரியில் மாணவர் பயிலும் இடங்களை 60-லிருந்து 75 ஆக அரசு அதிகரித்துள்ளது. திரைப்படம் இயக்குதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, பிலிம் பிராசசிங், எடிட்டிங், நடிப்புக்கலை ஆகியவற்றில் மாணவர்களுக்கு சென்னை அடையாறில் அமைந்துள்ள இந்த அரசு நிறுவனம் பயிற்சி அளிக்கிறது.

பிலிம் பிராசசிங் பற்றி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிறுவனம் இந்தியாவில் இது ஒன்றுதான்.

# பார்த்தோம்! படித்தோம்!

'தமிழரசு' ஓராண்டுச் சாதனை மலர் கண்டேன். ஓராண்டுப் பணிகள் மிகவும் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது. முதல்வரின் மூவண்ண அட்டைப்படம் கண்ணைக் கவர்ந்தது. என்னைப் போன்ற வெளி மாநிலத்திலுள்ள தமிழர்களுக்கு இவ்விதழ் ஒரு சிறந்த பரிசாகும்.

எஸ். செல்லப்பா,
சாந்தூர்,
கர்நாடகா.

ஓராண்டுச் சாதனை மலர் மிக மிக அருமை. கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டும் வண்ணம் செய்திகளும், படங்களும் அமைந்திருந்தன.

வி. பி. செல்வராஜ்,
கும்பகோணம்.

தமிழக அரசின் ஓராண்டுப் பணிகளின் தொகுப்பு மலர் ஓர் அரிய படைப்பு. மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் வண்ணப்படம் அருமை. உடனே அதைக் கண்ணாடி போட்டு மாட்டிவிட்டேன்.

—ஆர்.ஜி. துரைராஜ்
கீழப்பழுவூர், திருச்சி.

1.7.81 'தமிழரசு' இதழில் ''மாணவ மணிகள்'' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள கட்டுரையில், குமாரி மீராபாய் தேர்வில் வாங்கியுள்ள மதிப் பெண்கள் தவறாக அச்சிடப்பட்டுள்ளது. அவர் வாங்கிய மொத்த மதிப்பெண்கள் 1114. ஆனால், நீங்கள் கொடுத்துள்ள மதிப் பெண்களைக் கூட்டினால் மொத்தம் வருவதோ 1133. எனவே, இது பிழை அல்லவா?

ஜி. ரவீந்திரன்,
சேக்கிப்பட்டி,
மதுரை

குறிப்பு:

பாடவாரியாக மதிப்பெண் களைத் தொகுக்கும்போது தவறு ஏற்பட்டு விட்டது. இந்தத்தவறை சுட்டிக்காட்டியமைக்கு மிக்க நன்றி. ஆனால், அவர் வாங்கிய மொத்த மதிப்பெண்கள் 1114 தான்.

—ஆசிரியர்

'நூல் நயம்' பகுதி மிகவும் அருமையாக இருக்கிறது.

—ஆர். பாஸ்கரன்,
ச. புகழேந்தி,
திருவையாறு.

வறட்சி நிவாரணப் பணிகள், பற்றிய கட்டுரைகள் அனைத்தும் மனத்துக்கு இதமாக உள்ளன.

—பி. சலாஹுத்தின்,
நாகப்பட்டினம்.

'அரசின் அறிவிப்புகள்' பகுதி பயன் தருவதாகவும் உள்ளது.

—புலவர் சொ. புஷ்பவேலு,
திருவையாறு.
—இல. பாலசுப்பிரமணியன்:
பெரம்பூர்.
—அ. அப்துல் ரகுமான்
வேசடசந்தூர்

'இனி ஒரு விதி செய்வோம்' தொடர் கட்டுரை சிறப்பாக இருக்கிறது.

—இரா. மயில்வாகனன்
மேட்டூர்அணை-2

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது 'படமும் செய்தியும்' பகுதி.

—மானூர் மைந்தன்
கவுந்தப்பாடி.

'தமிழரசு' வாசகர்களுக்குப் பரிசுப்போட்டி ஒன்றை ஆரம்பிப்பீர்களா?

—காசி முத்துமாணிக்கம்
அறந்தாங்கி.

வறட்சிப் பகுதிக்காக அரசு, மேற்கொள்ளும் துரிதப் பணிகள் பற்றிய செய்திகள் பாதிக்கப் பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிப்பதாய் இருந்தது.

—அண்ணா அன்பழகன்
அந்தணப்பேட்டை

மாணவர் பகுதியில் வரும் சிறுகதைகள் ஒவ்வொன்றும் படிப்பினையூட்டும்படியாக உள்ளன.

—எஸ். எஸ். வாசன்
தென் எலப்பாக்கம்.

'தமிழரசு' தெவிட்டாத விருந்தளிக்கும் கருத்துக் களஞ்சியம்.

—வி. எம். சரவணன்
சென்னை—56

உலகத் தமிழ் மாநாட்டில் படிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் தமிழரசில் வெளியிடப்படுமா?

—க. ந. ராமசாமி
ஈரோடு—3.

## நியாய விலைக் கடைகளில் புகார் புத்தகம்.

மாநிலம் முழுவதிலும், பொது விநியோக முறையில் இன்றியமையாப் பொருட்கள் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இதர சில நிறுவனங்கள் ஆகியவற்றால் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடைகள் மூலமாக, பொதுமக்களுக்குக் குடும்ப அட்டைகளின் பேரில் விநியோகம் செய்யப்படுகின்றன.

நியாய விலைக் கடைகளிலிருந்து இன்றியமையாப் பொருட்களை குடும்ப அட்டைகள் மூலம் வாங்குவதில், பொது மக்களுக்கு குறைபாடுகள் இருந்தாலோ அல்லது பொது விநியோக முறையை மேலும் சிறந்த முறையில் நடத்த யோசனைகள் இருந்தாலோ, அவற்றைத் தெரியப்படுத்த, ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் புகார் புத்தகம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள், இந்த வசதியைப் பயன்படுத்திக் கொண்டு தங்களது குறைகளை அல்லது யோசனைகளை அப்புத்தகத்தில் பதியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

## ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் அடிப்படை ஊழியர்கள் அரசு ஊழியர்களாகக் கருதப்படுவார்கள்

பள்ளிக் கல்வி இயக்குநரவர்களின் பரிந்துரைகளின் பேரில், தமிழ்நாடு அரசு, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஏவலர்கள் மற்றும் காவலர்கள் போன்ற அடிப்படை ஊழியர்கள் அனைவரையும் 1.6.81 முதல் அரசு ஊழியர்களாகக் கருதப்படுவார்கள் எனவும், அவர்கள் அரசு ஊழியர்கள் பெற்றுவரும் சலுகைகள் அனைத்தையும் அன்று முதல் பெறுவார்கள் எனவும் தமிழ் நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

# அதிக முட்டை! அதிக லாபம்!

# டாப்கோ

## கோழியினங்கள்

### கோழி வளர்ப்போருக்கு லாபமளிக்கும் கோழி இனம்



**டாப்கோ**

(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

விவரங்கட்கு அணுகவும்:

**பாப்காக்**
**கோழிக்குஞ்சுகளுக்கு**

மேலாளர்

**தமிழ்நாடு**
**கோழி அபிவிருத்தி நிறுவனம்**

அரசூர் போஸ்ட் (வழி) சூலூர்
கோவை மாவட்டம்-641 407
தமிழ்நாடு. (போன்: 88385 கோவை).

**H.H. 260**
**கோழிக்குஞ்சுகளுக்கு**

துணை மேலாளர்

**தமிழ்நாடு**
**கோழி அபிவிருத்தி நிறுவனம்**

கப்பலூர் போஸ்ட்
திருமங்கலம் தாலுக்கா மதுரை ஜில்லா
தமிழ்நாடு-626 715 (போன்: 8197)

ARIES/DIPR/359/81-25/4




சென்னை அருகிலுள்ள கொடுங்கையூரில், பிரம்மாண்டமான முறையில் ரூ. 1 கோடி செலவில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசுக்குச் சொந்தமான'சிட்கோ' நிறுவனம் இந்தத் தொழிற்பேட்டையை அமைத்துள்ளது. தமிழ் நாட்டில் 46-வது தொழிற்பேட்டையான இதில், 48 தொழிற் கூடங்கள் (Sheds) அமைந்துள்ளன.

**பிற மாநிலங்களும் பின்பற்றிட...**

தொழிற்பேட்டையின் திறப்பு விழா 14.7.81 அன்று மாலை சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.'சிட்கோ' நிறுவனத்தின் தலைவர் திரு சீதாகிருஷ்ணன் அவர்கள் வரவேற்றார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது: ''தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காகக் கடந்த நான்கு ஆண்டுகளாக மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அரும்பாடு பட்டு வருகிறார்கள். தொழிற் வளர்ச்சியில் தமிழகத்திற்கு ஒரு சிறப்பிடம் கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் காரியமாற்றி வருகிறார்கள். தமிழகத்தில் கடந்த 30 ஆண்டுக் காலத்தில் ஆயிரம் தொழிற் கூடங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய தலைமையிலான அரசு பொறுப்பு ஏற்ற நான்கு ஆண்டுக் காலத்தில் 500 புதிய தொழிற்கூடங்கள்ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது நீங்கலாக, குக்கிராமங்களில்கூட சின்னஞ் சிறு தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன.

''இந்நிலை வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. தமிழகத்தில் பரவி வரும் சிறுதொழில் வளர்ச்சியினை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று மத்திய அரசு தாக்கீது அனுப்பியுள்ளது. அண்மையில் டெல்லி சென்றிருந்தபோது தமிழகத்தின் தொழில் வளர்ச்சி குறித்து மத்தியிலுள்ளவர்கள் பலர் தங்களுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்தனர். ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கு ஒரு தொழிற்பேட்டை அமையவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்புகிறார்''

**தொழில்கள் காக்கப்பட...**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்: ''தமிழகம் தொழில் துறையில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிலாளர் நலனும் காக்க வேண்டும். அதே போல தொழிலதிபர்களின் நலனுக்கும் குந்தகம் வரக்கூடாது. இந்தஇரண்டையும்விட தொழில்கள் காக்கப்பட வேண்டும் என்பது அரசின் நோக்கம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழிற்பேட்டை அமைப்பது குறித்து இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. தொழில்துறை வளர்ச்சியில்தமிழகம் இன்றைக்கு ஐந்தாவது இடத்தினை வகிக்கிறது. தொழிலறிவைப் பெற்றவர்கள் தொழிலைத் தொடங்க அரசு கடன் கொடுக்கிறது. அரசிடம் கடன் வாங்கியவர்கள் அரசுக்குத் திரும்பவும் கட்ட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட வேண்டும்.''

**புறநகர்ப் பகுதிகளில்...**

இந்தத் தொழிற்பேட்டையில் தொழில் தொடங்குவோருக்கு இயந்திரங்களை வாங்குவதற்கான 'சிட்கோ' மூலமான கடன் உதவியை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் வழங்கி உரையாற்றும் போது, ''புறநகர்ப் பகுதிகளில் தொழில்வளம் பெருகவேண்டும் என்பதே இந்த அரசின் குறிக்கோள். நெற்குன்றம், முகப்பையூர் பகுதியில் ரூ. 23.8 கோடி செலவில் குடியிருப்புகளைக்கட்ட இருக்கிறோம். இந்தத் தொழிற்பேட்டையில் பகுதி மக்களுக்குப் பத்து சதவிகிதம் அளவுக்கு வேலை கொடுக்கவும்,10சதவிகித அளவு தொழிலாளர்களுக்கு வீடுகள் கொடுக்கவும் அரசு முடிவெடுக்கும். தொழில் அதிபர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அதனைக் கட்டாய மத்தியஸ்தம் தீர்ப்புக்கு விடப்படும். தொழில்கள் சீராக நடைபெற சுமுகமானதொரு சூழ்நிலை அவசியம் தேவை'' என்று குறிப்பிட்டார்.

விழாவில் திருவாளர்கள் இரா. மோகனரங்கம், எம்.பி., குமரி அனந்தன், எம்.எல்.ஏ., ஜே.சி.டி.பிரபாகரன்,எம்.எல்.ஏ., ஆகியோரும் தமிழ்நாட்டுத் தொழில்வளம் பற்றியும், தொழிலாளர் நலம் பற்றியும் எடுத்துரைத்தனர்.

**ஜி. ஆனந்தன்**



# நெற்பயிருக்குத் தழைச் சத்து


ஜெ. கிருஷ்ணராஜன்
ப. பாலசுப்பிரமணியன்
க. மு. பாலசுப்பிரமணியன்
வேளாண்மைப் பல்கலைக்கழக
ஆராய்ச்சி மையம், ஆடுதுறை.


நெற்பயிர் முக்கிய ஊட்டச் சத்துக்களில் மணிச்சத்து, சாம்பல் சத்தைக் காட்டிலும், தழைச் சத்தை அதிக அளவில் எடுத்துக் கொள்கின்றது. ஒரு டன் நெல் உற்பத்திக்கு சுமார் 19 கிலோ தழைச்சத்து தேவைப்படுகிறது.

மண்ணில் இடப்படும் தழைச் சத்து முழுவதுமே பயிரினால் உபயோகப்படுத்தப்படுவதில்லை. அவற்றில் 40 முதல் 60 சதம் வரைதான் பயிரினால் உபயோகப்படுத்தப்படுகிறது. மற்றவை ஆவியாதல், டிநைட்ரிஃபிகேசன் கரைந்து மண்வழியே கீழ்சென்று விடுதல் நிலத்தில், இருத்தி வைத்தல் முதலிய முறைகளினால் விரயமாக்கப்படுகிறது.

தழைச்சத்தை அடியுரமாக இடும்போது மண்ணுடன் நன்றாகக் கலக்கப்படாததால் டிநைட்ரிஃபிகேசன் என்ற முறையினால் விரயம் ஏற்படுகிறது. மண்ணின் மேற்பகுதியில் ஆக்ஸிஜன் அதிகரிப்பு மண்டலத்தில் உள்ள நுண்ணுயிர்கள் அமோனியம் தழைச்சத்தை நைட்ரேட் நைட்ரைட் முதலியவைகளாக மாற்றுகின்றன. பின்னர் நைட்ரேட் மண்ணின்கீழ்ப்பகுதியில் குறைப்பு மண்டலத்திற்குச் சென்ற 'நைட்ரஜன் வாயுவாக' யாற்றப்பட்டு இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, இந்த இழப்பைத் தடுக்க தழைச்சத்தை மண்ணின் மேற்பகுதியில் இடக்கூடாது. இடப்படும் தழைச்சத்தும் மண்ணுடன் நன்றாகக் கலக்கப்பட வேண்டும்.

கந்தகம் அல்லது வேப்பம்புண்ணாக்கு அல்லது அரக்கு பூசப்பட்ட யூரியா, தழைச்சத்தின் விரயத்தைக் கணிசமான அளவு குறைக்கின்றது. யூரியாவை வேர்ப்பகுதியின் கீழே இடுவது நெல் மகசூலைக் கணிசமான அளவு உயர்த்தியுள்ளது. ஒரு டன் நெல் உற்பத்திக்கு வேண்டிய தழைச்சத்தின் அளவு, யூரியாவை அடியுரமாக அல்லது பிரித்து இடுதல் முதலியவைகளைக் காட்டிலும் வேர்ப்பகுதியில் இடுவதால் 25 முதல் 30 சதம் வரை குறையும். யூரியாவை வேர்ப்பகுதியில் இடுவது மிகவும் கடினமான முறையாகும். தற்போது வந்திருக்கும் பெரிய வடிவ யூரியா உருண்டைகள் இந்தக் கடினத்தைப் போக்க உதவும். ஒரு கிராம், இரண்டு கிராம் எடையுள்ள உருண்டைகள் இஃப்க்கோ உர நிறுவனத்தினரால் வினியோகிக்கப்படுகிறது. நான்கு தூர்களுக்கு மத்தியில் ஓர் உருண்டை என்ற முறையில் பார்த்தால், 20×15 செ.மீ. இடைவெளியில் நடப்படும் முறையில் சுமார் 80,000 உருண்டைகள் ஒரு எக்டருக்கு வேண்டியிருக்கும். இதை வைப்பதற்குச் சுமார் 30 ஆட்கள் தேவைப்படும்.

பெரிய வடிவ யூரியா உருண்டைகளைப் பயன்படுத்தும் முறை வழக்கத்தில் வரும் வரையிலும், சாதாரண யூரியாவைப் பிரித்து இடும் முறையே தக்க மாற்றாக அமையும். மொத்தத் தழைச்சத்தின் பாதியை நடவு சமயத்தில் இடவேண்டும். (அதாவது கடைசி உழவு சமயத்தில் மணிச்சத்து, சாம்பல் சத்துடன் சேர்த்து இட்டு மண்ணுடன் கலந்து விடுதல்). கால் பாகத்தை தூர்பிடிக்கும் பருவத்திலும், மீதிக்கால்பாகத்தை கதிர் உருவாகும் சமயத்திலும் இடுவது அதிக மகசூலைக் கொடுக்கிறது. இது பருவங்களாலும், ஒளிக்காலத்தாலும் பாதிக்கப்படும் ரகங்களில் மாறுதல் அடைகிறது.

யூரியாவைத் தாருடன் கலந்து இடுவது கலக்கப்படாத யூரியாவைக் காட்டிலும் சிறப்பைத் தந்துள்ளது. தாரைப் பல்வேறு சத அடர்த்திகளில் முயற்சி செய்ததில், யூரியாவை ஒரு சத அடர்த்தி தாருடன் கலந்து இடுவது விளைச்சலை உயர்த்துவதில் நன்மையளித்தது. அத்துடன் தழைச்சத்து விரயமாகாமல் சீராக நெற்பயிருக்குக் கிடைக்கிறது.

மேற்கூறிய முறைகளைக் கையாண்டு, தழைச்சத்தைச் சரியான முறையில் நெற்பயிருக்கு அளித்து நல்ல பயனை விவசாயப் பெருங்குடி மக்கள் அடைய முடியும்.

அனைத்திந்திய அடிப்படையில் செயல் படுத்தப்படும் அச்சிட்ட சேலைகளின் சேகரிப்பு முறையில் சவுதாகிரி, சங்காணீர் வடிவமைப்புகள் சேலையை கோ—ஆப்டெக்ஸ் நிறுவனமே இந்தியாவில் முதன்முதலாக வெளியிட்டுள்ளது. பல்வேறு பணிகளில் இந்தியாவில் முதன்மையாகத் திகழும் தமிழ்நாடு, கைத்தறி விற்பனையிலும் மாபெரும் சாதனை நிகழ்த்தும் வகையில் செயல்பட்டு வருகிறது.

# சாதனைச் சரிதம் படைக்கும் கோ-ஆப்டெக்ஸ்



**— மாமூலன்**

**கை**த்தறித் துணி விற்பனையில் மகத்தான சரித்திரத்தைத் தமிழ்நாடு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் உருவாக்கி வருகிறது. 1979-80 ஆண்டில் 35 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகின. 1980 81-ஆம் ஆண்டில் ரூ. 47 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகியுள்ளன. 1981-82 ஆம் ஆண்டில் கோ - ஆப்டெக்ஸின் விற்பனையை ரூ. 75 கோடியாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை செய்யவிருக்கும் ரூ. 75 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளில் 12 கோடி ரூபாய் மதிப்புள்ள 4 கோடி மீட்டர் ஜனதா துணிகள் உற்பத்தி செய்யப்படும்.

இதற்காக கோ-ஆப்டெக்ஸ் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது அவைப்பற்றிய சுருக்கமான விவரம் வருமாறு :

விற்பனை நிலையங்களுக்கு வருகை தரும் வாடிக்கையாளர்களின் தேவைகளை, சுவை ரசனைகளை அறிந்து அவர்களின் ஜவுளித் தேவைகளைச் சிறக்க நிறைவேற்றத்தக்க வகையில், விற்பனை நிலைய ஊழியர்களின் திறமைகளை மேலும் சிறந்த முறையில் உயர்த்தியும், வளர்த்தும் வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவையினை வழங்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் சுவை ரசனைகள் பொதுவாகவே எல்லாவற்றிலும் - குறிப்பாக ஆடை வகைகளிலும் - நாளுக்கு நாள்— ஏன் மணிக்கு மணி, விநாடிக்கு விநாடி மாறிவரும் ரசனைகளைத் தெளிவாக அறியவும், உற்பத்தியான ஆடை வகைகளை வாடிக்கையாளருக்கு விற்பனைக்குச் செல்லுமுன் அவற்றின் தரம் பற்றிய கருத்துக்களை எடுத்துச் சொல்லவும், எவ்வெவ்வகைகளில் வடிவம், மாதிரிகள் அமைப்புக்களில் மாறுதல் செய்தால் வாடிக்கையாளரை மேலும் கவரும் என்று கருத்துக்களை எடுத்துக் கூறவும், தக்க ஆலோசனைகள் வழங்கவும் வாடிக்கையாளர்கள் குழுக்கள் அமைக்கப்படும்.

புதுமைகளை ஏற்கும் நாம், அடிப்படைப் பண்பானபழமையை ஒதுக்கி விடுவதற்கில்லை. அதே சமயத்தில் வழி வழியாய் நெய்து வரும் இரகங்களையே நெய்ய

**மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். என். ராஜேந்திரன் அவர்கள், தேசிய சேகரிப்பு அச்சிட்ட சேலைகளை 22.7.81 அன்று வெளியிட்டபொழுது அந்தச் சேலைகளை திரைப்பட நடிகையர் செல்வி ஸ்ரீபிரியா, செல்வி சுஹாசினி பெற்றுக்கொண்டனர்**



வேண்டியதில்லை. அப்படிச் செய்தால் வாடிக்கையாளர்களை இழக்க வேண்டி வரும். ஒரு சேலையின் கரையும், உடலும் போல் ஆடை வகைகளில் பழமையின் மெருகும், புதுமையின் மினு மினுப்பும் தேவை. இரண்டும் ஒருங்கிணைந்தால், உருவான ஆடைக்கு ஒரு புதிய தோற்றம், பொலிவு கிடைக்கும். அதனை கோ-ஆப்டெக்ஸ் நிறைவேற்ற திட்டங்கள் வகுத்துள்ளது.

கைத்தறியில் புதுமைத் தயாரிப்பு பாலியஸ்டர். ஆரம்ப நிலையில் கைத்தறியில் உருவாகி விற்பனைக்கு வெளிவந்த கைத்தறி பாலியஸ்டர் துணிகளுக்கும், இன்று விற்பனைக்குக் கிடைக்கும் பாலியஸ்டர் இரக வகைகளுக்கும் உள்ள வித்தியாசங்கள். வளர்ச்சிகள் உண்மையில் பெருமைப்படத்தக்கவை. அதே போன்று தான் பருத்தியிலும், பட்டிலும், பலவிதமான முன்னேற்றப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் விளைவாய் சிறந்த கைத்தறி ஆடைகள் விற்பனைக்குக் கிடைக்க வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

வழிவழியாய் வந்த இரகங்களையே நெய்து வந்த நெசவாளர்களுக்குப் புதிய இரகங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்து, பல்வேறு மாதிரிகளில், வடிவங்களில் வடிவமைப்பு நிலையங்கள் உருவாக்கித் தந்த வடிவமைப்புகளைக் கொண்டு புதிய புதிய இரகங்கள் உருவாக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படும்.

உடை நாகரிகம், மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டுள்ளது. அதே போன்று உடைகளின் வடிவமைப்புகளும் மாறுபட்டுள்ளன. தேசிய அளவிலான இந்த மாறுபட்ட வடிவமைப்புகளைமுழுமையான அளவில் சேகரித்து, அவற்றின் அடிப்படையில் சேலைகளை உருவாக்குவதே இதன் நோக்கம். அப்படி சேகரிக்கப்பட்ட வடிவமைப்புக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சேலைகளே, விற்பனை நிலையத்திற்கு வருகை தரும் வாடிக்கையாளர்களின் திருப்திதான், விற்பனையின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

அவ்வகையில், கைத்தறியாடைகளை இரக வாரியாகப் பிரித்தடுக்கி, வாடிக்கையாளரின் கவனத்தை வெகுவாகக் கவரும் அதே நேரத்தில், அவருடைய நேரத்தின் அருமையையும் கருத்தில் கொண்டு செயல்படும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்புட்டுள்ளன.

நம் நாட்டில் அடிமட்டத்தில் உழலும் மக்களின் துணித் தேவையை ஈடுகட்டல் ஒரு பெரும் பணியாகும். ஜனதா இரக உற்பத்திகள், ஏழை எளிய மக்களின் தேவைகளை, அவர்தம் வாங்கும் சக்தியின் அடிப்படையைக் கணக்கில் கொண்டு தயாரிக்கப்படுபவையாகும். எனவே அவ்வகை ஆடைகளின் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்தி, இன்னும் பெருமளவில் இவ்வகைத் துணிகள் ஏழை எளிய மக்களை எட்ட வேண்டும் என்பதன் அடிப்படைதான் ஜனதா இரக உற்பத்தி அமைப்பில் விரிவினை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு புறம் கூட்டுறவுத் துறையில் நெசவாளர்கள் சேர்ப்பு. மறுபுறம் புதிய புதிய நெசவாளர் சங்கங்களின் தோற்றுவாய் காரணமாய் உற்பத்தி அதிகரிப்பு கூடுதல் உற்பத்தியின் விற்பனைக்கு வழிகாணும் பொருட்டு புதிய புதிய இடங்களில் விற்பனைக்கு வழிகாணவும் இதுவரை திறக்கப்படாத இடங்களில் புதிய விற்பனை நிலையங்கள் திறக்கப்படும்.

அழகுணர்ச்சி மனித மனத்தில் மண்டியிருக்கும் ஒன்றாகும். அந்த உணர்ச்சியினை மதிக்கும் வகையிலும், வாடிக்கையாளர் நோக்கில் ஒரு திருப்தி - நிறைவு-ஏற்படுத்தத் தக்க வகையில் விற்பனை நிலையங்கள் அழகுபடுத்தப்படும். கூடுதல் விற்பனைக்கு இவ்வகை அழகுபடுத்துதல் உதவியாக அமையும்.

## அடையாறு நதியின்மீது பாலம் கட்ட அரசு ஆணை

**சென்னை அடையாறு நதியின் மேல் டர்ன்புல்ஸ் சாலையையும், கோட்டூர்புரம் அருகிலுள்ள கிண்டி தொழில் நுட்பக் கல்லூரியையும் இணைக்கும் வகையில் ரூ. 85 இலட்சத்து 15 ஆயிரத்து ஐம்பத்து மூன்று செலவில் பாலம் ஒன்றைக் கட்ட தமிழ் நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இப்பாலம் கட்டும் வேலையினைத் தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகம் நடத்தும்.**

அதிகாரக் குவிப்பைப் பரவலாக்குவதன் மூலம் செயல்களை விரைந்து முடித்து உரிய, தக்க பலன்களைக் காண முடியும். அவ்வகையில் கோ-ஆப்டெக்ஸ்தன்னுடைய அதிகாரங்களை - விற்பனைப் பிரிவைப் பொறுத்த வரை—உரிய விரைந்த பலன்களைக் காண—பரவலாக்கியுள்ளது.

விற்பனையாளர்களின் திறமைதான் ஒரு விற்பனை நிலையத்தின் வெற்றிக்கு அடிப்படை. வாடிக்கையாளர்களிடம் அவருடைய அணுகுமுறையே, விற்பனைப் பெருக்கத்தின் முதல் படி. வாடிக்கையாளரிடம் எப்படி அணுகுவது, அவருடைய தேவைகளை எந்த அளவில் நிறைவேற்றுவது, அவருடைய கவனத்தை முழு அளவில் எங்ஙனம் கவர்ந்து, விற்பனைப் பெருக்கத்திற்கு வழி வகுப்பது ஆகிய விற்பனைக் கூறுகளின் திறமையை முழு அளவில் வெளிப்படுத்தவே இவ்வகைத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

ஒரு நிறுவனத்தின் வெற்றி, அதன் ஊழியர்களின் சிறப்பான பணியின் அடிப்படையில் அமைவதாகும். பணியாளர்களின் உற்சாகத்திற்கு—அவர்களின் அயரா உழைப்பிற்கு உற்சாகமும் ஊக்கமும் தர வேண்டிய முழு முதல் கடமை ஒரு நிறுவனத்திற்கு உரியதாகும். அவ்வகையில் கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களின் உற்சாகத்திற்குப் பல்வேறு வகை ஊக்குவிப்புத் திட்டங்கள்தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உள்நாட்டுத் தேவைகளை ஈடுகட்டும் அதே நேரத்தில் அந்நியச் செலாவணியை ஈட்டும் எண்ணத்தைக் கருத்தில் கொண்டு ஏற்றுமதியிலும் முழுகவனம் செலுத்தப்படுறகிது. ஏற்றுமதி எல்லைகளை விரிவுபடுத்தி, மேலும் மேலும் கைத்தறியாடைகளைபுதிய புதிய நாடுகளுக்கு எற்றுமதி செய்து, அதன் மூலம் தமிழகக் கைத்தறித் துணிகளுக்கு ஒரு நல்ல வெளிநாட்டுச் சந்தையைக் காண்பதே இதன் நோக்கமாகும். இந்த நோக்கத்தின் ஒரு கூறாகத்தான் அண்மையில் சிங்கப்பூரில் ஓர் ஏற்றுமதிப் பிரிவு துவக்கப்பட்டுள்ளது.

—இவ்வாறு பல்வேறு திட்டங்களை வகுத்து கைத்தறித்துணி விற்பனையில் மகத்தானசாதனைகளை கோ-ஆப்டெக்ஸ் உருவாக்கி வருகிறது.

**தேசிய சேகரிப்பு அச்சிட்ட சேலைகள் :**

கோ-ஆப்டெக்ஸ் ஒத்துழைப்புடன் புதுடில்லி கைத்தறி

வளர்ச்சி ஆணையாளரால் உருவாக்கப் பெற்ற தேசிய சேகரிப்பு அச்சிட்ட சேலைகளை சென்னையில் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. எஸ். என் ராஜேந்திரன் அவர்கள் 22-7-81 அன்று வெளியிட்டார்.

கைத்தறி பற்றி பொது மக்களின் விழிப்புணர்ச்சியை அதிகரிக்கவும் பல்வேறுமாநிலங்களில் மக்கள் விரும்பும் தேவைகளை உற்பத்தி செய்து, சந்தை நிலவரங்களை வளர்ச்சி செய்யும் நோக்குடன்தான் அச்சிட்ட சேலைகள் சேகரிப்புத்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

**தேசிய சேகரிப்பு :**

இந்தப் பருத்திச் சேலைகள் நம் நாட்டிலுள்ள பெரிய கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும், மற்றும் இதர மாநில விற்பனை அமைப்புக்கள் மூலமும் விற்பனைக்கு கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளதால் இதற்கு ''தேசிய சேகரிப்பு'' என்று பெயரிடப்பட்டுள்ளது.

உயர் வருமான பிரிவினரின் தேவைகளை இது நிறைவு செய்யும். தள்ளுபடி இல்லாத காலங்களிலும் விற்பனையாகும் வகையில் இவ்வகை வடிவமைப்பில் அச்சிட்ட சேலைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

**வடிவமைப்பு சேகரிப்பு :**

அச்சிடுதலில் பழம்பெருமை, தனிச்சிறப்பு, உயர் அழகு கொண்ட சவுதாகிரி மற்றும் சங்கானீர் ஆகிய இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தேசிய வடிவமைப்புக்களிலிருந்து பம்பாயிலுள்ள நெசவாளர் சேவா நிலையத்தைச் சார்ந்த கௌதம் வாதேயா மற்றும் அவருடைய துணையாளர்கள் இணைந்து உருவாக்கியது. இதமான கால நிலைக்கேற்ப, சிவப்பு ; பிரவுன் செங்கல் வண்ணம், இன்டிகோ, கரும்பச்சை, மஞ்சள், நீலம் மற்றும் மெஜண்டா ஆகிய வண்ணங்களில் புகழ் பெற்ற பிரதிமைகளின் உருவங்களைக் கொண்டு இவ்வகைச் சேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

100-ஆம் எண் கொண்ட அழகிய கைத்தறி மல் துணியில் இச் சேலைகள் அச்சிடப்பட்டுள்ளன.

உயர் வருமான பிரிவினரை உள்ளடக்கிய ஓர் வாடிக்கையாளர் குழுவின் முன் அவர்தம் கருத்தினை அறிய இவ்வகைச் சேலைகள் பார்வைக்கு வைக்கப் பட்டன. கவின்மிகு நேர்த்திக்கும் அழகிய வடிவமைப்பிற்கும் இவ்வகைச் சேலைகள் பெரும் பாராட்டைப் பெற்றன.

தொடக்கக் கட்டமாக 20,000 சேலைகள் விற்பனைக்கு வெளியிடப்பட்டுள்ளது. மாதந்தோறும் 25,000 சேலைகள் விற்பனைக்கு வெளியிட திட்டமிட்டு ஆண்டுதோறும்3 இலட்சம் சேலைகளை கோ-ஆப்டெக்ஸ் தயாரிக்கவிருக்கிறது.

கைநெசவில் உருவான வடிவமைப்பைக் கொண்டசேலைகளை மட்டுமே கைத்தறிஅமைப்புக்கள் உருவாக்கி, விற்பனை செய்கின்றன என்று எண்ணம் பொது மக்கள் மத்தியில் உள்ளது.

ஆலைகள் உருவாக்கும் இரகங்களுக்கு ஈடான வகையில் கைத்தறியில் உயர்தரத்தில் பருத்தியில் அச்சிட்ட சேலைகள் உருவாகின்றன என்ற எண்ணத்தை மக்கள் மனத்தில் நிலை நிறுத்தும் வகையில் தேசிய வடிவமைப்பில் அச்சிட்ட சேலைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

ரூபாய் 65 விலையில் விற்பனைக்கு வந்துள்ள தேசிய சேகரிப்பு அச்சிட்ட சேலைகளில் தொடர்ச்சியாக இன்னும் பல டிசைன்கள் வரவிருக்கின்றன.

அனைத்து இந்தியாவிலும் எங்கும் இந்த வடிவமைப்பைப் பயன்படுத்தி சேலைகள் தயாரிக்கப்படவிருக்கின்றன. ஆனாலும் முன்னோடியாக சவுதாகிரி, சங்கானீர் வடிவமைப்புகளை பயன் படுத்தி முதலில் வெளியிட்ட பெருமை நமது கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தையே சேரும்.

## பயறு வகையின் பயன்!

பயறு வகைகளில் புரதம் என்னும் ஊட்டச்சத்து உள்ளது. பயறு வகைகள் அன்றாட உணவில் ஒரு அம்சம் ஆகும். குறிப்பாக சைவ உணவு உண்பவர்களுக்குப் புரதச்சத்து பயறுவகைகளிலிருந்து தான் கிடைக்கிறது. தவிர, அரிசி போன்ற தானிய வகைகளில் குறைவாக உள்ள சுண்ண சத்து, பாஸ்பரஸ் முதலியவற்றைப் பயறு வகைகள் ஈடுசெய்கிறது.

தமிழகத்தில் துவரை, உளுந்து, பாசிப்பயறு, கொள்ளு, அவரை, கொண்டைக்கடலை, மொச்சை, முதலிய பயறு வகைகள்: சாகுபடியாகின்றன. இவைகளில் புரதச்சத்து 20 முதல் 25 சதம் வரை உள்ளது. நம் நாட்டில் பயறு வகைகள் 228 இலட்சத்து, 45 ஆயிரம் எக்டரில் பயிரிடப்படுகிறது.

பயறு வகை உற்பத்தியை நோக்கின், 110 இலட்சம் டன் இந்தியாவிலும், 1 இலட்சத்து 80 ஆயிரம் டன் தமிழகத்திலும் கிடைக்கிறது.

நமது புரதச்சத்து தேவையின் அடிப்படையில் பார்க்கும் பொழுது ஒவ்வொருவரும் நாள் ஒன்றுக்கு 85 கிராம் பயறு வகைகள் உணவில் உட்கொள்ள வேண்டும். ஆனால், தற்பொழுது 44.6 கிராம்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இதுவே 1956ஆம் ஆண்டு 71.6 கிராம் ஆக இருந்தது.

பயறு வகை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் தருமபுரியில் பயறு வகை ஆராய்ச்சி நிலையம் தமிழக அரசால் 1943ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

—டாக்டர் ஆர்.
சேதுபதிராமலிங்கம்

# நமது வேளாண்மை முன்னேறியுள்ளதா?

உலகத்திலேயே நம் நாடு தான் மிகப் பெரிய விவசாய நாடு. மொத்த மக்கள்தொகையில் 70 சதவீதம் பேர் விவசாயம் செய்தும், நாட்டின் மொத்த வருமானத்தில் 46 சதவீதமே விவசாயத்தின் மூலம் பெறப்படுகிறது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

''உழுவார் உலகத்தார்க்கு ஆணி'' என்னும் இப்பழமொழி மூலம் பண்டைத்தமிழர் உழவனை எந்த அளவுக்கு மதித்தனர் என்பது தெரிகிறது. ஆனால், தற்பொழுது உழவனின் நிலை **'உழுவார் உலகத்தார்க்கு ஏணி'** என்பதுதான்.

வேளாண் பட்டதாரிகளும், விஞ்ஞானிகளும் வயலில் இறங்கி வேலை செய்வதற்குத் தயங்கிக் கொண்டு பொருள் ஈட்டுவதற்காக நகரத்திற்குச் சென்று விடுகின்றனர்.

வேலைப் பளுவைக் குறைப்பதற்காக டிராக்டர், அறுவடை செய்யும் இயந்திரம் போன்றவற்றைக் கண்டுபிடித்துள்ளனர். ஆனால், இதை அனைவரும் பயன்படுத்த முடிவதில்லை. காரணம், பெரும்பாலோர் சிறு விவசாயிகள்.

வீரியரகம், ஒட்டு ரகம் என்றும், இது அதிக மகசூலைத் தரவல்லது என்றும் புதிய ரகங்களை வெளியிடுகின்றனர், ஆனால், இவைகள் எதிர்பார்த்த பயனைப் பெறுவதில்லை. காரணம், அதன் விலை மிகவும் அளவுக்கு அதிகமாக உள்ளது.

ஒரு விவசாயக் குடும்பத்தில் குழந்தை முதல் வயோதிகர் வரை அனைவருமே இரவு பகல், விடுமுறை என்று பாராமல் அனைத்து நேரத்திலும் கடுமையாக உழைக்கின்றனர். இப்படி உழைத்தாலும் வயிறாரக் கஞ்சி குடிக்கும் அளவுக்குக் கூட வருமானம் கிடைப்பதில்லை.

நீர்ப்பாசனத்தைப் பார்த்தோமானால், சாகுபடி முழுமைக்கும் நிரந்தரமாக நீர் கிடைக்கும் நிலை இல்லை. தேவையான காலத்தில் மழையும் பெய்வதில்லை. அணைக்கட்டு நீரையும் காலந்தாழ்த்தி திறந்து விடுகின்றனர். இதனால் மகசூல் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

**ஏ. வெங்கட்டராமன்,**
**வேளாண்மை மாணவர்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.**

இரசாயன உரம், பூச்சிக் கொல்லி மருந்து இவைகளில் விலைகளைப் பார்க்கும்போது அவை ஆனை விலை, குதிரை விலையாக உள்ளது. விவசாயிகள் வாங்கும் பொருட்களில் விலை ஏறிக் கொண்டே போகிறது. ஆனால், விற்கும் பொருட்களின் விலை அப்படியே உள்ளது. **'மேலும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல'** விவசாயக் கூலியும் அதிகமாகிக் கொண்டே வருகிறது.

சர்க்கரை விலை ஒரு மூட்டை ரூ. 300க்கு விற்ற போதும், ரூ. 1300க்கு விற்ற போதும் விவசாயிக்கு ஒரு டன் கரும்புக்கு ரூ. 175தான் கொடுக்கின்றனர். இதனால் ஆலை முதலாளிதான் கொள்ளை இலாபம் சம்பாதிக்கிறார். உழைத்தவனுக்குக் கிடைப்பதில்லை.

காய்கறி பயிரிட்டால், அதை விற்பதற்காக எடுத்துச் செல்ல போதிய போக்குவரத்து வசதியில்லை. மேலும், வியாபாரிகள் பாதி விலைக்குக் கேட்கிறார்கள். வேறு வழியில்லாமல் விவசாயி அவர்கள் கேட்ட விலைக்கே கொடுக்க வேண்டிய நிலைமை உள்ளது. இது **'சுண்டைக்காய் கால்பணம் சுமைக் கூலி முக்கால் பணம்'** என்பது போல் தான்.

விவசாயிகள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காக பட்டுப்புழு வளர்த்தல், கோழிப்பண்ணை, பால் பண்ணை போன்ற துணைத் தொழில்களைச் செய்யும்படி சிபாரிசு செய்யப்படுகிறது. ஆனால், அத்தொழிலிலும் இலாபம் கிடைப்பதில்லை. பட்டுப் புழுக் கூடுகளை விற்க வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளது. கோழித் தீவனத்தின் விலை ஏறுகிறது. முட்டையின் விலை இறங்குகிறது. மாட்டுத் தீவனத்தின் விலையுடன் ஒப்பிடும் பொழுது பாலின் விலை கட்டுபடியாவதில்லை. முதலிலேயே கடனாளியாக உள்ள விவசாயியைத் துணைத் தொழிலுக்குக் கடன் கொடுத்து மேலும் கடனாளியாக்குகின்றனர்.

உழவர் குடும்பத்து இளைஞர்களுக்குக் கல்வியறிவு போதாமையால், வேளாண்மைத் துறையில் புதிய கண்டுபிடிப்புகள் எதிர்பார்த்த பலனை அடைவதில்லை.

**இதுவரை விவசாயம் முன்னேற்றமடையாமைக்கான சில காரணங்களைப் பார்த்தோம். இனி அவற்றைப்போக்கும் சில வழிமுறைகளைப் பார்ப்போம்:**

1. உழவர் குடும்பத்து இளைஞர்களுக்குக் கல்வியறிவைப் புகுத்த வேண்டும்.

2. வேளாண் பட்டதாரிகள் வயலுக்கே சென்று செயல் விளக்கம் செய்து காண்பிக்க வேண்டும்.

3. புதிய கண்டுபிடிப்புகள் அனைத்தும் சிறு விவசாயிகளும் பயன்படுத்தும் வகையில் இருக்க வேண்டும்.

4. தேவையானபொழுது அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும்.

5. நீர்ப்பாசனத்துக்கு மின்சாரம் இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் கொடுக்க வேண்டும்.

6. உரம், பூச்சிக்கொல்லி மருந்து, ஒட்டுரக விதைகள், விவசாயக் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவைகளைக் குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

7. கிராமத்துக்கொரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் இருக்க வேண்டும். மேலும் விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்குமளவுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

8. சிபாரிசு செய்யப்படும் துணைத் தொழில்களில் இலாபம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

9. வேளாண் பல்கலைக்கழகங்கள் இன்னும் அதிக மகசூல் தரும் இரகங்களைக் கண்டு பிடித்து வெளியிடவேண்டும்.

10. இன்னும் குறுகியகால இரகங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

11. கூட்டுப் பண்ணை விவசாய முறை கொண்டு வர வேண்டும்.

12. பயிர் இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வர வேண்டும்.

# சமவெளிப் பகுதியில்

# தைல மரச் சாகுபடி

எஸ். ரத்தினம்,
இணைப் பேராசிரியர்
வனத்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.

**தை**லமரம் என்றவுடன் நீலகிரி கொடைக்கானல் மலைகளில் வளர்ந்திருக்கும் பெரிய பெரிய மரங்களும், நீலகிரித் தைலமும் தான் நமது கண்முன் வருகின்றன.

நீலகிரித் தைலத்தைப் பற்றி அறியாதவர்கள் யாருமே இருக்க மாட்டோம். மலைப்பகுதியில் வளரும் இத்தைல மரம் சமவெளி யில் வளருமா என்று ஒரு சிலர் ஐயப்படலாம். ஆனால், நீலகிரி மலை இன வகை அல்லாத மற்ற சில இனங்கள் சமவெளியில், பல சூழ்நிலையிலும், பயிரிடப்பட்டு வருவதை அநேகர் அறியாமல் இருக்கின்றனர். தமிழ்நாட்டில் சுமார் 40,000 ஏக்கரில் தைல மரத் தோப்புக்கள் தற்சமயம் உள்ளன. தைலமரம், நமக்குத் தைலம் அளிப்பதோடு மட்டுமல் லாமல், காகிதம் விஸ்கோஸ் என்ற செயற்கைப் பட்டு தயா ரிக்க, முக்கிய மூலப் பொருளாக இருக்கிறது. இவ்வகையில், இம் மரத்தின் முக்கியத்துவம் தற் காலத்தில் மிகவும் அதிகரித்து உள்ளது.

**தைல மர இரகங்கள் :**

தைலமர இனவகைகளில் 'களா புலஸ்' என்ற இனவகை அநேக வருடங்களுக்கு முன்பு நீலகிரி யிலும், கொடைக்கானலிலும், அதிகமாக நடப்பட்டு இன்று மிகவும் பெரிய மரங்களடங்கிய தோப்புகளாக இருப்பதைப் பார்க்கலாம். அதோடு கிரேண் டிஸ், சிட்ரியடோரா என்ற இனங்களும் பயிரிடப்பட்டு இன்று தோப்புகளாக இருப்பதைக் காணலாம். இவ்வின வகைகள் சமவெளிப்பகுதியில் நன்கு வளர ஏற்ற இனங்கள். யூகலிப்டஸ் டெரிடிகார்னிஸ் என்று தற் போது பயிரிடப்பட்டு வரும் ஹைபிரிட்டு வகை சுமார் 20, 26 ஆண்டுகளுக்கு முன்டு, சமவெளிப் பகுதிகளில் சாகுபடி செய்ய ஏற்ற இனவகை என்று அறிந்து, மைசூர் மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டிற்குக் கொண்டு வரப்பட் டது. சாதாரணமாக, 2 மீட்ட ருக்கு 2 மீட்டர் இடைவெளி விட்டு மரங்கள் சாகுபடி செய்யப் படுகின்றன. ஏறக்குறைய 8 முதல் 10 ஆண்டுகளுக்குள் ஒரு எக்டேர் தோப்பில் சராசரி 40 டன் எடை உள்ள மரங்கள் கிடைக்கின்றன

**தைல மரம் ஒரு மூலப் பொருள் :**

மரத்தை, மரக்கூழாக, மாற்றி காகிதம், செயற்கைப் பட்டு ஆகி யவை தயாரிக்கப்படுகின்றன. மக்கள் பெருக்கம் அதிகம் ஆக, ஆக, நமது நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் காகிதம், பட்டுநூல் இவைகளின் தேவை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வரு கிறது. மூங்கிலிலிருந்து காகிதம் தயாரித்து வந்தோம். மூங்கில் காடுகள் தொடர்ந்து வெட்டப் பட்டதால், ஆலைகளுக்கு, மூலப் பொருள் தேவை அதிகரித்துக் கொண்டே போனது. ஆகவே, தைல மரத்தை வெட்டி, காகிதம், பட்டுநூல் ஆகிய உற்பத்திப் பொருள்கள் தயாரிக்கத் தைல மரம் எல்லாத் தகுதிகளும் உடைய தாய் இருந்ததால் அதுவே, தற் சமயம் ஆலைகளுக்கு மூலப் பொருளாகப் பெருமளவில் உப யோகப்படுத்தப்படுகிறது.

செயற்கைப் பட்டு நூல் தயா ரிக்க ஏற்றது கிரேண்டிஸ் என்ற தைலமரம். உற்பத்திப் பொருள் களின் தேவை ஆண்டாண்டுக்கு அதிகரித்துக்கொண்டேபோகிறது. அதற்கு ஈடாக, தைலமரத் தோப்புகள் பெருமளவில் தொடர்ந்து பயிரிடப்படவில்லை. அந்த அளவு போதிய நிலமும் நம் நாட்டில் கிடையாது.தோப்பு களின் மகசூலைப் பார்த்தால் தற்சமயத்தில், இருக்கும், மரங் களின் உற்பத்தித் திறன் மிகவும் குறைவு.

ஒரு பக்கம் மூலப் பொருளின் தேவை அதிகரித்துக் கொண்டே போகிறது. மறுபக்கம் பயிரிடப் பட்ட நில அளவு குறைந்து கொண்டே போகிறது. எனவே, மூலப்பொருளுக்குப் பற்றாக் குறை உருவாகிறது. அடிப்படை மூலப்பொருள் குறையுமானால், ஆலைகள் மூடப்பட்டு, நமக்குத் தேவையான காகிதம், பட்டுநூல் ஆகியவைகளுக்கு வெளிநாட் டாரை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். அது மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான ஆட்களை வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படலாம்.

**தைலம் வளர்க்கத் தகுந்த திட்டம்:**

தற்சமயம் காகிதத்தின் தேவை சுமார் 50 ஆயிரம் டன் என்றும், உற்பத்தி சுமார் 45 ஆயிரம் டன் என்றும் மதிப்பிடப்பட்டுஉள்ளது. மேலும், வருகிற 8,10 ஆண்டு களில் நம் தேவை மும்மடங்கில் பெருகிவிடும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. நல்ல காகிதமும், பட்டுநூலும் தயாரிக்க ஆலைகள் மட்டும் இருந்தால் போதாது. ஏற்கெனவே இருக்கும் தைல மரத் தோப்புகள் ஆலைகளின் தேவையைப் பூர்த்தி செய்ய ஒவ் வொரு ஆண்டும் தொடர்ந்து வெட்டப்படுகிறது. இந்நிலை



நீடிக்குமானால், எதிர்காலத்தில் ஆலைகளுக்கு வேண்டிய மரங்கள் கிடைக்காமல் உற்பத்திப்பொருள் களின் தயாரிப்பு பெருமளவில் பாதிக்கப்படலாம்.

இந்தச் சூழ்நிலை, மர உற் பத்தியைப் பெருக்கத் தகுந்த தொரு திட்டத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலி யுறுத்துகிறது. பற்றாக்குறை சூழ்நிலை ஏற்படக்கூடாது என்ற விழிப்புணர்வு, வேளாண் குடி மக்கள் மத்தியில் மட்டுமின்றி, அரசு நிர்வாக அதிகாரிகள், மற்றும் நாட்டின் நலனில் அக் கறையுள்ள ஒவ்வொருவர் மனத் திலும் ஏற்பட வேண்டும். ஏற் கெனவே, பயிரிடப்பட்டிருக்கும் தோப்புகளில் 8 ஆண்டு மர வளர்ச்சியில் மிகவும் குறைந்த அளவாகிய சராசரி 40 டன் மரம் மட்டுமே ஒரு எக்டரில் கிடைக்கிறது. சாதாரணமாகப் பின்பற்றப்படும் அடிப்படைச் சாகுபடி முறைகளைக்கையாண்டு இந்த மகசூலை 80 டன்களாக உயர்த்த முடியும்.

இதைப் பற்றிய ஆராய்ச்சி, தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகத்தில் வனவியல் துறையில் கடந்த 3 ஆண்டுகளா கப் பலதுறை வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்பட்டது. இந்தியாவிலேயே, முதன் முறை யாக 4 வல்லுநர்களைக்கொண்டு தைலமர உற்பத்தித் திறனை அதிகரிக்க ஆய்வு நடத்துவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகம் முன்னணியில் உள்ளது. தைல மர உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வாய்ப் பினைப் பற்றி ஆய்வது இக்குழு வின் முக்கியப் பணியாகும். தற் சமயம் கிடைக்கும் குறைந்த மக சூலுக்குக் காரணம் என்னவென் றும், எந்த வகையில் இதை அதி கரிக்கலாம் என்றும் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. உடனே இதற்கு ஒரு தீர்வு கண்டுபிடித்து இனிமேல் நடப்படும் தோப்பு களின் மகசூலை அதிகரிக்கக்கூடிய முயற்சி எடுக்கப்படும்.

### மர வளர்ச்சியும் மகசூலும்

தைலமரச் செடி நட்டு, 8, 10 ஆண்டுகள் வளர்ச்சிக்குப் பிறகு, தரையிலிருந்து அரையடி கட்டை விட்டு மரம் வெட்டப்படுகிறது. கட்டையிலிருந்து குத்துக்குத்தாக தளிர் புறப்பட்டு வளர்ச்சி யடைந்து, இரண்டு ஆண்டுகளில் சுமார் 2 முதல் 4 மரங்கள் இரண் டாவது பயிராக அதாவது, முதல் மறுதாம்புத் தோப்புகாக வளர்ந்து, ஏறக்குறைய 4, 5 ஆண்டுகளில் முதற் பயிரின் மக சூலை விட அதிகமாகக் கொடுக் கிறது. அதேபோல இரண்டாவது மறுதாம்புப் பயிரிலிருந்தும் 4, 5 ஆண்டுகளில் முதல் மறுதாம்பு மரத்தோப்பின் மகசூலைப் பெற முடிகிறது.

### உயர் இரக உற்பத்தி முயற்சிகள்

தமிழ்நாட்டில், தற்சமயம் 40,000 ஏக்கரிலுள்ள தைலமரத் தோப்புகளின் வளர்ச்சி கடந்த 3 ஆண்டுகளில் கணக்கிடப்பட்டு, மர வளர்ச்சிக்கான சிறந்த மரங்களைக் கொண்ட 6 தோப்புகள் தேர்ந்தெடுக்கப்பட் டன. இவைகளில் 267 மரங்கள், இன உற்பத்திக்குத் தேவையான சிறந்த குணங்களடங்கிய, ஆதா ரப் பெருக்கு மரங்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டன. இவற்றில், ஒவ்வொரு மரத்திலிருந்தும் விதையைச் சேகரித்து, அதன் முளைப்புத் திறன், நாற்றுவளர்ச் சித் திறன் ஆகியவை குறித்து ஆய்வு செய்யப்பட்டு, நாற்றங் காலில் வலுவுள்ள வளர்ச்சித் திறன் அமைந்த நாற்றுகள் உற் பத்தி செய்யும்முறை கண்டுபிடிக் கப்பட்டது. இந்தத் தோப்புகளி லிருந்து 119 மரங்களின் மகசூல் திறனைப்பற்றிய 17 சோதனைகள் தமிழ்நாட்டிலுள்ள 5 மாவட்டங்களில் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

கதிரியக்கம், இரசாயனம் ஆகியவற்றை விதைகளுக்குக் கொடுத்து, சடுதி மாற்றம் ஏற் படுத்தி மர இனத்தில் குணமாற் றங்களைச் செயற்கை முறையில் உருவாக்கியுள்ளோம். அவற்றின் மகசூலை, உற்பத்தித் திறனை அறிய 3 விதமான பரிசோத னைகள் மேட்டுப்பாளையத்தி லுள்ள வனவியல்ஆராய்ச்சி நிலை யத்தில் செய்யப்படுகின்றன. இனக்கலப்பு வீரியத்தின் மூலம், மகசூலை அதிகரிக்க வெவ்வேறு மர இன வகைகளையும், கலப்பு சேர்த்து கலப்பினம் உருவாக்கப் பட்டது. கட்டுப்படுத்தப்பட்ட மகரந்தச் சேர்க்கையின் மூலம், ஒரே சீரான பொறுக்கு மரங் களை உருவாக்கும் ஆய்வு, நடை முறையில் உள்ளது. மேட்டுப் பாளையம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் விதைக்க வேண்டிய பொறுக்கு விதை மரத் தோப்புகளும் இனவகைத் தோப்புகளும் நிறுவப்பட்டு உள் ளன.

தமிழகத்தில் நான்கு இடங் களில் தைல மரங்களின் மகசூல் திறன் கணித அளவு முறை ஆய் வால் உறுதி செய்யப்பட்டது. நாற்றுக்களின் வளர்ச்சிக்கும் தோப்புகளில் அவைகளின் மர வளர்ச்சிக்கும் உள்ள தொடர் பினைப்பற்றி பரிசோதனை செய் யப்பட்டு வருகிறது. திருச்சி மாவட்டத்திலுள்ள இராஜேந் திரத்திற்கு அருகில் காவேரிக் கரையிலும், கோவை மாவட்டத் தில் பொள்ளாச்சிக்கு அருகி லுள்ள சேத்துமடை, ஆயிரங் கால் ஆகிய இடங்களில் உள்ள தைலமரத்தோப்புகளிலும், புதுக் கோட்டை மாவட்டத்திலுள்ள செங்கரை அருகிலுள்ள தோப்பு களிலும் மறுதாம்புவளர்ச்சியைப் பற்றி கணிதமுறை அளவுப்படி ஆய்வுசெய்யப்படுகிறது. மேட்டுப் பாளையத்தில் உள்ள வனவியல் ஆராய்ச்சி நிலையத்தில் தழைச் சத்து, மரவளர்ச்சியை ஊக்கு விப்பதைப் பற்றிய ஆராய்ச்சி நடத்தப்படுகிறது.

சிறந்த மரங்களிலிருந்து ஒரே வகை நாற்றுகளை அதிக அளவில் பெற ஒற்றைக்கணுத் துண்டு களைக் கொண்டு புதியப் பெருக் கம் செய்வது சிறந்தது. ஒற்றைக் கணுத் துண்டுகளில் வேர்கள் பெருமளவில் தோன்ற இண் டோல் அசிட்டிக் ஆசிட் போன்ற ஊட்டச்சத்துக்கள் 50 பி.பி.எம். கரைசல் அளிப்பது நல்லது. 5 மாத நாற்றுகளும், 3 ஆண்டு மரங்களும் பதிய பெருக்கு முறைக்கு உகந்தவை. நாற்றுக்கள் நன்கு வளரவும், அவர் பெரு மளவில் வலுவாக இருக்கவும், நாற்றங்கால் அமைக்கவும் மலை களில் இருக்கும் சோலைமண்ணே சிறந்தது.

ஏற்கெனவே கூறியது போல உயர்ரக உற்பத்திப்பணி துவக்கப் பட்டு மூன்று ஆண்டுகள் ஆகின் றன. இன்னும் சில ஆண்டுகளுக் குள், ஒரு சிறந்த உயர்ரக விதையை உருவாக்கும் முயற்சி யில் வெற்றியடைவோம் என்ப தில் உறுதி உண்டு.

### சாகுபடியாளர்களுக்கோர் நற்செய்தி

உடனடியாக நிலங்களில் மரம் வளர்க்க விரும்புவோர் எங்களி டத்தில் நாற்றுக்களைப் பெற்றுக் கொள்ளலாம். சிறு தோப்பாக பயிர் செய்ய 2மீட்டருக்கு இடை வெளியில் நாற்று வைத்து வேர் பிடிக்கும் வரையில் தண்ணீர் விட்டு பிறகு வேர் நன்றாக ஊன் றிய பின் முதல் ஆண்டில் செடி காய்ந்து போகாவண்ணம் அவ் வப்போது நிலத்தின் தரத்திற்குத் தகுந்தாற்போல் தண்ணீர் விடு வது நல்லது. பிறகு மற்ற மரங் களைப் போல, தைலமரம், அவ் வப்போது, வரும் பருவ மழை யில் வளர்ந்து 8 ஆண்டுகளுக்குள் வெட்டப்படும் பருவத்தை அடை கிறது.

சாகுபடிக்கான மற்ற விவரங் களைக் கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் வனவியல் துறைக்கு வருகை செய்தோ அல்லது தபால் மூலமோ பெற்றுப் பயனடை யும்படி அழைக்கிறோம்.



# பாரதியும் வேளாண்மையும்

'நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராது இருத்தல்' எனத் தனது வாழ்க்கைப் பணிகளை வரையறுத்துக் கொண்டவர் பாரதி. அதற்குக் காரணமும் உண்டு. அவர் வாழ்ந்த காலத்தில் தாழ்வுற்று வறுமை மிஞ்சிவிடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்ற' இந்தப் பாரத தேசத்தின் துயரம் மிகுந்த காட்சி, பாரதியைப் பெரிதும் பாதித்தது. அதனால், தன் சொந்தத் துன்பங்களையும் மறந்து, நாட்டின் துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்று நாடு விடுதலை பெறவும் நாட்டு மக்களின் அறியாமை நீங்கவும் கவிதைத் தொண்டாற்றினார்.

அவரது கவிதைகளில் உயிராக இழையோடிக் கொண்டிருப்பது விடுதலை உணர்வு தான் என்றாலும், மக்கள் வளம்பெற எல்லாத் துறைகளையும் பாடினார். அதனை எல்லாருக்கும் பயன்படும்படியும் பாடினார்.

**இயற்கை வளம் :**

நமது நாட்டின் இயற்கை வளங்களையும், பெருமைகளையும், பாடும் வகையில், முன்னர் நாடு திகழ்ந்த பெருமையையும் இன்று நாடு இருக்கின்ற நிலையையும் மக்களுக்கு உணர்த்தி இனிச் செய்ய வேண்டியது என்ன என்பதையும் ஒவ்வொரு பாடலிலும் குறிப்புப் பொருளாக வைத்துப் பாடினார்.

இந்திய மண்ணின் மலை வளமும், ஆற்று வளமும், கால்நடை வளமும் அளவிடற்கரியன. அவ்வியற்கை வளங்களைக் கொண்டு, மக்கள் விளைவிக்கும் பயிர் வளமும், பிற காய்கனி வளமும் நிறைந்த செல்வத்தை (தேட்டம்) ஈட்டித்தரும் நாடு நம்நாடு, என்பதை நினைவூட்டிப் பாடுகின்றார் பாரதி. இது பண்டைய பெருமைதான்.

ஆற்றினிலே சுனை ஊற்றினிலே-
தென்றல்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பயன் ஈந்திடும் காலி
இனத்தினிலே உயர்நாடு.

தோட்டத்திலே மரக்கூட்டத்திலே-கனி
ஈட்டத்திலே பயிர் ஊட்டத்திலே
தேட்டத்திலே அடங்காத நிதியின்
தெளிவினிலே உயர்நாடு.

எனப் பழம்பெருமை பேசுவதால் பயன் என்ன என்ற கேள்வி எழுவது இயல்பே. பழைய நிலை நம்முடைய உண்மையான தன்மையை உணர்த்துவதோடு வருங்காலத்தில் நாம் ஆற்ற வேண்டிய பணியினையும் நினைவூட்டுவதாக அமைய வேண்டும் என்ற நோக்கிலேயே இதனைப் பாடியுள்ளார்.

இத்தனை வளத்தை நாம் பெற்றிருந்தும் 'கஞ்சி குடிப்பதற்கிலார்-அதன் காரணங்கள் இவை எனும் அறிவுமிலார், பஞ்சமோ பஞ்சமென்றே, நிதம் பரிதவித்து உயிர் துடிதுடித்துத் துஞ்சி மடிகின்றாரே, இவர் துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே'' என்று வேதனையுற்றுப் பாடுகின்றார். மக்கள் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், வாயிருந்தும் ஊமையராய் வாழ்கின்ற நிலைக்கு வருந்துகின்றார். அவர் வருத்தம் சீற்றமாகப் பொங்கி எழுகின்றது. ஆவேசமுற்றுப் பாடுகின்றார்.

இனி ஒரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
சகத்தினை அழித்திடுவோம்.

எனும் பாடல், உறங்கிக் கிடக்கும் நெஞ்சங்களையும் விழிப்புற்று வீறுகொள்ளச் செய்கின்றது. அவரது குறிக்கோளை நிறைவாக்க நம்மால் ஆனது என்ன என்பதை இன்றைய சமுதாயம் சிந்திக்க—செயல்பட இம்மொழிகள் தூண்டுகோலாய் உள்ளன.

**பல்வகைத் தொழில்கள் :**

எல்லாரும் எல்லா இடங்களிலும் உழவுத் தொழிலையே மேற்கொள்ள முடியாது. எனினும், இருக்கின்ற இயற்கை வளங்களைப் பயன்படுத்தி வளம் சேர்ப்பது நாட்டு மக்களின் கடமை என்பதை உணர்த்துகின்றார். கங்கைச் சமவெளியில் கோதுமைதான் விளையுமென்றால் கோதுமை விளைவியுங்கள்; காவிரிக் கரையில் நெல்லும் கரும்பும் எனின் அதனைப் பயிரிடுங்கள்; கடற்கரைப் பகுதிகளில் மீன் வளருங்கள் . கால்நடைகளுக்கு ஏற்ற இடமெனில் பால்வளம் பெருக்குங்கள், யாருக்கு எது தேவையோ, அவற்றைப் பண்டமாற்றாக ஏற்றுக்கொள்வோம் என உழைப்புக்கும், நாட்டின் ஒற்றுமைக்கும் வழி வகுக்கின்றார்.

இல. செ. கந்தசாமி

'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்.
உலகத் தொழிலனைத்தும் உவந்து
செய்வோம்'

என எந்நாளும் எந்நாட்டு மக்களுக்கும் ஏற்ற தொரு கருத்தை எடுத்து இயம்புகின்றார்.

**மேழி போற்று :**

இக்கருத்துக்கள் இளம் உள்ளங்களிலும் ஊறவேண்டும் என்பதற்காக, அவர் செய்த புதிய ஆத்திசூடியில் பல்வேறு கருத்துக்களோடு

'பூமி இகழ்ந்திடேல்'

'மேழி போற்று'

'விதையினைத் தெரிந்திடு'

என வேளாண்மையின் இன்றியமையா மையை வற்புறுத்தி உரைக்கின்றார். கால் நடைகள் நாட்டின் பெருஞ்செல்வம். வேளாண் மையில் பெரும்பங்கு வருவாயை ஈட்டித் தருவது கால்நடைகளே. அவைகளைப் பேண வேண்டும் என்பதை, இளம் உள்ளங்களில் விளையாட்டாக விதைக்கின்றார்.

பாலைப் பொழிந்துதரும், பாப்பா—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
..................................................
வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா

என்பது குழந்தையை நோக்கிப் பாடும் நலஞ் சான்ற பாடலாகும். கால்நடைகள் நம்மை அண்டிப் பிழைத்த காலம் மாறி, இன்று மக்கள் கால்நடைகளை அண்டிப் பிழைக்கும் காலம் வந்துள்ளது என்பது இன்றைய உண் மையான நிலையாகும்.

ஒரு நாடு வளம்பெற வேண்டுமானால், உழவையும் தொழிலையும் இரு கண்களாகக் கருதி, இரண்டின் வளர்ச்சியிலும் நாட்டம் செலுத்த வேண்டும். இன்றேல் நாடு முழுமை யான வளர்ச்சியினைப் பெறாது என்பதையும் வளர்ச்சி நோக்கிப் பாடுவதோடு தீமைகளை எதிர்த்துப் போராடி அதனைப் போக்குவதும் ஒருவகையான வளர்ச்சிதான் என்பதையும் அவர் நமக்கு அறிவுறுத்தத் தவறவில்லை.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை
செய்வோம் - வீணில்
உண்டுகளித்து இருப்போரை நிந்தனை
செய்வோம்.
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்—
வெறும்
வீணருக்கு உழைத்து உடலும் ஓயமாட்டோம்

என்பது அவரது வீரமொழிகளாகும்.

இத்தகைய கருத்துக்களின் சிறப்பை, அறிஞர்கள் பகுத்து, ஆய்ந்து, கவிநயம் பாராட்டிக் கொண்டிருப்பதில் யாதொரு பயனுமில்லை. இந்நாட்டினை வழி நடத்திச் செல்கின்றவர்கள் இவற்றைச் செயலாக்குவ தில் முனைய வேண்டும். 'இனி ஒரு விதி செய்வோம் அதை எந்த நாளும் காப்போம்' என்பதை இன்றைய நிலையில், 'இனி நல்ல செயல் செய்வோம். அதை எந்த நாளும் தொடர்ந்து செய்வோம்' என்ற நிலை வர வேண்டும்; அந்நிலை வளரவும் வேண்டும்.

## வறட்சி நிவாரணப் பணிகள் — ஓர் ஆய்வு

20.7.81 வரை வறட்சி நிவாரணப் பணிகளுக் கென ரூ. 23.40 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கு திட்டத்தைப் பொறுத்தவரை அதற்கென ஒதுக்கப்பட்ட ரூ. 11.62 கோடியிலி ருந்து இதுவரை ரூ. 8.37 கோடி செலவழிக்கப் பட்டுள்ளது. 4675 ஆழ் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டன. நீர்ப்பாசனப் பணிகளைப் பொறுத்தவரை ரூ. 7.2 கோடி செலவழிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக 2673 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, ஏறத்தாழ 12,000 நீர்ப் பாசனப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின் றன.

சாலை வசதி மற்றும் ஊரகப் பணிகளுக்கென ரூ. 2.55 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. துவக் கப்பட்ட 5636 பணிகளில் 1564 பணிகள் தற்போது முடிவுற்றுள்ளன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்குச் சொந்த மான கால்நடைகளுக்கான தீவனத்திற்காக 2300 டன் வைக்கோல், கால்நடை வளர்ப்புத்துறையின ரால் அப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 3340 டன் கூடுதல் வைக்கோலை கொள்முதல் செய்து வழங்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது. போக்குவரத்து செலவு மற்றும் சுமைகூலி போன்றவற்றை அரசே ஏற்றுக் கொண்டு கால்நடைத் தீவனத்தையும் வழங்கு கிறது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கும் கர்ப்பம் தரித்த பெண்களுக்கும் ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்க 3000 நிலையங்களைத் துவக்க அரசு ஆணையிட்டுள் ளது. இதில் 2067 நிலையங்கள் திறக்கப்பட்டு விட்டன. இத் திட்டத்திற்காக அரசு ரூ. 2 கோடி ஒதுக்கியுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள முதியோர், ஓய்வூதியம் பெறு வோர், கைம்பெண், உடல் ஊனமுற்றோர் ஓய் வூதியம் பெறுவோர்க்கு மாதமொன்றுக்கு 4 கிலோ கூடுதல் அரிசியை 1981 செப்டம்பர் வரை வழங்க சிறப்பு நடவடிக்கையாக அரசு ஆணை யிட்டுள்ளது.

பெரும்பாலான மாவட்டங்களில் வறட்சி நிலைமை தொடர்ந்து நீடிப்பதால் அப்பகுதிகளில் பல்வேறு விதமான வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு செயற்படுத்துமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்களை அரசு கேட்டுக்கொண் டுள்ளது.

# மிளகாய் ஒரு பணப் பயிர்



**மா. இளங்கோவன்**
இணை ஆராய்ச்சியாளர்
அகில இந்திய ஒருங்கிணைந்த காய்கறி வளர்ச்சித் திட்டம்
கோவில்பட்டி.

தமிழ்நாட்டில் பயிர் செய்யப்படும் முக்கிய பணப்பயிர்களுள் மிளகாயும் ஒன்றாகும். இந்தியாவில் மிளகாய் உற்பத்தியிலும் சாகுபடி செய்யும் பரப்பளவிலும் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.

மிளகாய்ஏற்றுமதியினால்நமது நாட்டிற்கு ஆண்டொன்றுக்குச் சுமார் 4 முதல் 5 கோடி ரூபாய் வரை அந்நியச் செலாவணி கிடைக்கின்றது. தமிழ்நாட்டில் திருநெல்வேலி, மதுரை, திருச்சி, இராமநாதபுரம், கோவை, மாவட்டங்களில் மிளகாய் அதிக பரப்பளவில் பயிர் செய்யப்படுகின்றது. பெரும்பாலும் இறைவைப்பயிராகச் சம்பா ரகமும், மானாவாரியில் முண்டு ரகமும் பயிர் செய்யப்படுகின்றன. சம்பா ரகங்களில் கே.1, ரகத்தை தவிர கே. 2, சோ. 1, எம்.டி.யு. 1 என்ற இரகங்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளன. இவை நாட்டு இரகங்களைவிட அதிக விளைச்சல் தரக்கூடியவை. மேலும் திறனுள்ள காய்களைக் கொண்டதும், நல்ல சிவப்பு நிறமுள்ள பழங்கள் உடையதும், நாட்டு இரகங்களைக் காட்டிலும் பூச்சி நோய்கள் தாக்குதலைத் தாங்கும் தன்மையுள்ளவையுமாகும்.

மிளகாய் பயிரிட வடிகால் வசதியுள்ள இரு மண்பாங்கான செம்மண் நிலம் ஏற்றது. மானாவாரியில் வடிகால் வசதியுள்ள இரு மண்பாங்கான கரிசல் நிலத்திலும் பயிர் செய்யப்படுகிறது. அதிக அமிலத்தன்மை அல்லது காரத்தன்மை உள்ள நிலம் மிளகாய் சாகுபடிக்கு ஏற்றதல்ல.

தமிழ்நாட்டில் மிளகாய் ஐப்பசிப் பட்டம்,கோடைப் பட்டம், ஆடிப் பட்டம் ஆகிய மூன்று பருவங்களின் பயிர் செய்யப்படுகின்றது. இதனால் ஆண்டு முழுவதும்பச்சை மிளகாயும், உலர்ந்த மிளகாய் வற்றலும் கிடைக்கின்றன.

நாற்றங்கால் தயார் செய்ய நீர் தேங்காத மேட்டு நிலத்தில் நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். கூடிய மட்டும் நல்ல தண்ணீர் வசதி உள்ள இடம் ஏற்றது. ஒரு எக்டேர் நடவு செய்ய 2½ சென்ட் நிலம் போதுமானது. நாற்றங்காலை நன்றாகப் புழுதிபட உழுது பண்படுத்தி கடைசி உழவில் சுமார் 3 வண்டி மக்கிய தொழுஉரம் அல்லது கம்போஸ்ட் உரமிட வேண்டும். பின்பு ஒரு மீட்டர் அகலமும், இரண்டு மீட்டர் நீளமும் உடைய மேட்டுப் பாத்திகள் அமைக்கவேண்டும்.

ஒரு ஏக்கர் நடவிற்கு 450 முதல் 500 கிராம் விதை போதுமானது. விதைப்பதற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் செரசான் மருந்தைக் கலந்து விதைப்பதால் விதை மூலம் பரவும் பூசன நோய்களைத் தடுக்கலாம். விதைகளை மண்ணால் அலலது மக்கிய கம்போஸ்ட் உரத்தால் மூடி உடனே சிறிதளவு தண்ணீர் விடவேண்டும். விதை முளைத்த 25 நாட்கள் வரை இலேசாக நீர் பாய்ச்சி நாற்றங்காலில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். நாற்றுக்கள் 40-45 நாட்களில் நடுவதற்குத் தயாராகி விடும்.

நடவு நிலம் தயார் செய்ய நிலத்தை மூன்று அல்லது நான்கு முறை உழுது நன்கு பண்படுத்தி 45 சென்டிமீட்டர் இடைவெளியில் பார்கள் அமைக்கவேண்டும். பார்களில் நாற்றுக்கள் நடும்போது செடிக்கு செடி 30 செ. மீட்டர் இடைவெளி விடவேண்டும். பாத்திகளில் நாற்றுக்கள் நடும்போது வரிசைக்கு வரிசை 30 செ. மீ. இடைவெளியும், செடிக்குச் செடி 30 செ. மீ. இடைவெளியும் விட்டு நடவேண்டும்.

அடி உரமாக எக்டருக்கு 10 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரத்தைக் கடைசி உழவில் போட்டு உழவேண்டும். அத்துடன் எக்டருக்கு 35 கிலோ மணிச்சத்தும் (216 கிலோ சூப்பர்

பாஸ்பேட்) 35 கிலோ சாம்பல் சத்தும் (58 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஸ்) போடவேண்டும். மேலுரமாக எக்டருக்கு 70 கிலோ தழைச்சத்தை (175 கிலோ யூரியாவை) மூன்று சம பாகங்களாக நட்ட 30,60,90 வது நாட்களில் இடவேண்டும். மண் பரிசோதனை செய்து தேவைக்கு ஏற்ப உரமிடல் சாலச் சிறந்தது.

மிளகாய்ச் செடிக்கு நாற்று நட்ட மூன்றாம் நாள் உயிர் தண்ணீர் கொடுக்கவேண்டும். பின்பு நிலத்தின் தன்மைக்கு ஏற்ப 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாய்ச்ச வேண்டும்; மிளகாய் செடி பூக்கும் பருவத்தில் ஈரம் சீரான அளவு இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

மிளகாய்ப் பயிருக்குப் பின்செய் நேர்த்தியாக தேவைக்கேற்ப மூன்று அல்லது நான்கு முறைகள் களைகளை எடுக்கவேண்டும். மேலுரம்,இடும் போது செடிகளை சுற்றி நன்றாக மண் அணைத்தல் வேண்டும். இதனால் செடிகள் ஊட்டமுடன் வளர ஏதுவாகிறது.

மிளகாய்ச் செடிகளில் பூக்கள் உதிர்வதைத் தடுக்க பிளோனோபிக்ஸ் என்ற தாவர ஊக்கியைச் சுத்தநீரில் கலந்து இருமுறை தெளித்தல் வேண்டும். அதாவது முதன் முறையாக நட்ட 60வது நாளில் ஒரு மில்லி லிட்டர் மருந்தை 9 லிட்டர் நீரிலும் மறுபடியும் 90வது நாளில் ஒரு மில்லி லிட்டர் மருந்தை $4\frac{1}{2}$ லிட்டர் நீரிலும் கலந்து தெளித்தல் வேண்டும். இவ்வாறு செய்வதால் பூக்கள் உதிர்வதைத் தடுக்கப்பட்டு அதிக காய்ப்பிடிப்பதற்கு ஏதுவாகிறது.

மிளகாய்ப் பயிரை பலவிதமான பூச்சிகளும், நோய்களும் தாக்குகின்றன. உரிய நேரத்தில் பூச்சி பூசணக்கொல்லி மருந்துகளைத் தெளித்து இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

முக்கியமாக, இலைப்பேன், வெள்ளை அசுவணி, முறணை சிலந்திப் பூச்சிகள் இலைகளிலிருந்து சாற்றினை உறிஞ்சி அதிக சேதத்தை விளைவிக்கின்றன. இலைப்பேன்களையும் வெள்ளை அசுவணியையும் கட்டுப்படுத்த நுவக்ரான் $1\frac{1}{4}$ மில்லியும், நூவான் $\frac{1}{2}$ மி. லி. ஒரு லிட்டர் நீரில் கரைத்து நன்றாகக் கலந்து தெளிக்கவேண்டும். கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கும்போது ஒரு எக்டேருக்கு 50 லிட்டர் நீர் போதுமானது. முறணை சிலந்தி பூச்சிகளைக் கட்டுப்படுத்த சோலான் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி மருந்தைக் கலந்து தெளிக்கவேண்டும். பொதுவாக இலைச் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளையும் நூற்புழுக்களையும் கட்டுப்படுத்த பியூரடான் அல்லது டாசனிட் குருனை மருந்துகளை எக்டருக்கு 20 கிலோ அளவில் நாற்றங்காலில் ஒரு முறையும் நாற்று நட்டு 15, 20 நாட்களுக்குப் பின் ஒருமுறையும் உபயோகித்துக் கட்டுப்படுத்தலாம்.

காய்ப்புழுக்கள் மாலையிலும், இரவிலும் காய்களைத்துளைத்து விடுவதால் காய்கள் பச்சையாக உதிர்ந்துவிடும். காய்ப்புழுக்களின் முட்டைகளோ அல்லது புழுக்களோ தென்பட்ட உடன் மாலை நேரத்தில் டர்ஸ்பான் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 3 மில்லி வீதம் அல்லது எல்சான் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.25 மில்லி வீதம் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

நாற்றங்காலில் முக்கியமாக தூர் அழுகல் நோய் தாக்குகிறது. இதைத் தடுக்க நல்ல வடிகால் வசதியுள்ள நாற்றங்கால் அமைத்து நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், விதைகள் முளைத்து 15 நாட்களுக்குப் பின் பைட்டலோன் என்ற பூசன மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் வீதம் கலந்து செடிகளைச் சுற்றி ஊற்றியும் கட்டுப்படுத்தலாம்.

மிளகாயில் தோன்றும் நுனிக் கருகல் மற்றும் பழம் அழுகல் நோய்கள் அதிக சேதம் விளைவிக்கின்றன இவற்றைக் கட்டுப்படுத்த பைட்டலோன் ஒரு லிட்டர் நீருக்கு $2\frac{1}{2}$ கிராம் அல்லது டைத்தேன் எம். 45 ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் அல்லது பெவஸ்டின் ஒரு லிட்டர் நீருக்கு $\frac{1}{2}$ கிராம் என்ற அளவில் ஏதாவது ஒரு மருந்தைத் தெளிக்க வேண்டும்.

சாம்பல் நோய் அல்லது பழுப்பு நோயைக் கட்டுப்படுத்த நனையும் கந்தகம் 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

# 'திருநெல்வேலி அவுரி'

டாக்டர் எஸ். முத்துசாமி, எஸ். சையது
மணமூட்டும் பயிர்த் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.

நாட்டு மருத்துவத்தில் மிகவும் புகழ் பெற்றது நிலவாகை அல்லது அவுரி. இதில் இலையும், காயும் பயன்படுகிறது. இது கேசியா என்ற இனத்தைச்சேர்ந்தது. இதில் 500க்கும் மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. இவற்றில் இந்தியாவில் 20 வகைகள் உள்ளன- இதில் அழகு தரும் மரங்களும், சில மருந்து வகைகளும் அடங்கும்.

மருந்து வகையில் 'கேசியா ,அங்குஸ்டிபோலியா', 'கேசியா அக்யுடி போலியா' என இருவகை உள்ளன. 'அங்குஸ்டி போலியா' என்பது இந்தியாவில் பயிரிடப்படும் வகையாகும். 'அகுடிபோலியா' என்ற வகை ஆப்பிரிக்கா மற்றும் சூடான் பகுதிகளில் விளைகிறது. இதனை 'அலெக்சாண்டிரியன் அவுரி' என்றும் சொல்லுவர். இந்தியாவில் விளையும் அவுரிக்கு திருநெல்வேலி அவுரி அல்லது திருநெல்வேலி சென்னா அல்லது நிலவாகை என்றும் சொல்லுவர்.

நிலவாகைச் செடியின் இலையிலும், காயிலும் கிட்டத்தட்ட ஒரே விதமான மருந்து பொருள் காணப்படுகிறது. இந்த மருந்துப் பொருள் சென்னாசைடு-ஏ மற்றும் சென்னாசைடு-பி என்று கண்டறியப்பட்டுள்ளது. இவை இரண்டும் மலச்சிக்கல் நோய்க்கு நல்ல மருந்தாகும். மேலே கூறிய மருந்து பொருளின் அளவு, இலையில் காணப்படும் அளவு, காயில் காணப்படும் அளவைவிடக் குறைந்தது. இருந்த போதிலும், அதிக வீரியம் உடையது எனக் கண்டறியப்பட்டுள்ளது. நிலவாகையை முதன் முதலில் அராபியர் மருந்திற்காக உபயோகித்தனர்.

இதை உணவுப் பொருளுடன் 5 சதவீதத்தில் கலந்து, எலி நடமாட்டமுள்ள இடத்தில் வைக்கலாம். இதை நேரிடையாகவே தொடர்ந்து நான்கைந்து நாட்களுக்கு வைத்தால், எலிகள் உண்ணும். எலிகளின் உள் உறுப்புக்களில், இரத்தக்கசிவை ஏற்படுத்தி அவைகளை மெதுவாக இறக்கச் செய்யும்.

மிளகாய்ப் பயிரின் மொத்த வயது 210 முதல் 245 நாட்கள் வரை ஆகும். நாற்று நட்டு 90 நாட்களுக்குப் பிறகு பழங்கள் அறுவடைக்குத் தயாராகிவிடும். முதலில் தோனறும் காய்களைப் பச்சையாகப்பறித்து விடவேண்டும். இதனால் செடிகள் நன்றாக வளர்ந்து அதிகமாக பூக்களையும், காய்களையும் உற்பத்தி செய்ய ஏதுவாகிறது. பின்பு நன்றாக பழுத்த பழங்களை வாரம் ஒருமுறை பறிக்கலாம். இறைவைப் பயிரில் ஒரு எக்டருக்குசராசரியாக 20லிருந்து 23 குவிண்டால் மிளகாய் வற்றல் கிடைக்கும். அதிகபட்சமாக சுமார் 28 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கும்.

மிளகாயில் ஊடுபயிராக வெங்காயம், கொத்தமல்லி போன்ற குறுகிய கால பயிர்களை பயிரிடலாம். கோவில்பட்டி மிளகாய் அபிவிருத்தி திட்டத்தில் வெங்காயம் ஊடுபயிராக தனி வரிசை மிளகாயுடன் ஒரு வரிசை வெங்காயமும் இணை வரிசை மிளகாயுடன் மூன்று வரிசை வெங்காயமும் பயிரிடப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டது.

இவ்வகை சாகுபடியினால் இணைவரிசை மிளகாயோடு பயிரிடப்பட்ட நாட்டு வகை வெங்காயம் சராசரியாக எக்டர் ஒன்றுக்கு ரூ. 1280 கூடுதல் வருமானம் அளித்தது.

மிளகாய் பயிரோடு ஊடுபயிர் செய்வதால்வரிசைகளுக்கிடையே உள்ள இடம் வீணாகாமல் உபயோகப்படுத்தப்படுகிறது.

இவ்வகை ஊடுபயிர் சாகுபடி முறைகளினால் மழை குறைந்த பருவங்களில் குறுகிய காலத்தில் கணிசமாக வருமானம் கிடைப்பதுடன் நிலம், நீர் ஆகியவற்றை சிறந்ததுறையிலும் உபயோகப்படுத்தலாம்.

ஊடுபயிர் சாகுபடியினால் மிளகாயின் மகசூல் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. மேலும் வாய்க்கால் ஓரங்களில், அகத்தி, ஆமணக்கு, கொத்தவரைபோன்ற பயிர்களை பயிரிடுவதால் வருமானம் அதிகரிக்க ஏதுவாகிறது.

மிளகாய் பயிர் செய்யும்எல்லா விவசாயிகளும் மேற்கூறிய சாகுபடி முறைகளை முறையாக கடைப்பிடித்துமிளகாய் பயிரின் மகசூலை அதிகரித்து வருமானத்தைப் பெருக்கினால் நலன் பயக்கும்.

## காவலர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள்

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் அரசிதழ் பதிவில்லாக் காவலர்களுக்கு வீட்டு வசதி அளிப்பதில் 58.2 சதவீதத்தை அடைய வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில், மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஏழாவது நிதிக் குழு 1979ஆம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டு கட்குள் தமிழ்நாட்டில் 6,451 குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்காக ரூபாய் 675 இலட்சத்தை மான்யமாகக் கொடுத்துள்ளது.

ஏழாவது நிதிக்குழு ஒதுக்கீடு செய்த மான்யத்தை உபயோகப்படுத்தும் விதத்தில் மத்திய அரசு நிதி உதவியுடனும், மாநில அரசின் நிதி உதவியுடனும் பல்வேறு வீடு கட்டும் திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. கடந்த ஜூன் மாதத்தில் தமிழ்நாடு அரசு தலைமைக் காவலர்களுக்கும், காவலர்களுக்கும் சேலத்தில் 9.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 28 குடியிருப்புகளும், உதகமண்டலத்தில் ரூபாய் 59.50 இலட்சத்தில் 120 குடியிருப்புகளும் திருச்சி மாவட்டம் கொட்டப்பட்டு என்னும் இடத்தில் ரூபாய் 27.50 இலட்சம் மதிப்பீட்டில் 84 குடியிருப்புகளும், கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த 232 குடியிருப்பு இல்லங்களைக் கட்ட ஏழாவது நிதிக் குழுவின் மான்யம் ரூபாய் 15,31,200 ஆகவும் தமிழ்நாடு அரசின் பங்குத் தொகை ரூபாய் 80,88,800 ஆகவும் இருக்கும்

### அட்டையில்...

கழனியிலே நாற்று நடும் பசுமையான காட்சி.

வண்ணப்படம் உதவி :
சுற்றுலாத்துறை,
தமிழ்நாடு அரசு.

### கடைசி அட்டையில்....

தமிழ் நிலத்தின் நாகரிகத்தையும் கலையினையும், பண்பாட்டினையும் கட்டிக் காக்கும் கருவூலப் பெட்டகங்களாகத் திகழும் நமது திருக்கோயில் தேர்களில் ஒன்று.

திருவில்லிப்புத்தூர் தேர். ஆடிப்பூரம் தேர் விழாவின் போது உலாவரும் காட்சி.

வண்ணப்படம் :
ஏ. முத்துசாமி
சிவகாசி.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR



# மானாவாரி பருத்தியில் பயிர்ப் பாதுகாப்பு


**எஸ். குப்புசாமி,**
**உதவிப் பேராசிரியர்,**
**அகில இந்திய ஒருங்கிணைந்த பருத்தி வளர்ச்சித் திட்டம்,**
**கோவில்பட்டி.**


நம் நாட்டில் பருத்தி ஒரு முக்கியமான பணப்பயிர் ஆகும். திருநெல்வேலி மாவட்டத்தில் பருத்தி பெரும் அளவில் மானாவாரிப் பயிராக வடகிழக்குப் பருவமழை பெய்யும் காலத்தில் பயிர் செய்யப்படுகிறது. இப் பயிரை இளம் பருவத்திலிருந்து அறுவடைவரை பலவிதமான பூச்சிகள் தாக்குகின்றன. இதனால் விளைச்சல் பெரும் அளவில் பாதிக்கப்படுகின்றது. பயிரின் பல்வேறு பருவங்களில் பல விதப் பூச்சிகளின் தாக்குதல் காணப்படுகின்றன. உதாரணமாக:

தரைகூன்வண்டு, இளம் பயிர் பருவத்திலும், தத்துப்பூச்சி, இலைப்பேன் அசுவினி, வளர்ச்சி மற்றும் உற்பத்திப் பருவத்திலும் தாக்குகின்றன. மேலும், புரோடினியா இலைப்புழு, காவடிப்புழு பின் வளர்ச்சிப் பருவத்திலும், காய்ப்புழுக்கள்உற்பத்திப்பருவத்திலும், சிவப்புச்சிலந்திப்பூச்சிகள் பின் உற்பத்திப்படுவத்திலும், தண்டுக்கூன்வண்டு அறுவடைப் பருவத்திலும்காணப்படுகின்றன. இவற்றில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன் மற்றும் அசுவினியும் காய்ப் புழுக்களும் மிக முக்கியமானவை ஆகும். இப்பூச்சிகளால் ஏற்படும் சேதங்களைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

**தத்துப்பூச்சி :**

இதன் சேதம் இளம்பயிர்களில் விதைத்த 40 நாட்களில் வரை அதிகம் காணப்படுகிறது. இந்தப் பூச்சிகள் இலைகளின் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு சாற்றை 'உறிஞ்சி செடியின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. இதனால் இலைகளின் ஓரங்கள் சுருண்டு விடுகிறது. மேலும், இந்தப் பூச்சிக்களின் உமிழ்நீரில் உள்ள நச்சுப் பொருட்களினால் இலைகளின் ஓரங்கள் மஞ்சள் நிறமாக மாறுகின்றன. பிறகு இலைகள் சிகப்பு நிறமாக மாறி காய்ந்து உதிர்ந்து விடுகின்றன.

கோவில்பட்டியில் அகில இந்திய ஒருங்கிணைந்த பருத்தி ஆராய்சித்திட்டத்தில் நடத்திய ஆராய்ச்சியில் எஸ்.ஆர்.டி.1 பரக்யா, காண்டவா, டி.எஸ்.36, எல்.எச். 299 மற்றும் சி. 50 ஆகிய பருத்தி ரகங்கள் இதன் தாக்குதலைத் தாங்கும் சக்தி உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

**இலைப்பேன் :**

வளர்ச்சிப் பருவத்தை விட, உற்பத்திப் பருவத்தில் இவற்றின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது. இந்த பேன்களும் அவற்றின் குஞ்சுகளும் இலைகளின் அடிப்பாகத்தில் கூட்டமாக இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சுகின்றன. இதனால் இலைகளின் மீதும் மற்றும் காய்களின் மீதும் உலோக வெள்ளி அல்லது வெங்கல நிறமுள்ள புள்ளிகள் தோன்றும். கடும் தாக்குதல்கள் இலைகளைச் சுருளும்படிச் செய்கின்றன. இறுதியில் அவைகள் பழுப்பு நிறமாக மாறி உதிர்கின்றன. காயங்கள் பெரும்பாலும் இலைகளின் அடிப்புறம் முதலில் தோன்றுகின்றன. வெள்ளி நிறமான புள்ளிகளின் மீது அதிகப்படியான கருநிறமுள்ள பொட்டுக்கள் காணப்படும்.

**அசுவிணி:**

இதன் எண்ணிக்கையும் வளர்ச்சிப்பருவத்தைவிட உற்பத்தி பருவத்தில் அதிகம் காணப்படுகிறது. இந்த அசுவிணிகள் நூற்றுக்கணக்கில் கூட்டமாக இலைகளுக்கு அடியில் இருந்து கொண்டு சாற்றையுறிஞ்சி சேதத்தை உண்டாக்குகின்றன. பாதிக்கப்பட்ட செடிகளின் வளர்ச்சி குன்றி இலைகள் சுருங்கி வாடி உதிர்ந்து விடுகின்றன. இலைகளைத் தவிர இலைத் தண்டுகள், பூ மொட்டுகள் போன்றவற்றையும் இவைகள் தாக்குகின்றன. இப்பூச்சிகளின் பனித்துளி போன்ற கழிவுப் பொருள் இலைகளின் மீதும் காய்களின் மீதும் விழுந்து அவற்றின் மீது ஒருவகைக் கருமையான பூசணம் வளர ஏதுவாகிறது.

பருத்தியில் முக்கியமாக மூன்று வகைக் காய்ப்புழுக்கள் தோன்றிச் சேதம் விளைவிக்கின்றன.

**புள்ளிக்காய்ப்புழு**

இப்புழுவானது செடி முளைத்துச் சுமார் ஆறாவது வாரத்தில் செடிகளின் குருத்துக்களைத் துளைத்து அவைகள் வாடிக் காய்ந்து போகும்படி செய்யும் பூ மொட்டுகள் தோன்ற ஆரம்பித்தவுடன் இப்புழுக்கள் மலர்களையும், இளங் காய்களையும் தாக்குகின்றன. இதனால் பூ மொக்குகளும், இளங்காய்களும் பெருமளவில் உதிர்கின்றன. உதிர்ந்த காய்களில் இப்புழுக்கள் துளைத்து உட்சென்று உளளிருக்கும் விதைகளைத் தின்று நாசப்படுத்துகின்றன. காய்களில் துளை காணப்படுவதுடன் அப்புழுக்களால் வெளியேற்றப்பட்ட கழிவு பொருட்களும் காணப்படும். பூச்சியினால் தாக்கப்பட்ட காய்கள் சரியாக வளர்ச்சியடையாமலும், வெடிக்காமலும் போய்விடுகின்றன. ஒரே புழு அநேக காய்களைத் தாக்கி பெருத்த சேதம் விளைவிக்கும்.

**இளஞ்சிவப்புக் காய்ப்புழு:**

இப்புழுக்கள் காய்களைத் துளைத்து உள்ளே சென்று விதைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தின்று காய்களின் உள்ளேயே காணப்படும், தாக்கப்பட்ட காய்களிலுள்ள பஞ்சு பலமற்றக் காணப்படும். இப்புழுக்களின் சேதத்தினால் காய்கள் முதிர்வதற்குள் வெடிக்கின்றன. இதனால் பூஞ்சாளங்கள் உட்சென்று பஞ்சில் கறைகளை உண்டாக்குகின்றன. பஞ்சின் வெண்மை நிறமும் கறைபடுத்தப்பட்டு தரமும் குறைகிறது. தாக்கப்பட்ட காய்களில் உள்ள விதைகளின் முளைப்புச் சக்தி பாதிக்கப்படுகிறது. தாக்கப்பட்ட பூ மொக்குகள் மலர இதழ்கள் ஒன்றோடொன்று பின்னப்பட்டுக் காணப்படும்.

**அமெரிக்கக் காய்ப்புழு அல்லது துவரைக்காய்ப்புழு:**

இவை மேற்கூறிய இருவகை புழுக்களைக் காட்டிலும் உருவில் பெரியவை. இப்புழுக்கள் காய்களைத் துளைத்துத் தலைப்பகுதியை மட்டும் துளைக்குள் நுழைத்து உள்ளிருக்கும் பாகத்தையுண்ணும். மற்ற உடற்பகுதி முழுவதும் வெளியில் காணப்படும். இப்புழுக்கள் பெரிய துளைகளைப் பொதுவாகக் காய்களின் அடிப்பாகத்தில் உண்டாக்குகின்றன. காய்களினடியில் கழிவுப் பொருட்கள் பெருமளவில் தள்ளப்பட்டு இருக்கும் ஒரே புழு பல காய்களைத் தாக்கி நாசப்படுத்தும்.

பயிர்ப் பாதுகாப்பு கொடுக்கப் படாத பாத்திகளில் கணக்கிட்டுப் பார்த்ததில் மேற்கூறிய காய்ப் புழுக்களின் சேதம் 90 சதத்திற்கு மேல் இருந்தது. புள்ளிக் காய்ப் புழுக்களின் சேதம்தான் அதிக அளவு காணப்பட்டது. மானாவாரி பருத்தியில் விளைச்சல் மிகவும் குறைவாகவும் மழையில் அளவை பொருத்து நிச்சயமற்ற தன்மை இருப்பதால் பயிர்ப்பாதுகாப்புக்குப் பணம் அதிகம் செலவிட முடியாத நிலை நிலவுகின்றது. மேலும் தண்ணீர் ஒரு கட்டுப்பாட்டு பொருள். ஆகவே, தூள் மருந்துகளைத்தூவிதான் பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவில்பட்டி மானாவாரி பருத்தி ஆராய்ச்சி திட்டத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் கார்பரில் 10 சதம், கார்பரில் 5 சதம் எண்டோசல்பான் 4 சதம் குவினால்பாஸ் 1.5 சதம் மற்றும் பி.எச்.சி.10 சதம் தூள்களில் ஏதாவது ஒன்றை எக்டேருக்கு 1 கிலோ வீரிய மருந்து சத்து வீதத்தில் விதைத்த 40 நாட்களில் இருந்து 20 நாட்கள் இடைவெளியில் 5 முறை தூவியதில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் காய்ப்புழுக்கள் நல்ல முறையில் கட்டுப்படுத்த முடியும் என்றும் மருந்து அடிக்காத பயிரைவிட மருந்து அடிக்க பயிர் அதிக விளைச்சலைக் கொடுத்ததெனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே, மானாவாரி நிலங்களில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் தக்க தருணத்தில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து பருத்திப்பயிர் விளைச்சலைப் பெருக்கி பயனடையலாம்.

# பெருஞ்சீரகம்

**ஆர். பாலகிருஷ்ணன்**
இணைப் பேராசிரியர்,
தோட்டக் கலைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக்கழகம், கோவை

பெருஞ்சீரகம் மேற்கத்திய நாடுகளிலும், தூரக்கிழக்கு நாடுகளிலும் தொன்று தொட்டுப் பயிராகி வந்துள்ளது. ருமேனியா, தென்ரஷ்யா, செக்கோஸ்லோவேகியா, ஹங்கேரி, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, இந்தியா, அர்ஜென்டினா, ஜப்பான்போன்ற நாடுகளில் இது பயிரிடப்படுகின்றது. அமெரிக்காவில் மிகச் சமீபகாலமாகத் தான் பெருஞ்சீரகம் பயிரிடப்படுகிறது. இந் நாடுகளில் பயிராகும் பெருஞ்சீரகம் பெரும்பாலும் எண்ணெய் எடுப்பதற்கே பயன்படுகின்றது. பெருஞ்சீரகம் எண்ணெய் வணிகத் துறையில் மிகமுக்கியமானதாகும்.

பாரதத்தில் குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பெருஞ்சீரகம் சுமார் 3,500 எக்டேர் பரப்பில் பயிராகின்றது. கர்நாடகம், உத்தரப்பிரதேசம், பஞ்சாப், மத்தியப் பிரததேசம், ஆகிய மாநிலங்களில் சிறு அளவில் பயிராகின்றது. பெருஞ்சீரகம் சமையலிலும், ரொட்டி, கேக் போன்ற தின்பண்டங்களிலும், மருந்துகளிலும் பெருமளவுக்குச் சேர்க்கப்படுகின்றது. பெருஞ்சீரகம் எண்ணெய் பொருட்களுக்கு மணமூட்டப் பெரிதும் பயன்படுகின்றது.

பெருஞ்சீரகச் சாகுபடி எளிது. இது எல்லா மண் வகைகளிலும் பயிராகும். பொதுவாக நல்ல சூரியவெளிச்சமுள்ள மிதமான தட்பவெப்ப நிலையுள்ளபகுதிகள் பெருஞ்சீரகத்திற்கு மிகவும் ஏற்றவை. நல்ல வடிகால் வசதியுள்ள மணற்பாங்கான நிலங்கள் கரிசல் நிலங்கள், மணல் கலந்த நிலங்கள் ஏற்றவை. மண்ணில் சுண்ணாம்புச் சத்து கலந்திருந்தால் பெருஞ்சீரகம் நன்கு பயிராகும். அதிக அளவு மண் ஈரம் இருந்தால் விதைகள் குறைவாகவும், செடியில் வளர்ச்சி அதிகமாகவும் இருக்கும்.

பெருஞ்சீரகத்தை மானாவாரியாகவும், இறைவையிலும் பயிர் செய்யலாம். இறுதிவரை தமிழ்நாட்டின் மிதவெப்ப மலைப் பாகங்களில் மட்டுமே பெருஞ்சீரகம் பயிரிடலாம் எனக் கருதப் பட்டது. கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக, தோட்டக் கலைத்துறையில் மேற்கொண்ட சோதனைகளின் விளைவாகப் பெருஞ்சீரகத்தைக் கோவை போன்ற மிதவெப்ப நிலையுடைய சமவெளிகளிலும் இலாபகரமாகப் பயிரிடலாம் என்பது கண்டறியப்பட்டது.

ஜூன்-ஜூலை, டிசம்பர் — ஜனவரி மாதங்கள் பெருஞ்சீரகம் பயிரிடுவதற்கு ஏற்றவை. பூக்கும் பருவத்தில் மழை பெய்தால் மகசூல் பெரிதும் பாதிக்கப்படும். நிலத்தை நன்றாக உழுது புழுதியாக்கி 75 செ. மீ. 60 செ. மீ. என்ற இடைவெளியில் வரிசையாக விதைத்தால், முளைத்த பின்பு கலைத்து விடலாம். எக்டருக்கு 9 முதல் 12 கிலோ விதை தேவைப்படும்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகத் தோட்டக் கலைத்துறையில் சோதனைக்குட் படுத்தப்பட்ட 15 இரகங்களில் பி. எப். 35 என்னும் குஜராத் இரகம் அதிக மகசூல் அளிக்கவல்லது எனக் கண்டறியப்பட்டது. பத்து முதல் பதினைந்து வண்டி தொழு உரத்தைக் கடைசி உழவுக்கு முன்பாகப் பரப்பி உழுதுவிட வேண்டும். எக்டருக்கு 40 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து என்ற அளவில் இடலாம். மணிச்சத்து முழுவதையும் அடியுரமாக இடவேண்டும். தழைச்சத்தில் 20 கிலோவை விதைத்த 75 நாட்களுக்குப் பின்பும், மீதி 20 கிலோவை பூக்கும் பருவத்திலும் இடவேண்டும். இரண்டு மூன்று முறை களையெடுக்க வேண்டும். நான்கு அல்லது ஐந்து முறை கொத்தி விட வேண்டும். வளர்ந்த செடிகள் சாயாமலிருக்க மண் அணைக்க வேண்டும்.

பெருஞ்சீரகம் இறைவைப் பயிராக நல்ல மகசூல் கொடுக்கும். குளிர் காலங்களில் 20 நாட்கள் முதல் 25 நாட்களுக்கொருமுறையும் வேனிற் காலத்தில் பதினைந்து நாட்களுக்கொரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்…அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!

Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

# தமிழரசு

